கோகுலம்


GOKULAM

நவம்பர் 2001

ரூ.6/-




இவற்றில் ஒன்று மட்டும் வித்தியாசமானது- அது எது?



விடை: 4

கோணங்கள்- இரட்டைக் கோணங்கள்- முக்கோணங்கள் எத்தனை?



விடை: கோணங்கள் 5. இரட்டைக் கோணங்கள் 5. முக்கோணங்கள் 6.

டிரைவருக்கு வழி காட்டுங்கள்!





''திருப்பதியிலே உங்க பையன் காணாம போய்ட் டானா... அடையாளம் சொல் லுங்க...''

''மொட்டை அடிச்சிருப் பான்...''

''அங்கே எல்லோரும் மொட்டைதானே! மேலே ஏதா வது சொல்லுங்க...!''

''மேலே சந்தனம் தடவி யிருப்பான்!''

— மு. நியாஸ் அகமது



நம் நாட்டில் கொண்டாடப்படும் குழந்தைகள் தினம் பற்றி உங்களுக்குத் தெரியும். மற்ற நாடுகளில் எப்படி கொண்டாடுகிறார்கள் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்களேன் - **66**



பகைவர்களைப் போர் செய்து வெற்றி கொள்ளாமல் புதிய வழியில் வெற்றி கொண்ட அரசரை நீங்களும் பாருங்களேன் - **68**



ஒரு கடற்கரையில் வந்தனாவுக்கும் ஆக்டோபஸுக்கும் சுவாரசியமான உரையாடல் நடந்தது - **12**



அல்லும் பகலும் ஓயாமல் உழைக்கும் இதயத்தைப் பாதுகாப்பது எப்படி? - **36**



ஷான் பொல்லாக், லான்ஸ் குளுஸ்னர் - போஸ்டர் - **40**

நீங்கள் பாடகராக வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருக்கிறீர்களா? அப்படியென்றால் ஹரிணி கொடுக்கும் டிப்ஸ்களைப் படியுங்கள் - **76**





மலர் : 19

இதழ் : 10

நவம்பர் 2001

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.



குமரப்பட்டியின் எல்லையில் ஒரு பசுஞ் சோலை இருந்தது. அங்கு ஏராளமான மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்கின. அந்தச் ரோலையில் பிங்கி, பப்லு, கியூட்டி என்ற குரங்குகள் வசித்து வந்தன.

பிங்கிக்குக் குழந்தைகள் என்றால் விருப்பம் அதிகம். அங்கு விளையாட வரும் குழந்தைகளிடம் அன்புடனும் நட்புடனும் பழகும். எனவே குழந்தைகளுக்கும் பிங்கியை மிகவும் பிடிக்கும். குழந்தைகள் பிங்கிக்குத் தாங்கள் கொண்டு வந்த உணவுகளைப் பகிர்ந்து கொடுப்பர்.

இதைப் பார்த்து பொறாமை கொண்டன பப்லுவும் கியூட்டியும்.

அன்று பிங்கியைக் குட்டிக்கரணம் போடச் சொல்லி அன்புக் கட்டளையிட்டனர் குழந்தைகள். பிங்கியும் வேக வேகமாகக் குட்டிக்கரணம் போட்டுக் காட்டியது.

''பிங்கி! உங்கிட்ட எங்களுக்குப் பிடித்ததே இந்த வால்தான். நீ வாலை ஆட்டும்போது ரொம்ப அழகா தெரியறே'' என்றான் ஒரு சிறுவன்.

உடனே இன்னொரு சிறுமி ''பிங்கி, நாங்க வந்ததே உன்னைத் தீபாவளிக்கு எங்கள் வீடுகளுக்கு வரச் சொல்லி அழைக்கத்தான். கண்டிப்பா வரணும். நிறைய பலகாரம் தர்றோம்'' என்றாள்.

''நாங்களும் பிங்கியுடன் தீபாவளிக்கு உங்கள் வீட்டுக்கு வரலாமா?'' என்றன பப்லுவும் கியூட்டியும்.

வால் அறுந்த பிங்கியும் குட்டி தேவதையும்

''நீங்கள் வர வேண்டாம். நாங்கள் இங்கு கொண்டு வருகிற உணவு களையே நீங்க ரெண்டு பேரும் திருடிச் சாப்பிடறீங்க. எங்க நண்பர்கள் நேர்மை யாக இருக்கணும். அதனால வர வேண் டாம்'' என்றனர் குழந்தைகள்.

பப்லுவுக்கும் கியூட்டிக்கும் மிகவும் அவமானமாகிவிட்டது. பிங்கியைப் பழி



வாங்கத் துடித்தன.

மறுநாள் காலை பிங்கி ஒரு மரத்தில் அமர்ந்து பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அருகில் வந்த பப்லு திடீரென்று பிங்கியின் அழகான வாலை பிடித்துத் தொங்கியது.

இரண்டு நிமிடத்தில் பப்லுவின் எடை தாங்காமல் பிங்கியின் வால் அறுந்தது. வாலுடன் பப்லுவும் கீழே விழுந்தது.

பிங்கிக்கு தன் அழகான வால் போன தில் ஒரே வருத்தம். தீபாவளி அன்று வால் இல்லாமல் எப்படி குழந்தைகளைச் சந்திப்பது? அருகிலிருந்த கருவேல மரங்களில் இருந்து பிசின் வழிந்து கொண்டிருந்தது. உடனே பிசினை எடுத்து வாலில் தடவி ஒட்ட வைத்தது பிங்கி. ஆனால் வால் ஒட்டவில்லை.

இறுதியில் குழந்தைகளுக்குப் பிடித்த வால் இல்லாமல் தீபாவளிக்கு அவர்கள் வீடுகளுக்குச் செல்வதைவிட இந்த ஊரை விட்டே போய்விடலாம் என்று முடி வெடுத்தது பிங்கி.

பிங்கி வருத்தத்துடன் போய்க் கொண்டிருக்கும்போது கால் இடறி ஒரு புதருக்குள் விழுந்தது. புதருக்குள்

செல்லச் செல்ல அது ஒரு அழகிய சிறு நகரமாகக் காட்சியளித்தது. அங்கு நிறைய குட்டி தேவதைகள் கழுத்தில் மாலையுடன் நடனமாடிக் கொண்டிருந்தனர். பிங்கிக்கு வியப்புத் தாங்கவில்லை! ஓரத்தில் ஒரு குட்டி தேவதை மட்டும் அழுது கொண்டிருப்பதைக் கவனித்தது பிங்கி. மெதுவாக அதன் அருகில் சென்று அழுவதற்கான காரணத்தைக் கேட்டது.

''எனக்கு மட்டும் மாலை இல்லை. நான் எப்படி ஆடுவது?'' என்று கேட்டது அந்தத் தேவதை.

பிங்கி தன் வாலைக் காட்டி ''இதை மாலையாக அணிந்து நடனமாடு'' என்றது.

அந்தத் தேவதையும் வாலை மாலையாக அணிந்துகொண்டு நடனமாடி முடித்தது.

பிறகு மகிழ்ச்சியுடன் வந்து ''எனக்கு மாலை கொடுத்து தக்க சமயத்தில் உதவினாய். இந்த வால் எப்படி அறுந்தது?'' என்று கேட்டது தேவதை.

பிங்கி நடந்த கதையைக் கூறியது. உடனே தேவதை ஒரு மந்திரம் சொல்லி பிங்கியின் வாலை ஒட்ட வைத்தது. மீண்டும் வால் ஒட்டிக் கொண்டதைப் பார்த்ததும் பிங்கிக்குச் சொல்ல முடியாத ஆனந்தம்! ''பிங்கி இந்தப் பழங்களையும் எடுத்துட்டுப் போ'' என்று கூறி அன்புடன் வழி அனுப்பி வைத்தது தேவதை.

பிங்கி வாலுடன் வருவதைக் கண்ட பப்லுவுக்கும் கியூட்டிக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

''உனக்கு எப்படி வால் ஒட்டிக் கொண்டது?'' என்று பப்லுவும், கியூட்டியும் ஒரே குரலில் கேட்டன.

''நேற்று இரவு கடவுள் என் முன் தோன்றி வாலை ஒட்ட வைத்ததுடன் சாப்பிட இந்த அற்புதமான பழங்களையும் கொடுத்தார்'' என்றது பிங்கி. அடுத்த நிமிடம் பப்லுவும் கியூட்டியும் தங்கள் வால்களை அறுத்துக்கொண்டன.

''அடப்பாவிகளா! விளையாட்டுக்குச் சொன்னால் இப்படி வெட்டிக்கிட்டீங்களே!'' என்று ஆறுதல் கூறிவிட்டு தீபாவளி கொண்டாடக் கிளம்பியது பிங்கி.

— எஸ். ரேவதி,
ஒன்பதாம் வகுப்பு, அரும்பாக்கம்
மேல்நிலைப்பள்ளி, சென்னை.

அருகம்பாக்கம் மேல்நிலைப் பள்ளியில் கோகுலம் நடத்திய கதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை.

அதோ பார் தம்பி!



தாய்மொழி பயிற்சிக்கு எளிய சொற்களைக் கொண்ட பாடல்கள் உதவுகின்றன என்பது அனுபவத்தில் கண்ட கல்வி முறை.

சின்னஞ்சிறு குழந்தைகள் பெரிய நகரங்களில், தங்கள் தாய் மொழியில் மழலைப் பாடல்களைப் பாடாமல் ஆங்கிலத்தில், 'நர்ஸரி ரைம்ஸ்' கற்றுக் கொள்கிறார்கள். தாய் மொழிப்பயிற்சியின் வழியாகக் கிடைக்க வேண்டிய அவரவர் வாழும்பிரதேசத்துக் கலாசாரமும், மரபுகளும் இலக்கிய நாட்டமும் குழந்தைகளுக்குக் கிடைக்காமல்போய் விடுகின்றன. இது ஈடு செய்ய முடியாத இழப்பு.

குழந்தைப் பாடல்கள் கூட கவிதை நயத்துடனும் பாவம் பொருந்தியதாகவும் இருக்க வேண்டும். குழந்தைகள் சொற்களின் அழகையும், சொற்கள் காட்டும் சித்திரத்தையும், ஒலி நயத்தையும் ஒன்றாக உணர்ந்து அனுபவிக்கிறார்கள். "அதோ பார் தம்பி" (ஒலி நாடா) யில் பாடப்பட்டுள்ள பாடல்கள் நமது நாட்டுக்கே உரிய வர்ண மெட்டுக்களிலும், சில கர்நாடக இசை தழுவிய ராகங்களிலும் மெட்டமைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பாடியிருப்பவர்கள் வெவ்வேறு வயதுள்ளவர்கள்.

இந்த ஒலி நாடாவில் உள்ள பாடல்கள் சிறு குழந்தைகள் தாங்களே கண்டும் கேட்டும் அனுபவபூர்வமாக உணர்ந்த விஷயங்களைப் பற்றிய பாடல்கள். பாடல்களை இயற்றியவர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை மற்றும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஆகியோர்.

முன்னணி மிருதங்க வித்வான் ஸ்ரீ அருண் ப்ரகாஷ் இசை அமைத்திருக்கிறார்.


ஒலி நாடாவுடன் பாடல் புத்தகங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன.

விலை ரூ.60/- கிடைக்குமிடம் : ஹேமா ரங்கராஜன், 132, லேக் வியூ ரோடு, 2B கோரல் கிளேட், மேற்கு மாம்பலம், சென்னை - 33.

பென்னியின் சினிமா கனவு!

கதை : உன்னி

படம் :
ஷாஜி மாத்யு







கேட்ட கேள்விக்கு நன்றாக பதில் அளித்தாய்.நாங்கள் உன்னைக் கதாநாயகனாகத் தேர்வு செய்திருக்கிறோம்.
உண்மையாகவா? நன்றி சார். நீங்கள் யார்?
இந்தப் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குனரும் நான்தான்.
இப்பொழுது உன் நடிப்புத் திறமையை நாங்கள் பார்க்கணும். நீ வில்லனுடன் சண்டை போடப் போறே. அதைப் பார்த்த பிறகுதான் இறுதி முடிவு.
சண்டை நடிகர் வந்தார்.
என்னுடன் சண்டை போடப் போகுதா இந்தப் பூனை? ஒருவழி பண்ணறேன்.
இந்தா வாங்கிக்க.
ஆ... ஐயோ!
கதாநாயகன் விழுந்துட்டாரே!
உதவி... உதவி...
என்னாச்சு பொன்னி?
தேவையில்லாத லட்சியம் ஆபத்தில் முடியும் என்பதை உணர்ந்துகிட்டேன் அம்மா.

ஒவ்வொன்றும் ரூ. 500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!

நீங்கள் மிகவும் விரும்பும் இந்தப் போட்டிக்கு, உங்களுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி
20.11.2001



இந்த மாதப் போட்டி

இங்கு கொக்கு, கிளி, காகம், குருவி, வாத்து, கழுகு ஆகியவற்றின் அலகுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அலகுகளுக்குச் சொந்தமான சரியான பறவைகளைக் கண்டுபிடித்து வரிசைப்படி எழுதி அனுப்புங்கள்.

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________
6. ______________

ஆசிரியர்,
கோகுலம்,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



தீபாவளி வந்தாச்சு!

கோகுலம் சிறுவர் சங்கத்தில் சஹானா, பாபு, பிரசன்னா, சுரேஷ் ஆகியோர் அக்டோபர் கோகுலத்தைப் படித்து, விவாதித்து விட்டு அமர்ந்திருந்தனர். திடீரென்று அவர்களின் பேச்சு 'தீபாவளி'க்குத் திரும்பியது.

பாபு : நீங்க எல்லாம் தீபாவளி டிரெஸ் வாங்கியாச்சா? என் டிரெஸ் ரெடி. கறுப்பு ஜீன்ஸ், புளூ டி சர்ட்.

பிரசன்னா : என் டிரெஸும் தயார். சுரேஷுக்குத்தான் இன்னும் டிரெஸ் தச்சு வரலை. இன்னும் ரெண்டு நாளில் கிடைச்சுடும்னு சொன்னான். அப்படித் தானே சுரேஷ்?

சுரேஷ் : ஆமாம். சஹானா, நீ இன்னும் வாங்கலையா?

சஹானா : வர்ற ஞாயிற்றுக் கிழமைதான் அப்பா கடைக்குக் கூட்டிட்டுப் போறதாகச் சொன்னாங்க. ரெடிமேட் தானே. எப்ப வேணாலும் போய் வாங்கிக்கலாம்.

சுரேஷ் : என்னோட டிரெஸ் லேட்டானாலும் நான் பட்டாசெல்லாம் முதல்ல வாங்கிட்டேன் தெரியுமா?

சஹானா : அப்படியா! எவ்வளவு ரூபாய்க்கு வாங்கியிருக்கே சுரேஷ்?


சுரேஷ் : ஆயிரம் ரூபாய்க்கு முதல்

* பிரசன்னா, சுரேஷ்



* பாபு, சஹானா





கட்டமாகப் பட்டாசு வாங்கியிருக்கேன். அடுத்த வாரம் அப்பாவின் நண்பர் சிவகாசியில் இருந்து வருகிறார். அவர் ஒரு ஆயிரம் ரூபாய்க்காவது வாங்கிட்டு வருவார். மொத்தம் இரண்டாயிரம் ரூபாய் வெடிக்கு மட்டும். இந்தக் காலனியிலேயே நான் மட்டும் தான் அதிகபட்சமாக வெடிக்கணும்கிறது என்னோட ஆசை.


பிரசன்னா : இதெல்லாம் அநாவசியமான ஆசை. ரெண்டாயிரம் ரூபாய்க்கு வெடிக்கணுமா? காசெல்லாம் கரியாக்குறே.

பாபு : எனக்கும்கூட இது அதிகபட்சமாகத்தான் தெரியுதுடா சுரேஷ்.

சுரேஷ் : பிரசன்னா, பட்டாசே வெடிக்கக் கூடாதுங்கிறது உன் கொள்கை. அதுல எனக்கு உடன்பாடு கிடையாது.

பிரசன்னா : என் கொள்கையிலே என்ன தப்பு? நம்மள மாதிரி சிறுவர் சிறுமியர் எல்லாம் படிக்கிறதை விட்டுட்டு உயிரைக் கையில பிடிச்சுட்டு பட்டாசு தயாரிக்கிறாங்க. பட்டாசைப் பார்க்கும்போது எனக்கு சந்தோஷத்தைவிட அவர்களின் கஷ்டம் தான் கண் முன்னால தெரியுது.

பாபு : உங்க ரெண்டு பேர் கருத்துகளிலிருந்தும் நான் மாறுபடறேன். சுரேஷ் செய்யற மாதிரி கஷ்டப்பட்டு சம்பாரிச்ச பணத்தில், ஆயிரம் ரெண்டாயிரம்னு பட்டாசுக்காக செலவழிக்கிறது தேவையில்லாததுதான். ஆனால் பிரசன்னா சொல்ற மாதிரி பட்டாசே வேண்டாம்னும் நான் சொல்ல மாட்டேன். குழந்தைத் தொழிலாளர்கள் பட்டாசு செய்யறாங்கன்னா அதைத் தடுக்கிறதுக்கான வழிகளை யோசிக்கணும். இந்தத் தொழிலை நம்பி பல்லாயிரக்கணக்



கான குடும்பங்கள் இருக்குது. பட்டாசை எல்லாரும் ஒதுக்கினா அவங்களோட நிலைமை என்னாகும்? எந்த ஒரு விஷயத்திலும் தவறு இருந்தால் அதைத் திருத்த முயற்சிக்கணுமே தவிர அதையே நிறுத்திடணும்னு யோசிக்கக் கூடாது.

சஹானா : பாபு சொல்றதுதான் சரி. எங்க வீட்டிலேயும் பாபு வீட்டிலேயும் ஆசைக்குக் கொஞ்சம் பட்டாசு வாங்கித் தருவாங்க. அதை சந்தோஷமா வெடிப்போம். இரவு நேரத்தில் அழகாகப் பூமாரி பொழியும் புஸ்வாணம், மத்தாப்பு, தரையில் சுற்றும் சங்குச் சக்கரம் போன்ற காதைத் துளைக்காத கண்ணைக் கவரும் ஐட்டங்கள்தான் என்னோட சாய்ஸ்.

பிரசன்னா : பேப்பர்ல படிச்சீங்களா? மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரைதான் பட்டாசு வெடிக்கணும்னு நீதி மன்றமே சொல்லியிருக்கிறது.

சஹானா : ரொம்ப நல்ல விஷயம் தான். இல்லைன்னா எந்த நேரத்துல யார் வெடி வச்சிருப்பாங்கன்னு தெரியாமல் பயந்துகிட்டே தெருவில் போக வேண்டியிருக்கும்.

பாபு : யார் வீட்டில் என்னென்ன பட்சணங்கள் செய்யப் போறாங்க? எங்க வீட்ல அதிரசம், முறுக்கு, மிக்சர், லட்டு.

சஹானா : தேங்காய் பர்பி, மைசூர்பா, ஜாங்கிரி, முறுக்கு, மிக்சர். அப்புறம் தீபாவளி அன்னிக்கு பஜ்ஜி, வடை இன்னும் நிறைய...

பிரசன்னா : இவ்வளவு பட்சணங்களையும் சாப்பிட்டால் வயிற்றில் ஏதாவது பிரச்னை வந்துவிடப் போகுது.

பாபு : அதுக்குத்தான் இருக்கவே இருக்கே தீபாவளி லேகியம்.

சுரேஷ் : லேகியமா? அது எதுக்குடா?

பாபு : இந்த மாதிரி எண்ணெய் பட்சணங்களையெல்லாம் அடுத்தடுத்து சாப்பிட்டால் ஜீரணம் ஆகிறது கஷ்டம். சுக்கு, மிளகு, ஓமம், திப்பிலி இன்னும் நிறைய சாமான்களைப் போட்டு இடிச்சு லேகியம் செய்வாங்க. நீ எவ்வளவு சாப்பிட்டாலும் கடைசியில் ஒரு ஸ்பூன் லேகியம் சாப்பிட்டால் விரைவில் ஜீரணம் ஆகும். உங்க வீட்டில் செய்யலைன்னா நான் தரேன். கவலைப்படாமல் சாப்பிடு.

பிரசன்னா : கவனிச்சியா சுரேஷ்? தீபாவளி என்ற பெயரைக் கேட்டாலே நமக்கெல்லாம் எவ்வளவு சந்தோஷமா இருக்கு!

சஹானா : மற்ற பண்டிகைகளைவிட தீபாவளிக்குத்தான் புது டிரெஸ், பட்டாசு, பட்சணம்னு ரொம்ப செலவு செய்து கொண்டாடறோம். அந்தச் செலவுகளுக்கு ஏற்ற மகிழ்ச்சி கிடைக்கத்தானே வேணும்.

பிரசன்னா : சுரேஷ், பட்டாசை ஜாக்கிரதையாக வெடி.

சுரேஷ் : சரி பிரசன்னா. ஆனால் நான் மட்டும் பட்டாசை வெடிக்கப் போறதில்லை. சிறுவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து வெடிக்கப் போறோம். ஓகேயா?

மூவரும் : ரொம்ப நல்ல ஐடியா. தேங்க்ஸ் சுரேஷ்.

சுரேஷ் : அம்மா ரைஸ் மில்லுக்குப் போகணும்னு சொன்னாங்க. நான் கிளம்பறேன்.

பாபு : நாங்களும் கிளம்பறோம். தீபாவளி அன்னிக்குப் பட்சணங்களோட சந்திக்கலாம்.

அட்டையில் : **மஹாலக்ஷ்மி, ஸ்ரீனிவாசன்**

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**

பாபு : "நான் காந்திக்கு முன்னாடி பிறந்தவனாக்கும்.

கோபு : அது எப்படிடா இருக்க முடியும்?

பாபு : நானென்ன பொய்யா சொல்றேன். காந்தி அக்டோபர் இரண்டாந் தேதி தான் பிறந்தார். நான் செப்டம்பர் ஒண்ணாந் தேதியே பிறந்துட்டேனே!

- **பாளை பாலு, பாளையங்கோட்டை.**





• பேகம் கலிதா ஜியா

கோகுலம் நியூஸ்

கட்டுப்பாடு

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும். 125 டெசிபலுக்கு மேல் சத்தம் எழுப்பும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நடுக்கம்

சென்னை, புதுவை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை பகுதிகளில் செப்டெம்பர் 25ந் தேதி இரவு 8.27 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. கூடுகளில் இருந்த பறவைகள் கத்திக் கொண்டு பறந்தன. நாய்கள் கடுமையாகக் குரைத்தன. மனிதர்கள் பயத்துடன் தெருவிற்கு ஓடினர். 5.6 ரிக்டர் அளவாகப் பதிவாகியது இந்த நிலநடுக்கம். இதில் சில கட்டடங்கள் விரிசல் விட்டன.

புதிய பிரதமர்!

வங்க தேசத்தில் நடைபெற்ற தேர்தலில் பேகம் கலிதா ஜியா தலைமையிலான தேசிய கட்சி அமோக வெற்றி பெற்றது. 114 இடங்களில் இக்கட்சி வென்று ஆட்சிக்கு வந்துவிட்டது. கடந்த ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்த ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி 35 இடங்களில் மட்டுமே வென்றுள்ளது. இதைத் தொடர்ந்து பேகம் கலிதா ஜியா புதிய பிரதமராகிறார்.

சாதனை!


இதயம், நுரையீரல் ஆகிய இரண்டுமே பழுதடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார் கோவையைச் சேர்ந்த பாலமுருகன் வில்லியம்ஸ். இரண்டு ஆண்டுகளாக மாற்று இதயம், நுரையீரலுக்காக காத்துக் கொண்டிருந்தார். கடந்த 6 மாதங்களாக வில்லியம்ஸைக் கவனித்து வந்த 'மெட்ராஸ் மெடிக்கல் மிஷன்' இதயம், நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்திருக்கிறது. வில்லியம்ஸ் குணம் பெற்று வருகிறார்.


3-ஜி செல்போன்

செல்போன்களிலேயே அதி நவீனமானதும் பல்வேறு பணிகளை ஒருங்கே செய்ய வல்லதுமான '3-ஜி' செல்போன்களை ஜப்பானிய நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. இதன் விலை ரூ.26,000. உலகின் எந்த இணையத் தளத்துடனும் இதன் மூலம் தொடர்பு கொள்ளலாம். ஈமெயில்களை அனுப்பலாம். ஈமெயில் கடிதங்களைப் பெறலாம். யாருடன் பேசுகிறோமோ அவருடைய உருவத்தைப் பார்க்கலாம். புகைப்படங்கள் எடுக்கலாம். மின்னணு விளையாட்டுகளை விளையாடலாம். என்.டி.டி. டாகுமோ என்ற நிறுவனம் இந்த செல்போன்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

நம்பிக்கை மனிதர்

கோல்கத்தாவைச் சேர்ந்தவர் மசூதுர் ரெஹ்மான வைத்ய. இவர் இரு கால்களையும் இழந்தவர். 22 கிலோ மீட்டர் நீளமுள்ள ஜிப்ரால்டர் நீரிணையை நீந்தி உலக சாதனை படைத்திருக்கிறார். 4 மணி 20 நிமிடங்களில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்திருக்கிறார்.





வந்தனாவுக்குக் கடற்கரையில் விளையாடுவதும் கடலை ரசிப்பதுமென்றால் கொள்ளை விருப்பம். அவளின் அம்மாவும் அப்பாவும் சற்று தூரத்தில் ஒரு மரத்தடி நிழலில் அமர்ந்திருந்தார்கள். நல்ல வெயில் நேரம் என்பதால் வந்தனாவுக்கு அருகில் ஆட்களே இல்லை. தண்ணீருக்கு அருகில் மணல் வீடு கட்டி, அதை அலை அடித்துச் செல்கிறதா என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் வந்தனா.


அப்போது ஒரு ராட்சச அலை கரையை நோக்கி ஓடி வந்தது. அந்த அலையில் வழுவழுப்பாக ஏதோ ஒரு பொருள் தன்மீது மோதுவதை உணர்ந்த வந்தனா, பயத்தில் அலறினாள்.



"பாப்பா, ஏன் இப்படி கத்தி ஊரைக் கூட்டறே? நான் ஒண்ணும் செய்ய மாட்டேன். ஆழ்கடலில் இருந்து ரொம்ப போர் அடிச்சிடுச்சு. அதான் என் அப்பாகிட்டே சொல்லாமல் கரைப்பக்கம் வந்தேன். இந்த வெயில் நேரத்துல யாரும் இருக்க மாட்டாங்கன்னு நினைச்சேன். நீ இருக்கே" என்றது அந்தப் பிராணி.

"எனக்குக் கடலை ரசிப்பது என்றால் ரொம்ப இஷ்டம். அதான் வெயில்ல கூட உட்கார்ந்திருக்கேன். என் பெயர் வந்தனா. நீ?"

"நீயே கண்டுபிடி. என்னை உன்



எஸ். சுஜாதா







பாடப் புத்தகத்துல கூட பார்த்திருப்பியே'' என்றபடி கைகளை விரித்தது அந்தப் பிராணி.

''கொஞ்சம் தள்ளியே இரு. எனக்குப் பயமா இருக்குது. உன் கைகளைப் பார்த்த பிறகும் என்னால கண்டுபிடிக்க முடியாதா என்ன? உன் பெயர் ஆங்கிலத்தில் ஆக்டோபஸ். தமிழில் கணவாய் மீன். நீ மீன் இனத்தைச் சேர்ந்தவனா?'' என்று கேள்வியோடு நிறுத்தினாள் வந்தனா.

''என்னைச் சரியாகக் கண்டுபிடிச்சிட்டே. வெரிகுட். நீ சொன்ன மாதிரி தமிழில் கணவாய் மீன் என்று என் பெயரில் மீன் இருந்தாலும் நான் மீன் இனத்தைச் சேர்ந்தவனில்லை. மெல்லுடலிகள் வகுப்பைச் சேர்ந்த ஒடுடைய


ஆக்டோபஸுடன் அரை மணி நேரம்!

பிராணிகளின் உறவினர் என்று சொல்லலாம். நான் மெல்லுடலி தொகுப்பில் தலைக்காலி வகுப்பைச் சேர்ந்தவன்'' - ஆக்டோபஸ்.

''அதான் உன் உடலைப் பார்த்தாலே தெரிகிறதே! வழவழ, கொழ கொழன்னு இருக்கியே! உனக்கு மட்டும் ஏன் எட்டுக் கைகள் இருக்கு?'' என்று கேட்டாள் வந்தனா.

சொக்கத்துக்குப் போக விரும்பாதவர்!

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன், இளம் வயதில் ஒருசமயம் சர்ச்சிற்குச் சென்றிருந்தபோது, அங்கே சொர்க்கம் – நரகம் பற்றி பாதிரியார் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். பிரசங்கத்தை முடித்துவிட்டு, அங்கே நின்றவர்களைப் பார்த்து,



''யாரெல்லாம் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார். எல்லோரும் கையை உயர்த்தினார்கள், ஒருவரைத் தவிர. அந்த ஒருவர் ஆபிரகாம் லிங்கன். அவரை வியப்புடன் பார்த்த பாதிரியார், ''மிஸ்டர் லிங்கன்... நீர் சொர்க்கத்துக்குப் போக விரும்பவில்லையா?'' என்று கேட்டார்.

அதற்கு லிங்கன், ''நான் சொர்க்கத்துக்கு போக விரும்பவில்லை. இங்குள்ள மக்களுக்காக இங்கேயே ஒரு சொர்க்கத்தை உருவாக்கவே நான் விரும்புகிறேன்'' என்றார்.

– விட்டுக்கட்டி மு. பெரியசாமி

''எட்டுக் கைகளுக்கே வியக்கிறியே, எங்கள் இனத்தில் வேறு சில வகைகளில் இன்னும் அதிகமான கைகளும் உண்டு. இந்தக் கைகளை வைத்துதான் இரையைத் தேடி பிடித்து உணவாக்கிக் கொள்கிறேன். என்னோட விருப்பமான உணவு என்ன தெரியுமா? நண்டு, நத்தை, சங்கு போன்ற பிராணிகள்தான். உன்னோட ஃபேவரிட் சாப்பாடு என்ன?'' என்றது ஆக்டோபஸ்.

''சாப்பாடுன்னு சொல்றதைவிட ஐஸ் கிரீம், சாக்லேட்னா எனக்கு உயிர். உன் வாயோ ரொம்பச் சின்னது. நண்டு உடலில் முள் எல்லாம் இருக்கும். எப்படி சாப்பிடுவே?'' – வந்தனா.

''எனக்குத்தான் இத்தனை கைகள் இருக்கே. நண்டை பிடிச்சு, வளைச்சு கைகளால் சுற்றுவேன். ஒவ்வொரு கையிலேயும் 240 உறிஞ்சு குழல்கள் இருக்கு. அதன் மூலம் நண்டின் உடல் நீர் வடிவில் உள்ளே சென்று விடும். இரையைத் திரவமாக்கித்தான் என்னால் சாப்பிட முடியும். என்னால் பச்சோந்தி மாதிரி உடல் நிறத்தை மாற்றிக் கொள்ள முடியும். இங்கே பார். இந்த வாயில் கிளி அலகு போல ஒரு தாடையும் கூர்மையான நாக்கும் இருக்கு. வாயைச் சுற்றிலும்தான் கைகள் இருக்கின்றன. இந்தக் கைகளை சுருக்கவும் நீட்டவும் முடியும். தலையில் ரெண்டு பெரிய கண்கள் இருக்கு'' என்று கூறி சற்று மூச்சு வாங்கியது ஆக்டோபஸ்.

''சரி. நீ ஆணா, பெண்ணா?'' என்று கேட்டாள் வந்தனா.

''நான் ஆண்தான். பெண் இனத்தில் மூன்றாவது கையின் நுனிப்பகுதி ஸ்பூன் மாதிரி இருக்கும். அதை வைத்து அடையாளம் கண்டு கொள்ளலாம்.''

''பெண் முட்டை இடுமா? அல்லது குட்டி போடுமா?'' என்று கேட்டுச் சிரித்தாள் வந்தனா.

''முட்டையிட்டுத்தான் குஞ்சு பொரிக்கும். பெண் முட்டையிடும் பருவம் வந்ததும் பவளப் பாறைகள் மேல் பிசினை ஒட்ட வைத்து லட்சக் கணக்கில் சிறு அரிசியைப் போல் முட்டையிடும். இந்த முட்டைகள் பிசினில் ஒட்டிக் கொள்ளும். பெண் ஆக்டோபஸ் இரண்டு வாரம் இப்படி முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர 5 வாரங்களாகும். அதுவரை இரவு பகல் பாராமல் முட்டைகளின் மேல் தண்ணீரை அடித்துக் கொண்டே இருக்கும். இப்படி செய்வதால் முட்டைகளுக்குத் தேவையான ஆக்ஸிஜன் கிடைக்கிறது.''

''இரு.. இரு.. இரவு, பகல் பெண் ஆக்டோபஸ் இப்படி வேலை செய்யும்போது ஆண் உணவு கொண்டு வந்து கொடுக்குமா?'' என்றாள் வந்தனா.

''ஆண்களாகிய நாங்கள் பெண்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை. ஏழு வாரங்கள் பட்டினி கிடப்பதால் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வந்ததும் தாய் ஆக்டோபஸ் இறந்துவிடும்'' என்று சோகத்துடன் கூறியது ஆக்டோபஸ்.

''சே! ஆண் இனம் ரொம்ப மோசம். உன்னோட பேசமாட்டேன் போ'' என்றாள் கோபத்துடன் வந்தனா.

''கோவிச்சுக்காதே வந்தனா. இயற்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இயல்பு. இன்னும் கொஞ்ச நேரம்தான் இங்கிருப்பேன். பேசு வந்தனா'' என்று கெஞ்சியது ஆக்டோபஸ்.

''**நீ** பெண் ஆக்டோபஸ்களுக்கு உதவி செய்யணும். அதுதான் நீ எனக்குச் செய்யற உதவி. சரி, உனக்கு விரோதி உண்டா? அப்படியிருந்தால் எப்படி தப்பிப்பே?''

''சுறா, திமிங்கலம்னு நிறைய விரோதிகள் உண்டு. சுறா துரத்தினால் வேகமாக நீந்தி ஏதாவது பாறைகளில் உள்ள எலுமிச்சை அளவுள்ள ஓட்டைகளில் கூட புகுந்து மறைந்து கொள்வேன். அந்த அளவுக்கு இந்த உடல் எனக்கு உதவி செய்கிறது. திமிங்கலத்துடன் சிறிது நேரம் அப்படி இப்படி உடலை வளைத்துப் போக்குக் காட்டுவேன். திமிங்கலம் நெருங்கினால், உடனே தோலில் உள்ள நிறமி செல்களை விரித்து சுருக்கி கறுப்பான திரவத்தை வெளியேற்றுவேன். இந்த நச்சு திரவத்துக்குப் பயந்து திமிங்கலம் சென்று விடும். வெற்றி எனக்குத்தான். எப்படி என் திறமை?'' என்று கைகளை நீட்டிக் கேட்டது ஆக்டோபஸ்.

''உன் இருப்பிடம், வகைகளைப் பற்றி சீக்கிரம் சொல்லு. எனக்குப் பசிக்குது, கிளம்பணும்'' - வந்தனா.

''எனக்கும் கூடப் பசிக்குது. நாங்கள் 1300 மீட்டர் ஆழ்கடலில் பவளப் பாறைகளுக்கருகில் வசிக்கிறோம். எப்போதாவது இப்படி கரையோரம் வருவதுண்டு. எங்களில் ஓட்டுக் கணவாய், கூந்தற்கணவாய் அல்லது ஈர்க்குக் கணவாய், பேய்க் கணவாய், நாட்டிலஸ் என்று பலவகைகள் உண்டு. ஆஸ்திரேலியாவில் வாழும் ஆக்டோபஸ்கள் மனிதர்களுக்குத் தீங்கு செய்யக் கூடியவை. எங்களில் என்னைவிட சாதுக்களும் உண்டு'' என்று கூறி நிறுத்தியது ஆக்டோபஸ்.


''வந்தனா.. வந்தனா.. விளையாடியது போதும். சாப்பிட வா'' என்று குரலெழுப்பியபடி வந்தனாவின் அம்மா வந்து கொண்டிருந்தார்.

''வந்தனா ஒரு நிமிஷம். உனக்கு ஒரு ரகசியம் சொல்றேன். எனக்குக் காது கேட்காது. உன் உதட்டசைவை வைத்து தான் உன்னுடன் பேசினேன். வரேன்'' என்றபடி அடுத்த அலையில் காணாமல் போனது ஆக்டோபஸ்.

வந்தனா பிரமிப்புடன் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருகில் வந்த அம்மா ''ஏதோ நீ பேசிட்டு இருந்த மாதிரி இருந்ததே, யார் கூட?'' என்றார்.

''ம்... ஆக்டோபஸோட'' என்ற வந்தனாவை அம்மா வியப்போடு பார்த்தார்.



''அவர் சொல்றதை நம்ப முடியலீங்க!''

''ஏன்?''

''கடல் தாண்டி சம்பாதிச்சேன்னு சொல்றாரே!''

– பொறையாறு கணேசன்



* மைக்கேல் ஜான்சன்



* ஜாக் காலிஸ்

மைக்கேல் ஜான்சன் ஓய்வு

கடந்த 10 ஆண்டுகளாக தடகளப் போட்டிகளில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் மைக்கேல் ஜான்சன். அமெரிக்காவைச் சேர்ந்த 34 வயதான மைக்கேல் ஜான்சன் ஐந்து முறை ஒலிம்பிக் போட்டிகளில் உலக சாம்பியன் பட்டம் பெற்றிருக்கிறார். 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 200 மீ மற்றும் 400 மீ ஓட்டப் பந்தயங்களில் தங்கம் வென்று சாதனை படைத்தார். அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற கையோடு ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். இவர் தடகளத்தில் ஏற்படுத்தியிருக்கும் சாதனைகளை யாராவது முறியடிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம்.

ஜாக் காலிஸ்

கிரிக்கெட் போட்டிகளில் தென் ஆப்பிரிக்க அணி சக்தி வாய்ந்த அணியாகக் கருதப்படுகிறது. ஜிம்பாப்வே நாட்டில் தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே அணிகளுக்கிடையே மூன்று டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. இதில் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தென் ஆப்பிரிக்கா வென்று, ஒரு டெஸ்ட் போட்டியை டிரா செய்து தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

ஜிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாப்பிரிக்க வீரரான ஜாக் காலிஸ் புதிய உலக சாதனை படைத்தார். இத்தொடரில் தொடர்ந்து மூன்று இன்னிங்ஸிலும் ஆட்டமிழக்காமல் 157, 42, 189 ரன்களைக் குவித்திருக்கிறார். 1,028 நிமிடங்கள் களத்திலிருந்து இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். இதற்கு முன் 1999 - 2000 ஆண்டில் இங்கிலாந்தின் நாஸர் ஹுசைன் 1,021 நிமிடங்கள் பேட் செய்ததே சாதனையாக இருந்தது. இத் தொடரில் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் பட்டங்களையும் வென்றார் காலிஸ்.


முத்தரப்பு கிரிக்கெட்

ஜிம்பாப்வேயை வென்று திரும்பிய தென்னாப்பிரிக்க அணி அவர்கள் சொந்த மண்ணிலேயே இந்தியா மற்றும் கென்யாவுடன் ஒரு தினப் போட்டிகளில் விளையாட ஆரம்பித்திருக்கிறது. முதல் ஒரு தினப் போட்டியில் முதலில் பேட் செய்தது இந்திய அணி. இப்போட்டியில் சிறிது இடைவேளைக்குப் பிறகு ஆடவந்துள்ள டெண்டுல்கர், ஸ்ரீநாத், கும்ளே ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். கேப்டன் கங்குலியும் டெண்டுல்கரும் முதலில் களமிறங்கி அற்புதமாக விளையாடினர். இதில் இருவரும் சதம் அடித்தது குறிப்பிடத்தக்கது.

279 ரன்களைக் குவித்து இந்திய அணி ஆட்டமிழந்தது. பிறகு ஆடத்துவங்கிய தென்னாப்பிரிக்க அணி 4 விக்கெட்டுகளை இழந்து 48.2வது ஓவரிலேயே வெற்றி இலக்கை அடைந்து விட்டது. இந்திய அணி தோற்ற நிலையிலும் ஆட்டம் சிறப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது போட்டியில் கென்யாவை வென்று முன்னணியில் இருக்கிறது தென்னாப்பிரிக்க அணி.

உங்களுக்காக தென்னாப்பிரிக்க கேப்டன் ஷான்பொல்லாக் மற்றும் லான்ஸ் குளுஸ்னர் போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.

குறுக்கெழுத்துப் புதிர்



விடை : 64ம் பக்கம்

இடமிருந்து வலம்

1. புல் இனத்தைச் சேர்ந்த மரம். (4)

7. இஸ்லாமியர்களின் புனித நூல் (3)

8. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு முன் இது பிரமாண்டமாக வீற்றிருக்கும் (3)

9. தெலுங்கு, கன்னட வருடப் பிறப்பு (3)

10. இந்தக் கொடிக்குப் பாரி தேர் தந்தான் (3)

வலமிருந்து இடம்

2. தூசி விழுந்தாலோ, வலித்தாலோ கண்களிலிருந்து இது சுரக்கும் (4)

5. தேங்காய் நாரிலிருந்து இது திரிப்பார்கள் (3)

13. ----- செய்வது நுரையீரலின் பணி (4)

14. கோடை காலத்தில் குளிர்ச்சி தரக்கூடிய காய். இது கொடியில் காய்க்கும் (4)

மேலிருந்து கீழ்

1. பிள்ளையாரின் வாகனம் (4)

2. ----- வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் (4)

6. கர்ணனின் தாய் (3)

9. போர் (4)

11. பருத்தி முற்றி வெடித்தால் ----- கிடைக்கும் (3)

12. மகன் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)


கீழிருந்து மேல்

3. ஆண் கோழி (3)

4. பாலுக்கு அடுத்த நிலை, மோருக்கு முந்திய நிலை (3)

14. காரம் நிறைந்த இந்த இலை சுபகாரியங்களில் கண்டிப்பாக இருக்கும் (4)


- பி. மைதிலி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மானாமதுரை.



எங்கள் ஊரில் நடந்தது!

என்ன பூ?

என் தங்கை தன் வகுப்புத் தோழியிடமிருந்து சில விதைகளைக் கொண்டு வந்து, தொட்டியில் ஊன்றி வைத்தாள். "என்ன விதை?'' என்று கேட்டதற்கு,



"மில்க் லில்லி'' என்று பெருமையாகச் சொன்னாள். பால் செண்டு என்னும் அந்தச் செடி காட்டுத்தனமாய் வளர்ந்து, ஒரு மாதம் கழித்து பூத்தது. அரளிப் பூவைப் போல இருந்த அந்தப் பூக்களைக் கண்ட எங்கள் அப்பா "என்னம்மா மில்க் லில்லின்னு சொன்னே. வெள்ளையா இல்லாம ரோஸ் கலர்ல இருக்கே?'' என்று கேட்டார். தன் தோழியை விட்டுத்தர மனமில்லாத என் தங்கை உடனடியாக "அது ரோஸ்மில்க் லில்லி'' என்றாளே பார்க்கலாம்!


- எஸ். துர்கா காத்யாயனி, பத்தாம் வகுப்பு அ பிரிவு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி - 1.

அடையாளம்?

தண்ணீர்த் தட்டுப்பாடான நேரங்களில் தெருக் குழாய்களில் கூட்டம் அதிகமாக இருப்பதால் குடங்கள் மாறிவிடுகின்றன. அப்படி மாறாமல் இருப்பதற்கு எங்கள் வீட்டுக் குடங்களில் அடையாளம் போடுமாறு அப்பாவிடம் அம்மா கூறினார். "குடத்தில் ஓட்டை போட்டு விடுவோம். ஒழுகுகிற குடம் நம்ம குடம்னு சீக்கிரமே அடையாளம் கண்டுபிடிச்சிடலாம்" என்று என் தம்பி சொல்லவும் அனைவரும் சிரித்துவிட்டோம்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்





பென்சில்...


யு.கே.ஜி. படிக்கும் என் தங்கை ஒரு நாள் காலை, "நட்ராஜ் பென்சில் வாங்கிக் கொடுத்தால்தான் பள்ளிக்குப் போவேன்" என அடம்பிடித்தாள். உடனே என் பாட்டி குறுக்கிட்டு, "உனக்குன்னுதான் பென்சில் வாங்கிக் கொடுத்திருக்கோமே, இன்னொருத்தர் பென்சிலையெல்லாம் கேட்கக் கூடாது" என்று கண்டித்தார். நாங்கள் எல்லோரும் சிரித்துவிட்டு, பாட்டியிடம் நட்ராஜ் என்பது ஒரு பென்சிலின் பிராண்ட் நேம் என விளக்கினோம்.


- ப. சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.

துறுதுறு...

சந்துரு எங்கள் வீட்டு சுட்டிப் பையன். ஒரு நிமிடம்கூட சும்மா இருக்க மாட்டான். ஏதாவது விஷமம் செய்து கொண்டே இருப்பான். வெடுக் வெடுக் எனப் பேசுவான். ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வெளியூர்ப் பாட்டி ஒருவர் வந்திருந்தார். அவருக்குச் சந்துருவை ரொம்பவும் பிடித்துப்போய் விட்டது. "துறுதுறுன்னு இருக்கியே? உன் பேர் என்னடா?" என்றார். உடனே அவன் "நான் துறுதுறு இல்லே. சந்துரு" என்றான். பாட்டி உட்பட எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- இ.சு. பாலசுப்பிரமணியன், பாளையங்கோட்டை.





கொலுசு

கோடை விடுமுறையில் எங்கள் பாட்டி எனக்குக் கொலுசு வாங்கித் தந்தார். வளரும் பிள்ளை என்று சொல்லி கொஞ்சம் அளவில் பெரியதாக வாங்கி விட்டார். அதனைக் காலில் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தால் பாதம் வழியே கீழே விழுந்தது கொலுசு. "சே! என்ன கொலுசு, கழன்று கழன்று விழுது" என நான் சலித்துக் கொண்டேன். அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் அக்கா "அது கொலுசு இல்ல கொ'லூசு' " என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- சு. சௌம்யாயனி, எட்டாம் வகுப்பு அ பிரிவு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

தண்ணீர்...

என் தம்பி படு சுட்டி. ஒரு நாள் இரவு வெகு நேரமாகியும் அவன் தூங்காமல் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பா அவனை அழைத்து தண்ணீர் குடிக்க வைத்து படுக்க வைத்தார். "இனிமேல் ஒழுங்கா தூங்கணும். எழுந்தீன்னா என்ன பண்ணு வேன்னு தெரியாது" என்று கூறி விட்டுச் சென்றார். அப்பா போன ஐந்து நிமிடங்களில் தம்பி மெதுவாக எழுந்தான். உடனே "எதுக்கு எழுந்திரிக்கிறே?" என்றார் அப்பா தம்பியிடம். "தண்ணி வேணும்" என்றான். "இப்பத்தானே குடிச்சே, பேசாமல் படு" என்றார் அப்பா. மீண்டும் எழுந்து தண்ணீர் கேட்டான் தம்பி. "இப்ப எழுந்து வந்து உதைக்கப் போறேன்" என்றார் அப்பா. "உதைக்க வரும்போது தண்ணியையும் கொண்டு வாங்க." என்றானே பார்க்கலாம்!



- இரா. திலீப், திருச்சி.

அரிசி மூட்டைகள்

தக தகவென ஒளிபரப்பத் தயாராக இருக்கும் கதிரவனை அரண்மனையின் மேல் மாடத்தில் நின்றபடி ரசித்துக் கொண்டிருந்தார் மன்னர் ஜெயவேந்தன். அப்போது, "மன்னருக்கு வணக்கம்" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினார்.

எதிரே களஞ்சியத் தலைமைக் காவலர் சென்னியப்பன் நின்று கொண்டிருந்தார். கவலை தோய்ந்த அவருடைய முகத்தைப் பார்த்ததுமே மன்னருக்குப் புரிந்துவிட்டது. ஏதோ முக்கியமான செய்தி என்று.

"சொல்லுங்கள். சென்னியப்பரே!" மன்னர் வினவினார்.

"அரசே! நம் நெற் களஞ்சியப் பகுதியிலிருந்து ஐம்பது மூட்டை அரிசியைத் திருடர்கள் திருடிச் சென்றிருக்கின்றனர்."

"என்ன... உண்மையாகவா?"

"ஆம் அரசே! நேற்று இரவு வழக்கம் போல மூன்று காவலாளிகள் களஞ்சியப் பகுதியைக் காவல் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்துவிட்டு முன் இரவில் நான் என் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். பின் இரவில் முகமூடி அணிந்தபடி நான்கு திருடர்கள் வந்திருக்கின்றனர். அந்த நான்கு பேரும் சேர்ந்து காவல் பணி புரியும் மூன்று வீரர்களின் முகத்தில் மயக்கம் தரும் மூலிகை வேரைக் காண்பித்து மயக்கமடையச் செய்திருக்கின்றனர். அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைகளிலிருந்து ஐம்பது மூட்டைகளை எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். விடியற்காலைதான் நம் வீரர்கள் மூவருக்கும் சுயநினைவு வந்திருக்கிறது. அலறி அடித்துக்கொண்டு என் வீட்டிற்கு வந்து செய்தியைத் தெரிவித்தனர். உடனே நானும் களஞ்சியப் பகுதிக்குச் சென்று திருட்டு நடைபெற்றதை உறுதி செய்து கொண்டுதான் தங்களிடம் வந்திருக்கிறேன்" அச்சமும் வேதனையும் சென்னியப்பனின் குரலில் தெரிந்தன.

திடுக்கிட்டார் மன்னர். அவர் பதவி ஏற்ற இந்த நான்கு வருடத்தில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறுவது இது தான் முதல் தடவை. விளைச்சலில் எட்டில் ஒரு பங்கு வரி செலுத்த வேண்டும் என்பது பரம்பரைச் சட்டம். அதன்படி மக்களிடமிருந்து வசூலித்த அரிசி, நெல் போன்ற தானியங்கள் அதற்கென்றே விசாலமாகக் கட்டப்பட்டிருக்கும் களஞ்சியக் கட்டடத்தில் மூட்டைகளாகக் கட்டி அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். தலைமைக்காவலர் சென்னியப்பன் பொறுப்பில்தான் இத்தனை ஆண்டுகள் பாதுகாப்பாக இருந்தது. யார் எடுத்திருப்பார்கள்..? முடிந்தால் மன்னரே கண்டுபிடிக்கட்டும்



த. ஜானகி

என்று எனக்குச் சவாலாக செய்திருப் பார்களோ? விடக் கூடாது... எப்படியாவது கள்வர்களைக் கண்டுபிடித்தே ஆக வேண் டும்... மனத்திற்குள் உறுதி பூண்டார் அரசர்.

எங்கே?

''சென்னியப்பரே! இந்த விஷயம் யாருக்கும் வெளியே தெரிய வேண்டாம். தங்கள் காவல் நிர்வாகத்தைப் பற்றி தவறாகப் பேசப்படும். திருடனைக் கண்டுபிடிக்க நீங்கள் எந்த ஏற்பாடும் செய்ய வேண்டாம். காவலுக்கு இன்னும் வீரர்களைப் போட்டு இனி இம்மாதிரி நடக்காதவாறு பாது காப்பைப் பலப்படுத்துங்கள். தாங்கள் செல்லலாம்''

மன்னரை வணங்கிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார் சென்னியப்பர்.

'என் ஆட்சியில் இப்படி நடைபெற்றிருப்பது எனக்கு வருத்தமாகவும் அவமான மாகவும் இருக்கிறது. நானே கள்வனைக் கையும் களவுமாகப்



பிடித்து, தண்டனை கொடுத்தால்தான் என் மனம் அமைதி அடையும் மாறு வேடத்தில் கிளம்பப் போகிறேன்' என்று முடிவெடுத்தார் மன்னர்.

தான் எடுத்த முடிவை செயலில் காட்ட போர்வீரன் போல் வேடம் பூண்டு, கையில் ஒரு துணி மூட்டையுடன் அரண்மனையை விட்டு வெளியேறினார்.

குதிரையின் மீது சவாரி செய்து விரைவில் நகரத்தின் எல்லையை அடைந்தார் மன்னர் ஜெயவேந்தன். அங்கு இருக்கும் காவல் வீரர்களைப் பார்த்து ''நேற்று பின்னிரவு நேரத்தில் வண்டியில் யாராவது மூட்டைகளை இந்த வழியாக எடுத்துச் சென்றார்களா? நம் மன்னர் கேட்டறிந்து வரச் சொன்னார்'' என்றார். மாறு வேடத்தில் இருந்த மன்னரை அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஒரு காவலன், கைகளைக் கட்டியபடி ''ஆம் வீரனே! கோழி கூவும் சமயத்தில் நான்கு ஆட்கள் வண்டியில் ஐம்பது மூட்டை அரிசியோடு இவ்வழியாக வந்தனர். விசாரித்தபோது 'மன்னரிடமிருந்து பெற்றுக்கொண்டு செல்கிறோம், நாங்கள் முல்லைவாடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்று கூறவே விட்டு விட்டோம்'' என்றான் பணிவுடன்.

என் ஆட்சியில் இப்படி நடைபெற்றிருப்பது எனக்கு வருத்தமாகவும் அவமானமாகவும் இருக்கிறது.

மன்னர் நகரத்தின் எல்லையைக் கடந்து இருபது மைல் தூரம் வந்தார். முல்லைவாடி செல்லும் பாதையில் புரவியை வேகமாகச் செலுத்தினார் மன்னர். கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் பயணம் செய்திருப்பார். தொலைவில் முல்லைவாடி கோபுரம் கண்களுக்குத் தெரியவே குதிரையை விட்டு இறங்கினார். ஒரு மறைவிடத்தில் குதிரையைக் கட்டினார். கையோடு கொண்டு வந்திருந்த துணி மூட்டையைப் பிரித்து அதில் வைத்திருந்த பொருட்களின் உதவியோடு முதியவர் போல் மாறு வேடம் பூண்டார்.

முதியவர் வேடத்தில் கிராமத்திற்குள் நுழைந்தார் மன்னர். தெருவில் பெரும்பாலான வீடுகளின் கதவுகள் திறக்கவில்லை. சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கிராமத்தின் தெருக்களைச் சுற்றி வந்தார். காணாமல் போன அரிசி மூட்டைகள் கண்களுக்குத் தெரியவில்லை. ஒரு தெருவிற்குள் நுழையும்போது அருகில் இருந்த விசாலமான வேப்பமரத்தடியின் மேடையில் நான்கைந்து பேர் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். தள்ளாடியபடி நடந்துகொண்டே மரத்தடியை அடைந்தார். தன்னைக் கண்டதும் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டதைக் கண்டும் காணாதது போல, ''என்ன வெய்யில்'' என்று சொல்லியபடி தன்னுடைய கைத்தடியை மேடையின் மீது வைத்துவிட்டு அமர்ந்தார். அருகில் இருந்த வீட்டிலிருந்து சமையல் செய்யும் வாசனை மன்னரின் பசியைத் தூண்



''நான் தாவர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கேன்!''
''ஒரு நாளைக்கு எத்தனை தடவை தாவுறீங்க?''
- விருத்தாசலம் வினோத்

டியது. அவசரத்தில் தான் உணவு கொண்டு வராததை எண்ணி வருத்தப் பட்டார். விருந்தோம்புதலுக்குப் பெயர் போன தன் ஆட்சியில் தன்னைப் பார்த்து யாரும் உணவு கொடுக் காததைக் கண்டு வேதனையுற்றார். பசியின் கொடுமையால் துடித்துக் கொண்டிருந்தார். ''தாங்கள் யார்? யாரைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்?'' அருகில் அமர்ந்திருந்த முதியவர் கேட்டார்.

''என்னோட பேரன் செவந்திபுரத்தில் இருக்கிறான். அவனைப் பார்க்கத்தான் நகரத்திலேயிருந்து வந்தேன். ஆனால் சரியாக வழி தெரியாமல் முல்லை வாடிக்கு வந்துவிட்டேன்!'' என்றார் வியர்வையைத் துடைத்துக்கொண்டே.

பேசிக் கொண்டிருந்த முதிய வரைத் தவிர மற்ற ஆட்கள் அவ் விடத்தை விட்டு நழுவினர். பசியின் கொடுமையினால் மன்னருக்கு மயக்கமே வரும்போல் இருந்தது. வேறு வழியின்றி ''குடிக்க சிறிது நீர் கிடைக் குமா?'' என்று வினவினார்.

''தங்களைப் பார்த்தால் பசியினால் வருந்துகிறீர்கள் என்று தெரிகிறது. இருங்கள். தங்களுக்கு நீரோடு, உண வும் கொண்டு வருகிறேன்'' என்று கூறிய முதியவர் அருகில் இருந்த வீட் டிற்குச் சென்று சொன்னபடி கொண்டு வந்தார். மன்னரின் பசிக்கு அந்த எளிய உணவு தேவாமிருதமாக இருந்தது. வயிற்றின் பசி அக்னி தணிந்தது.

''என் பசிக்கு உணவு கொடுத்ததற்கு மிகவும் நன்றி'' என்றார் மன்னர்.

''நேற்று தாங்கள் வந்திருந்தால் எங்களால் நீராகாரம்கூட கொடுத்திருக்க முடியாது'' என்றார் அந்த முதியவர்.

''என்ன?'' மன்னர் வியப்புடன் வினவினார்.

''ஆம் பெரியவரே! நேற்றுவரை இந்தக் கிராமமே குற்றுயிரும் குலை யுருமாக இருந்தது. இன்றுதான் வெகு நாட்களுக்குப் பின் அரிசியையே கண் ணாலே பார்க்கிறார்கள்.''

மன்னருக்கு நன்றாகவே புரிந்து விட்டது காணாமல் போன அரிசி மூட் டைகள் இந்தக் கிராமத்து மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று.

''அப்படியா! இங்கு மக்கள் சாப்பாட் டிற்கு கஷ்டப்படக் காரணம்?''

''இந்த நாட்டு மன்னர் ஜெயவேந் தன்தான்.''

''என்ன?'' மன்னர் அதிர்ந்தார்.

''உண்மைதான் பெரியவரே! இங்கு இருப்பவர்களில் பெரும்பான்மையோர் பயிர்த்தொழில்தான் செய்கின்றனர். கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக பருவ மழை பொழியவில்லை. அதனால் நிலத்தில் விளைச்சலும் இல்லை. ஆனால் எட்டில் ஒரு பங்கு வரி கட்ட வேண்டும் என்பது அரச உத் தரவு. வயலில் பயிரே விளையாத போது மக்களால் எப்படி வரி கட்ட முடியும்? சேமித்து வைத்திருந்த தானியத்தைச் சென்ற ஆண்டு வரியாகக் கட்டினார்கள்.

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

செப்டெம்பர் இதழில் அறிவித்த போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடை களை எழுதியவர்களிலிருந்து குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. கொனாரக் சூரியன் கோயில்,
2. கோமதீஸ்வரர் கோயில்,
3. திருமலை நாயக்கர் மஹால்,
4. செங்கோட்டை,
5. தஞ்சை பெரிய கோவில்
6. விதான் சௌதா.

பரிசு பெற்றவர்கள்:

1. சு. மலையரசி, ஒன்பதாம் வகுப்பு, நா.ம.அ.பெ. உயர்நிலைப்பள்ளி, திருப் பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

2. சு. விக்னேஷ், ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஏ.வி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



''எங்க வீட்டுல திரும்பத் திரும்ப பொருட்கள் காணாமப் போகுது சார்!''
''அப்ப திரும்பாம இருங்க!''
— விருத்தாசலம் வினோத்

இந்த ஆண்டு அவர்களே பட்டினியால் தவிக்கும்போது எப்படி வரி கட்ட முடியும்?''

''இதை மன்னரிடம் தெரிவிக்க வேண்டியதுதானே?''

''இரண்டு வருடங்களாக விளைச்சல் இல்லாத விவசாயியினால், எப்படி வரி கட்ட முடியும் என்று நம் மன்னர் ஒரு நொடி யோசித்துப் பார்த்திருப்பாரா? வரி வசூலிக்கும் அதிகாரிகள் கிராமத்து மக்களைப் படுத்தும் பாட்டை மன்னர் சிந்தித்துப் பார்த்தாரா?''

''ஒருவேளை மன்னருக்கு வரி வசூலிக்கும் அதிகாரிகள் செய்யும் கொடுமை தெரியாமல் இருக்கலாம் இல்லையா?''

''இருக்கலாம். உண்மையிலேயே நம் மன்னர் நல்லவர்தான். ஆனால் தன்னைச் சுற்றி ஜால்ரா அடிப்பவர்களின் பேச்சில் மயங்கிக் கிடக்கிறார். மன்னர் சுயமாகச் சிந்திக்கணும். அவர் மக்களைச் சந்திக்கணும். காட்சிக்கு எளியவராக இருக்க வேண்டும். அடிக்கடி நகர்வலம் வர வேண்டும். பசியின் கொடுமையை உணர்ந்து அதை நீக்க வழி செய்ய வேண்டும்'' நிறுத்தினார் முதியவர். பிறகு தயங்கியபடியே கூறலானார்.

''உங்களிடம் சொல்வதற்கு என்ன? நீங்களும் இந்நாட்டு பிரஜைதானே. நேற்று இரவு மன்னரின் களஞ்சியப் பகுதியிலிருந்து ஐம்பது மூட்டை அரிசி திருடிக் கொண்டு வரப்பட்டது. மன்னர் மக்களின் பசிப்பிணியை அறிந்திருந்தால், துயரத்தை உணர்ந்து உதவி செய்திருந்தால் இந்தத் திருட்டுப் புத்தியே வந்திருக்காது. நாளைக்கே வேறு கிராமத்து மக்கள் இதே திருட்டைச் செய்யலாம். மன்னரின் வீரர்கள் வந்து தங்களைத் துன்புறுத்துவார்களோ என்று பயந்துதான் மக்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். நிலமை இப்படியே நீடித்தால் நாட்டில் பஞ்சமும் திருட்டும் கொள்ளையும் தலை விரித்தாடும். இதை மன்னர் உணர்ந்து திருந்த வேண்டும்'' என்று முதியவர் கூறி முடித்தார்.

மன்னருக்குத் தன் தவறு புரிந்தது. 'பெரியவரே மன்னனாகிய எனக்கு என்னோட கடமை என்ன என்பதைத் தெளிவாக உணர்த்தி விட்டீர்கள். இனி மேற்கொண்டு நான் எடுக்கும் நல்ல முயற்சியில் நம் மக்கள் நலமாக, வளமாக வாழ்வார்கள். கூடிய விரைவில் உங்களைத்தான் எனக்கு வழி காட்டும் ஆலோசகராக நியமித்துக் கொள்ளப் போகிறேன்' என்று மனத்திற்குள் கூறிக்கொண்டு விடை பெற்றுச் சென்றார்.

மன்னர் செல்வதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த முதியவர் 'என்ன தான் மாறுவேடத்தில் வந்தாலும் தாங்கள் மன்னர் என்பது எனக்குத் தெரியாதா? அரிசி மூட்டையைத் திருடி அதன் மூலம் நீங்கள் இங்கு வந்து உண்மை நிலையை உணர வேண்டும் என்பதற்கான திட்டத்தைத் தீட்டியவனே நான்தானே. எப்படியோ இறைவன் திருவருளால் என் திட்டம் பலித்துவிட்டது. தாங்களும் திருந்தி விட்டீர்கள்' என்று நினைத்தார்.

தெளிந்த உள்ளத்தோடு மன்னர் குதிரை கட்டின இடத்தை நோக்கிச் செல்ல, நிம்மதியாகத் தன் வீட்டை நோக்கி நடக்கலானார் முதியவர்.

அழகான தோணி!

தோணி! தோணி! தோணி!
தோணிக் காரன் சோணி!
சோணி பாடும் பாட்டு
சொக்கிப் போகலாம் கேட்டு!

ஆடி, ஆடி நீரில்
அழகாய்ப் போகும் தோணி!
பாடிக் கொண்டே துடுப்பை
பாங்காய்ப் போடுவான் சோணி!

ஆற்றைக் கடந்து போகவே
அழகுத் தோணியில் ஏறலாம்!
படகுக் காரன் சோணியின்
பாட்டில் மகிழ்ந்து போகலாம்!

- புலேந்திரன்



காத்திருக்கும் பூட்டு!


போட்டு வைத்த பொருளை யெல்லாம்
போக்கி டாத பூட்டு - யாரும்
வீட்டுக் குள்ளே நுழைந்தி டாமல்
வீற்றி ருக்கும் பூட்டு!

ஏழை யென்றும்; செல்வ ரென்றும்;
எண்ணி டாத பூட்டு - எந்தக்
காலத் திலும் களைத்தி டாமல்;
காத்தி ருக்கும் பூட்டு!

கள்வ ருக்கும்; திருட ருக்கும்;
கலங்கி டாத பூட்டு - செல்வம்
உள்ள வர்க்கும் இல்லா ருக்கும்
உற்ற துணை பூட்டு!

அம்மா முதல் தம்பி வரை
அறியும் பொருள் பூட்டு - எந்தக்
கொம்ப னுக்கும் பயப்ப டாமல்
கொலு விருக்கும் பூட்டு!


- பழனியூரான்



சூரியனுக்கும் பூமிக்கும் இடையே எவ்வளவு தூரம்?

அழுகை...

எங்கள் வகுப்பு ஆசிரியர் எல்லோருடைய மதிப்பெண்களையும் வாசித்தார். குறைவான மதிப்பெண் எடுத்த ஒரு மாணவியைக் கண்டித்தார். அம்மாணவி அழத் தொடங்கி விட்டாள். ஆசிரியரே




சமாதானம் சொல்லியும் கேட்காமல் அழுது கொண்டே இருந்தாள். "உன் நன்மைக்குத் தான் சொன்னேன். நல்ல மதிப்பெண் வாங்கினால்தான் டாக்டராகலாம், என்ஜினீயர் ஆகலாம், கலெக்டராகலாம். இப்படி அழுதுக் கிட்டே இருந்தால் என்னவாக முடியும்? சொல்!" என்று ஆசிரியர் கேட்டார். துடுக்கான ஒரு மாணவி எழுந்து "மெகாசீரியல் நடிகையாகலாம்" என்றாளே பார்க்கலாம்! அழுத அந்த மாணவி உட்பட அனைவரும் சிரித்து விட்டனர்.

- எஸ். கவிதா, திருநெல்வேலி

கண்டக்டர்?

ஒருநாள் எங்கள் வகுப்பு இயற்பியல் ஆசிரியர் 'எலட்க்ரான்கள்' பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதில் 'கண்டக்டர்', 'செமிகண்டக்டர்' போன்றவற்றைக் கூறி விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். அப்போது கடைசி இருக்கையில் ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த ஆசிரியர் அவனை எழுப்பி "கண்



டக்டர் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "கண்டக்டர் என்றால் பேருந்தில் டிக்கட் கொடுப்பவர் சார்..." என்றான். உடனே மாணவர்கள் அனைவரும் சிரித்து விட்டோம்.

- தே. இளங்குமரன், திருப்பத்தூர்.



அடித்தால்...

என் தங்கை பள்ளியிலிருந்து அழுது கொண்டே வீட்டுக்கு வந்தாள். அவளிடம் என்னவென்று விசாரித்தோம். "பள்ளிக் கூடத்தில் மணி அடிச்சதால் அழுகிறேன்" என்றாள். "மணி அடிச்சா வீட்டுக்கு வர வேண்டியதுதானே? ஏன் அழுகிறாய்?" என்று நான் கேட்டேன். அவளோ "பள்ளியில் என்

வகுப்புப் பையன் 'மணி' அடித்தால் அழாமல் என்ன செய்வாங்களாம்?" என்றாள்.

- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

பெயர்?

நானும், நண்பனும் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒருமுறை மாவட்ட கல்வி அதிகாரி வருகை தந்திருந்தார். எங்கள் வகுப்புக்கு வந்தார். என் நண்பனை எழுப்பி கேள்விகளைக் கேட்டார். அவன் அதற்கு டாண், டாண் என்று பதில் சொன்னான். "இவ்வளவு நல்லா பதில் சொல்றியே, உன் பெயர் என்ன?" என்று கேட்டார் கல்வி



அதிகாரி. அதற்கு அவன் "மதுரை" என்று சொன்னான். வகுப்பில் உள்ள அனைவரும் சிரித்துவிட்டோம். கல்வி அதிகாரி "உன் பெயர் கேட்டால் உன் ஊர் பெயரைச் சொல்கிறாயா?" என்றார். "இல்லை சார் என் பெயர் 'ம. துரை'. நான் வேகமாகச் சொன்னதால் மதுரைன்னு வந்திருச்சு சார்" என்றான்.

- சி. ராஜசேகரன், இராஜபாளையம்.

சுற்றுலா

எங்கள் பள்ளியில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்கள் வகுப்பாசிரியை அதைப் பற்றிய விவரங்களை எங்களிடம் கூறிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவி ஆசிரியையிடம், "நீங்களும் சுற்றுலாவிற்கு வருவீர்களா?" என்று கேட்டாள். அதற்கு அவர், "நீங்கள் வந்தால் நான் வந்து தானே ஆகவேண்டும்.




யாரும் வராவிட்டால் நான் சந்தோஷமாக இருந்துவிடுவேன்," என்றார். அப்போது சுற்றுலா செல்லும் எண்ணமில்லாத ஒரு மாணவி, "மிஸ் உங்கள் சந்தோஷம்தான் என் சந்தோஷம். நான் சுற்றுலாவுக்கு வரவில்லை" என்றாளே பார்க்கலாம்! ஆசிரியை உட்பட நாங்கள் அனைவரும் சிரித்தோம்.

- வ. ரெங்காஷினி, நாகர்கோவில்.

தூரம்

புவியியல் பாடவேளை. கரும்பலகையில் சூரியன், பூமி இவற்றை வரைந்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். என் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். அவனை எழுப்பிய ஆசிரியர், "சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் எவ்வளவு தூரம்?" என்று கேட்டார். திருதிருவென்று விழித்தவன், சிறிது நேரம் கழித்து "இரண்டடி தூரம்தான் சார்" என்றான். ஆசிரியர் வியப்புடன் "எப்படி?"



என்றார். கரும்பலகையைக் காட்டி "நீங்கள் வரைந்த பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இரண்டடிதான் இருக்கும்" என்றானே பார்க்கலாம்!

- நா. ப. குகன், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியதச்சூர்.

15 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி   படம்: லலிதா





இம்மாதிரி வேஷதாரிகளின் பேச்சைக் கேட்டு ஏமாந்து போகாதீர்கள். உங்களுக்குக் குறைகள் இருந்தால் அரசாங்க அதிகாரிகளிடம் தெரியப்படுத்துங்கள்!
நன்றி இளவரசே! அப்படியே செய்கிறோம்.
இனி இப்படி நடக்காது. வருகிறோம்.
நண்பா, உன்னை வளர்த்த தாய், தந்தையர் உன்னைக் காண ஆவலாக இருக்கிறார்கள்.
குள்ளச்சாமிக்காக மட்டும் நான் வரவில்லை. அவர்களைப் பார்க்கவும்தான் வந்துள்ளேன். வா, போகலாம்.
ஜெயசிம்மன் வீட்டை அடைந்தான்.
அம்மா, அப்பா எப்படி இருக்கிறீர்கள்? தங்களை அடிக்கடி சந்திக்க முடியாததில் எனக்கு வருத்தம்.


இந்த வீட்டில் எங்களுக்கு மட்டும் மோகனாக இருந்தாய். இன்றோ நாட்டு மக்கள் போற்றும் இளவரசனாகி விட்டாய். நீண்ட காலம் வாழ்ந்து நல்லாட்சி நடத்து.
நண்பா, இந்தக் கிளியை என் நினைவாக வைத்துக்கொள். ரொம்ப அறிவுடையது. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடியது! இது என்னிடமிருப்பதைவிட உன்னிடமிருப்பது நல்லது.
ரொம்ப நன்றி சோமு... நாங்கள் வருகிறோம்.
சில நாட்களுக்குப் பின் –
லைலா! அரண்மனைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது எனக்கு வெறுப்பாக இருக்கிறது.
எனக்கும்தான், எங்காவது புதிய இடத்துக்குப் போய் வரலாமே?




இருவரும் மலைகள் சூழ்ந்த பகுதியை அடைந்தனர்.
லைலா இந்த மலைப் பகுதி எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது! நீர்வீழ்ச்சி அருகே சென்று பார்ப்போமா?
வாருங்கள். இதுவரைக்கும் நான் பார்க்காத இடம்...
ஆஹா! எத்தனை அற்புதமான காட்சி! நீர்வீழ்ச்சி எவ்வளவு அழகாகக் கொட்டுகிறது! அற்புதம்!
இயற்கையை ரசித்துக் கொண்டு செல்லும் தங்களை அபாயம் சூழ்ந்துகொண்டு வருவதை அவர்களிருவரும் உணரவில்லை.
தொடரும்

கிணடா என்றால் என்ன?



முதன்முதலில் தபால்துறை வேலை செய்யத் தொடங்கியவுடன் தபால்களைக் குதிரை வீரர்கள் எடுத்துச் சென்றார்கள். இப்படி செல்லும்போது ஆங்காங்கே ஓய்வு எடுத்துக் குதிரைகளை மாற்றிக் கொண்டு செல்வார்கள். அவ்வாறு ஓய்வு கொள்ளும் இடங்களில் கம்பங்கள் நடப் பட்டிருக்கும். கம்பங்களை ஆங்கிலத்தில் 'போஸ்ட்' என்பர். அச்சொல்லே பெய ராய் பிற்காலத்தில் தபால் களுக்கும் நிலைத்துவிட்டது.

- சு. சபிதா, தூத்துக்குடி.




• ஒரு தேனீயின் மூளையில் எட்டரை லட்சம் நரம்பு செல்கள் இருக்கின்றன.

• ஜாதிக்காய் தோப்பில் வேறு செடி, கொடிகள், புல் பூண்டுகள் வளர்வதில்லை.

• முட்டையைக் குறுக்கே வைத்து இரண்டு உள்ளங்கைகளுக்கிடையே எவ் வளவு அழுத்தமாக நசுக்கினாலும் முட்டை உடைவதில்லை.

- ஜெ. மகேஷ்வரன், XI, ஜவகர் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி.

தையற்சிட்டு என்று ஒரு பறவை இருக்கிறது. இது கூடு கட்டும் முறை விந்தையானது. அது தன் நீண்ட கூர்மை யான அலகினால் பெரிய, பெரிய இலை களின் ஓரங்களில் துளையிட்டு, அவற்றில் தாவரங்களின் நாரைச் சேர்த்து ஒரு பையைப் போல் தைத்து விடும். இதுவே அதன் கூடாகும். இப்படி இலைகளில்



அலகினால் துளைபோட்டு, நாரைக் கொண்டு தைத்து கூட்டை உருவாக்கு வதால் அதைத் தையற்சிட்டு என்று அழைக்கிறார்கள்.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

எரிமலைப் பகுதிகளில் வெந்நீர் ஊற்றுகளை அதிகம் காணலாம். இவ்வெந் நீர் ஊற்றுகள் அமெ ரிக்கா, ஜப்பான், ஐஸ்லாந்து, நியூஸி லாந்து, இத்தாலி, திபெத் ஆகிய நாடு களில் உள்ளது.


எரிமலைகள் நிறைந்த இடங்களில் அதன் சூடான பாறைக் குழம்பு தரைக்



குக் கீழே சிறிது தூரத்திலே இருக்கும். அவ்விடங்களில் அதன் மேல் பகுதியில் சேரும் நீர் கொதித்து ஆவி ஆகும். ஆவியின் அழுத்தத்தினால் அங்கு இருக்கக் கூடிய துளை அல்லது வெடிப்பின் வழியாகத் தரைக்கு மேல் நீர் பீரிட்டு வரும்.

அமெரிக்காவில் எல்லோ ஸ்டோன் தேசியப் பூங்காவில் ஒரு வெந்நீர் ஊற்று உள்ளது. அதற்கு 'ஓல்ட் பெய்த்புல்' என்று பெயர். அதில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை நீர் பீரிட்டு வரும். நான்கு நிமிடங்கள்தான் நீர் வரும், பின்பு நின்று விடும்.

- சு. கண்ணகி, மிட்டூர்.




• உலகில் மிகக் குறைந்த வயதில் ஓட்டுரிமை வழங்கும் நாடு பிலிப்பைன்ஸ் தான். அங்கே பதினைந்து வயது முடிந்தாலே போதும். ஓட்டுரிமை உண்டு. ஆனால் இதற்கு எதிர்மாறானது அங்கோலா நாடு. அங்கு ஓட்டுரிமை வழங்கும் வயது இருபத்தைந்து.

• டென்மார்க் பொது நூலகம் ஒன்றில் உறுப்பினரானால் போதும். அவர் தனது அடையாளச் சீட்டை காண்பித்து, டென்மார்க்கிலுள்ள எந்தப் பொது நூலகத்திலிருந்தும் நூலை எடுத்துக் கொள்ள முடியும்.

- ஜெ. மைதிலி, ஈரோடு.

• யானை, குதிரை போன்றவை நின்று கொண்டே தூங்கும்.

• பாம்பு தூங்கும்போது உடலை 'ஸ்பிரிங்'



போன்று வைத்துக் கொள்ளும், கண்களை மூடாது.

• மான்கள் தூக்கத்திலும் எதிரிகளை உணர்ந்து கொள்ளும்.

• வாத்துகள் நின்றுகொண்டோ, நீரில் நீந்தும் போதோ தூங்கும்.


• எறும்புகள் மணற்படுகைகளை அமைத்து தூங்கும். இந்தத் தூக்கம் மூன்று மணி நேரம் கூட நீடிக்கும்.

- பெ. நடராசன், 9-ம் வகுப்பு, சேது
மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த காப்ரியல் என்பவர் இந்தியாவுக்கு வழிகாண எண்ணி செயின்ட் லாரன்ஸ் நதியில் கப்பலில் சென்றபோது நாடு எதையும் காணாமல் 'கனடா' என்று கூச்சலிட்டார். இதற்கு 'இங்கு எதுவும் இல்லை' என்று பொருள். இக் கூச்சல் அப்பகுதியில் வாழ்ந்த ஆதிவாசிகளின் காதுகளிலும் விழுந்தது. பிறகு இதர ஐரோப்பியர் அங்கு வந்த போது கனடா என்று கூச்சலிட்டால் அவர்கள் தங்களைத் தொந்தரவு செய்யாமல் போய்விடுவார்கள் என்று எண்ணி அவ்வாறே கத்தினர். அந்தக் கூச்சலே நாட்டின் பெயராக அமைந்துவிட்டது.

- ஜி.எஸ். கார்த்திக் சபரி ஸ்ரீமதி,
கோபிசெட்டிப்பாளையம்.





நம் தேசப்பிதா மகாத்மா காந்திஜி தன் வாழ்நாளில் ஒருமுறை கூட விமானப் பயணம் மேற்கொண்டது கிடையாது. இந்திய தலைவர் ஒருவரை கௌரவித்து 42 நாடுகள் தபால்தலை வெளியிட்டது மகாத்மா காந்திக்குத்தான்.

- ஆறுபாதி புகழேந்தி

சீல், கடற்சிங்கம் போன்ற கடல்வாழ் பிராணிகளுக்கு மீசை போன்ற முடி இருப்பதை அறிவீர்கள். இந்த மீசை அவற்றுக்கு உணர்வு கொம்புகளாகவும் பயன்



படுகின்றன. இந்த மீசை மூலம்தான் சீல்களும், கடற்சிங்கங்களும் இரையையும் தங்களைத் தாக்க வரும் எதிரிகளையும் உடனடியாக அடையாளம் கண்டு கொள்கின்றன என்பதை இப்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

- எம். ஜரினாபானு, லெட்சுமாங்குடி.

ஜப்பானைச் சேர்ந்த கியூஷு தீவிலுள்ள துறைமுக நகரமான ககோஷிமாவில் வசிக்கும் மக்கள் மழை பெய்யாதபோது கூட, குடை பிடித்துக் கொண்டுதான் நடமாடுவார்கள். அருகிலுள்ள சகுராஜிமா எரிமலையிலிருந்து வெளிப்படும் சாம்பலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இவ்வாறு அவர்




கள் செய்கிறார்கள். 1914வரை இந்த எரிமலையே ஒரு தீவாகத்தான் இருந்தது. அதிலிருந்து பீரிட்ட எரிமலைக் குழம்பு பிரதான நகருடன் அதை இணைத்து விட்டது.


- ஆர். மகாதேவன், திருநெல்வேலி.

இந்தியக் காடுகளில் குரங்குகள் உள்ள இடமாகவே பார்த்து, மான்கள் இரை தேடச் செல்லும். காரணம், குரங்குகள் மரத்தின் மீது இருப்பதால் மான்களுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை முன்கூட்டியே இனங் கண்டு உணர்த்திவிடும். சிங்கமோ, புலியோ மானைக் குறி வைத்து வருவதைக் கண்டவுடன் குரங்குகள் 'கிரீச்' சிடும். உடனே மான்கள் தலைதெறிக்க ஓடி தப்பித்துவிடும்.

இதேபோல் ஆப்ரிக்கக் காடுகளில் நெருப்புக் கோழிகளும், வரிக்குதிரைகளும் அருகருகே மேயும். நெருப்புக் கோழிகள் உயரம், கூரிய கண் பார்வை ஆகியவற்றின் உதவியால் வரக்கூடிய ஆபத்தை அறிந்து வரிக் குதிரைகளுக்கு உணர்த்திவிடுகின்றன.

- எம். ஜரினாபானு, லெட்சுமாங்குடி.





கோண்டுவைப் பார்த்து, திகைத்து விட்டோம்!

✉ திருச்சியிலிருந்து க. தினேஷ் குமார் 'என் சுவாசமே' என்ற தலைப்பில் வெளியான நுரையீரல் பற்றிய கட்டுரை, படிக்க எளிமையாகவும் கருத்துகள் அருமையாகவும் இருந்தது. குட்டி சிறுத்தையைப் பார்த்து மிரண்டாலும் கலக்கலான படம் அது. அக்னிக் குஞ்சுகள் தொடர்கதை விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது'' என்கிறார்.

✉ ''இன்றைய மாசு நிறைந்த உலகில் 'என் சுவாசமே' என்ற கட்டுரை பல விஷயங்களைத் தெளிவுபடுத்தியது. 'மலர்களின் மாநாடு' கவிதை நன்றாக இருந்தது'' என்கிறார் மயிலாடுதுறையிலிருந்து சின்னஞ்சிறு கோபு.

✉ சாத்தூரிலிருந்து எம். செல்லையா ''விஷம விச்சு, படு சுட்டியாக இருந்தாலும் பழம் பெரும் பொம்மையைக் காப்பாற்றி விட்டானே! பணம் இருப்பவர்களிடம்தான் மரியாதை இருக்கும் என்பதற்கு ரங்கன் ஒரு உதாரணம். எமர்ஜென்ஸி விளக்கின் மூலம் சேமிப்பின் அவசியத்தை உணர்த்திய படக்கதை நன்று'' என்கிறார்.

✉ '''நல்ல கவிஞராவது எப்படி?' என்ற வழிகாட்டி பகுதியில் இடம் பெற்ற பழநிபாரதியின் டிப்ஸ் அனைத்தும் பயனுள்ளதாக இருந்தது. அவர் எங்களுக்காக எழுதிய 'மழையே வருக' என்ற பாடல் சூப்பர்'' என்கிறார் மதுரையிலிருந்து வி. கார்த்திக்.

✉ நல்லூரிலிருந்து வெ. சுபஸ்ரீ ''தளவை இளங்குமரன் எழுதிய 'மலர்களின் மாநாடு' பாடல் இனிமையாக இருந்தது. பரிசு பெற்ற கார்கள் அனைத்தும் புகைப்படங்கள் போல் தத்ரூபமாக இருந்தன'' என்கிறார்.

✉ ''காந்திஜியின் முதல் வழக்கு என்ற தலைப்பில் அவர் வாழ்வில் நடந்த சம்பவங்கள் சிலிர்க்க வைத்தன. கோண்டு வழி உண்மையிலேயே தனி வழிதான்! கோண்டுவின் அம்மா, மனைவி, நண்பர்கள் மட்டுமின்றி நாங்களும் திகைத்துப் போய் விட்டோம்'' என்கிறார் திருவாரூரிலிருந்து கே. மதுமிதா.

சார் தபால்!


கோகுலம் சுழல் கோப்பை

ஒவ்வொரு ஆண்டும் கோகுலத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலச் சீத்தை, தூத்துக்குடி, ஆண்டிப்பட்டி, பெரியதச்சூர் ஆகிய பள்ளிகளில் கோப்பையைக் கைப்பற்ற போகும் பள்ளி எது? இன்னும் ஒரே மாதத்தில் தெரிந்துவிடும். இப்பொழுதே வாழ்த்தத் தயாராகுங்கள்!

ஓயாத

கருஞ்சிவப்பு நிறத்தில், கூம்பு வடிவில் கவிழ்ந்த தாமரை மொட்டு போல் இருக்கும் உறுப்பு இதயம். இதயத்துக்கு ஓய்வு என்பதே கிடையாது. நாம் உட்கார்ந்திருந்தாலும், தூங்கினாலும் எந்த நிலையில் இருந்தாலும் அல்லும் பகலும் உழைத்துக் கொண்டேயிருக்கும். கரு உருவாகி 21ஆம் நாளிலிருந்தே இதயத்தின் பணி ஆரம்பமாகி உடலில் உயிர் உள்ளவரை இயங்கிக் கொண்டேயிருக்கிறது.

மார்பில் நடுநாயகமாய் அமர்ந்து, ஒரு சக்கரவர்த்திபோல், எலும்புகள் புடை சூழ, நம்மை ஆளுமை செய்து உயிர் கொடுக்கிறது இதயம்.





விலா எலும்புகள் அடங்கிய மார்புக் கூடுதான் பாதுகாப்பு அரண். கூம்பு வடிவின் அடிப்பாகம் வலது தோளை நோக்கியும், நுனிப்பாகம் கீழிறங்கி இடது விலாப் பக்கம் இருக்கிறது. நீங்கள் விலாவின் இடப்புறம் கைகளை வைத்துப் பார்த்தால் இதயத் துடிப்பை உணர முடியும். இதயத்தின் உருவம் நம் கை முஷ்டியின் அளவுதான். எடை 350 கிராம். நீளம் 15 செ.மீ., அகலம் 10 செ.மீ., குறுக்களவு 8 செ.மீ. நம் உடம்பின் எடையில் 1/200 பங்கு. குழந்தை பிறந்தபோது 22 க.செ.மீ. அளவிலும், 16 வயதில் 150 - 160 க.செ.மீ. அளவிலும் இருக்கிறது. 16 - 26 வயது வரை வேகமாக வளர்ச்சியடைகிறது. அதற்குப் பின் மெதுவாக வளர்கிறது இதயம்.

மோகனா

நாமெல்லாம் நினைப்பது போல் இதயம் ஒன்றும் காதல் தூதுவனல்ல. கற்பனை சிறகடிப்பதும், பாசம் பொழிவதும், அன்பு காட்டுவதும், இரக்கமாயிருப்பதும் இதயத்தின் கடமைகள் அல்ல. இவையெல்லாம் மூளையின் கவனத்தின் கீழ் வருபவை. உடல் முழுவதற்கும் இரத்தம் செல்லுவதற்காக, இரத்தத்தை வேகமாக குழாய்களில் இறைப்பதே இதயத்தின் பணி.

இதயத்தைச் சுற்றி 'பெரிகார்டியம்' என்ற மெல்லிய உறை உண்டு. அதற்குள் உராயாமல், பத்திரமாய் பணி செய்வதற்கேற்ப, ஒரு திரவமும் இருக்கிறது. மொத்தம் 4 அறைகள் உண்டு. வலது மேலறைகளான வலது, இடது ஆரிக்கிள் அல்லது அட்ரியம், இரத்தம் வாங்கும் அல்லது வடியும் அறைகள். வலது, இடது கீழறைகளான வென்டிரிக்கிள்கள், இரத்தம் பாய்ச்சும் அறைகள். வடியும் அறைகளின் சுவர்கள் சற்று மெல்லிய தசை






உழைப்பாளி!


களாலும், பாய்ச்சும் அறைகளின் சுவர்கள் சற்றுத் தடித்தும் காணப்படு கின்றன. இடப்பக்கத்தில் சுத்திகரிக்கப்பட்ட இரத்தமும், வலப்பக்கத்தில் சுத்திகரிக் கப்பட வேண்டிய இரத்தமும் உள்ளது. இதயத்தின் தசைகள் இயங்கு தசையோ, இயக்கு தசையோ அல்ல. ஒருவித மான சிறப்பு தசைகளால் ஆனவை. மேலறைகளில் இரத்தம் எப்போதும் வந்து விழுந்து கொண்டே இருக்கும். கீழ் இடது அறை வெண்டிரிக் கிளிலிருந்து இரத்தம் மகாதமனிக்கும், வலது வெண்டிரிக்கிளிலிருந்து இரத்தம் நுரையீரல் தமனிக்கும் மிக அதிக அழுத் தத்துடன் செலுத்துகிறது இதயம்.

ஒரு நாளைக்கு சுமாராக எவ்வளவு தூரம் இரத்தம் அனுப்புகிறது தெரியுமா? சுமார் 90,000 கி.மீ. நம் 5 அடி உயர உடலுக்குள்தான். (நம் பூமியின் வடதென் துருவ சுற்றளவே 40,000 கி.மீ.தான்.) இது பூமியை 2¼ முறை சுற்றுவதற் குச் சமம். இதற்காக மொத்தமாக சுமார் 15,000 லிட்டர் இரத்தம் இத யத்தினுள் நிரப்பப்பட்டுக் கொண் டிருக்கிறது தொடர்ச்சியாக. ஆனால் நீங்கள் குண்டாக இருந்தாலும், ஒல்லியாக இருந்தா லும், உடலுக் குள் உள்ள இரத்தம் சுமார் 5½ லிட்டர்தான். இதயத்தை துடிக்க வைக்க, வலது மூலையிலுள்ள சைனு ஆரிக்குலர் நோடிலிருந்துதான் துடிப்பு துவங்குகிறது. அதனைத்தான் 'பேஸ் மேக்கர்' என்று சொல்லு கின்றனர். சிலருக்கு இரத்தத் துடிப்புக்காக பேஸ் மேக்கர் வைப்பது, இதற்கு மாற் றாகத்தான். ஒவ்வொரு கீழறையும், ஒரு துடிப் பின்போது 5½ கன அங்குல இரத்தத்தை வெளியேற்றும். ஒரு நிமிடத்துக்கு இதயம் 72 முறை துடிக்கிறது. உடம் பிலுள்ள 5 லிட்டர் இரத் தமும், அனைத்து இரத் தக் குழாய்களிலும் ஓடி,



மீண்டும் இதயத்தை வந்தடைய ஒரு நிமிடம் ஆகிறது.

இதயத்தை மென்மையானவன் என்று



வர்ணிக்கிறார்கள். ஆனால் அப்படி யல்ல. ஒரு நாளில் 120 டன் எடையை, 1 அடி உயர்த்த ஆகும் சக்திக் கான வேலை செய்கிறது இதயம். நம் வாழ்நாளில் 3,00,000 டன் எடையுள்ள இரத்தத்தை இறைத்துக் கொண்டிருக் கிறது. ஒரு சிறந்த ஓட்டப் பந்தய வீரனின் கால் தசைகளைப் போன்றும், பளு தூக்கும் பயில்வானின் கை தசைகளைப் போன் றும் 'இருமடங்கு' அதிகமாக இதயம் வேலை செய்கிறது. இதயம் போல் செயல் படும் தசைக்கு நிறைய ஓய்வு தேவை. இரண்டு துடிப்புகளுக்குகிடையே ஏற்படும் மிகக் குறுகிய காலத்தில் ½ வினாடிக் கும் குறைவாக ஓய்வு எடுக்கிறது. நாம் தூங்கும்போது தந்துகிகளிலுள்ள இரத்தம், அசைவின்றி கிடப்பதால், தங்துகிகளுக்கு அச்சமயத்தில் இரத்தம் செலுத்த வேண் டிய அவசியமில்லை. எனவே நாம் தூங் கும்போது நிமிடத்திற்கு 72 முறையன்றி, 55 முறைதான் துடிக்கிறது.


நம் உடல் அதிக வேலை செய்யும் போது, இதயமும் அதிகப்படியாக உழைக்க வேண்டியுள்ளதால், இதயத்துக்கு அதிக ஆக்ஸிஜனும், உணவும் தேவை. இதனை இரத்தம் பாயும் 'கரோனரி' இரத்தக் குழாய் கள் மூலம் இதயம் பெறுகிறது. இதயத்தின் எடை, உடலின் எடையில் 1/200 பங்கு இருப்பினும், அதன் சேவை அதிகம் என்பதால், உடலுக்கு வேண்டியதில் 1/20 பங்கு இரத்தம் எடுத்துக் கொள்கிறது. உடலின் மற்ற உறுப்பு களை விட 10 மடங்கு இரத்தம் அதிகமாகப் பெற்றுக் கொள்கிறது இதயம். கரோனரி இரத்த குழாய்களில், கொழுப்பு மூலம் அடைப்பு ஏற்பட் டால், அந்தப்பகுதி தசைகள் இரத்தமின்றி இறந்துவிடும் வாய்ப்பு உண்டு. இரத்த அடைப்பு பிறந்த குழந்தையிடமும் ஏற்படுவது உண்டு. இரத்த அடைப்பால் பழுதுபட்ட இதயத் தசைகள் மீண்டும் உயிர்த்தெழுவது இல்லை. அவ் விடத்தில் தழும்பு மட்டுமே ஏற்படுகிறது. இரத்த அடைப்பு பாரம் பரியமாகக்கூட வருவதுண்டு. இந்தியாவில் சுமார் 45% பேரின் இறப்பு இதய அடைப்பால் நிகழ் கிறது.

நாம் விமானத்தில் பறக்கும்போது, மேலேயுள்ள வளி மண்டலத்தில் ஆக்ஸிஜன் குறைவாக உள்ளதால், இதயம் அதிகமாக உழைத்து ஆக்ஸிஜனைத் தர வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, நாம் உணவு உண்டதும், அதனைச் சீரணம் செய்ய, வழக்கத்தைவிட 1/3 மடங்கு அதி கம் உழைக்கிறது. கருவைச் சுமந்துள்ள தாய்மார்கள், கருவுக்கும் சேர்த்து இரத்தம்

செலுத்த வேண்டியுள்ளதால், இதயம் ½ மடங்கு அதிக இரத்தம் செலுத்துகிறது. உடலில் காயம் ஏற்பட்டு, இரத்தப் போக்கு ஏற்பட்டால், அதற்கேற்ப வேலை செய்கிறது இதயம். உங்கள் கோபத்தின்போதும், பயத்தின்போதும்கூட அதிகம் பணி புரிகிறது. நடுத்தர வயதை நீங்கள் கடந்து விட்டால் இதயத்துக்கு எப்போதுமே பிரச்னைதான். அப்போது நமது எடை ஒரு கிலோ கூடினால் கூட, இதயம் 300 கி.மீ. தூரம் அதிகமாக தந்துகிகளில் இரத்தம் செலுத்துவதற்கு சமமாக வேலை செய்ய வேண்டும். ஒவ்வொரு 1 கிலோ எடைக்கும், ஒவ்வொரு 300 கி.மீ. தூரம் இரத்தம் செலுத்தும் சக்தியைக் கூட்டிக் கொள்ள வேண்டும். உதாரணமாக, 60 கிலோ எடையுடன் உள்ளவர், 70 கிலோவாக குண்டானால், இதயத்தின் நிலைமையை யோசித்துப் பாருங்கள்!

பொதுவாக இரத்த அழுத்தம் 120/80 தான். 140/90 என்றால், அது அதிக பட்ச இரத்த அழுத்தமாகும். இதில் 140 என்பது நிமிடத்திற்கு இதயம் விரிவடைவதையும், 90 என்பது இதயம் சுருங்குவதையும் குறிப்பிடுவதாகும். இதில் முக்கியமாக கீழுள்ள எண்ணிக்கை கூடக் கூடாது. இது கூடினால் இதயத்தின் ஓய்வு குறைகிறது என்று பொருள். ஓய்வு போதவில்லை என்றால், இதயம் செயல்படுவதை நிறுத்த நேரிடும். இரத்த அழுத்தத்தைக் குறைக்க முதலில் எடையைக் குறைக்க வேண்டும். புகைபிடிப்பவர் ஒரு நாளைக்கு 2 பாக்கெட் சிகரெட் புகைத்தால், 80-120 மி.கி நிக்கோடின் உள்ளிழுக்கப்பட்டு, இரத்தக் குழாய்களின் கழுத்தை நெருக்கும். குறிப்பாக கை, கால்களில் இது அதிகம் காணப்படும்.

தினமும் 1 - 2 கி. மீ நடத்தல், இரு முறை படியேறுதல், தொடர்ந்து லேசான உடற்பயிற்சி போன்றவை செய்தால் ஏற்கனவே கரோனரி குழாய் அடைபட்டிருந்தாலும், அதிலிருந்து புதிய கிளைகள் முளைத்து, இதயத்துக்கு இரத்தம்



"தேள் கடிச்ச உடனே என்ன செய்யணும்?"

"அய்யோ... அம்மான்னு கத்தணும்!"

— வாகையடிமூர்த்தி

செலுத்தும்.

முக்கியமாக, நடுத்தர வயதைக் கடந்துவிட்டால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. இதயத்திலும், இரத்த குழாய்களிலும் கொழுப்பை அடைக்காதீர்கள். இரத்த குழாய்களின் உள்ளே கொழுப்பு படிந்து, அதன் விட்டம் 1/16 மடங்கு குறைந்தால்கூட, அதிலிருந்து வெளிவரும் இரத்தத்தின் அளவு 1/2 மடங்கு குறைந்துவிடும். இயற்பியல் விதிப்படி இரத்தக் குழாயின் விட்டம் ½ மடங்கு குறைந்தால், வெளிவரும் இரத்தம் 15/16 மடங்கு குறையும். 1/16 மடங்கு இரத்தம் மட்டுமே வெளிப்படும். இதனை ஈடுகட்ட இதயம் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். இதனைத் தவிர்க்க, நீங்கள் கொழுப்புப் பொருட்கள் உட் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இடையிடையே ஓரிரு நிமிட தூக்கமும், இதயத்துக்கு ஓய்வு தரும்.

நாம் உடற்பயிற்சி செய்தும் கொழுப்பு நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடாமலும், உடலை எடை குறைவாக வைத்திருக்க வேண்டும். மேலும் தினசரி எட்டு மணி நேரம் தூங்கி, புகை பிடிக்காமலும் இருந்தால் இதயம் நீண்ட நாட்கள் உழைக்கும்.



கோகுலம்
போஸ்டர்
லான்ஸ் குளுஸ்னர்



ஷான் பொல்லாக்

அறிஞர்களின் வாழ்வில்...


செருப்பைத் தேடிச் சென்ற கடிகாரம்!

முன்னாள் ஜனாதிபதி வி.வி.கிரி டெல்லியிலிருந்து சென்னையை நோக்கி முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரோடு பயணம் செய்தவர் ஒரு வெளிநாட்டுக்காரர்.

இரவு பயணம் முடிந்தபின் காலையில் குளிப்பதற்காக கிரி அவர்கள் தனது பழைய செருப்புகளை இருக்கைக்கு அடியில் வைத்துவிட்டுச் சென்றார். அவர் வருவதற்குத் தாமதம் ஆகியது. பொறுமை இழந்த அந்த வெளிநாட்டுக்காரரோ கிரியின் செருப்புகளை எடுத்து வெளியே வீசியெறிந்துவிட்டார்.

திரும்பி வந்த கிரிக்கு நிலைமை தெளிவாகப் புரிந்துவிட்டது. அந்த வெளிநாட்டாரோ, எழுந்து குளியலறை நோக்கி நடந்துவிட்டார். சுற்றும் முற்றும் பார்த்த கிரியின் கண்களுக்கு அந்த ஆசாமியின் கைக்கடிகாரம் தென்பட்டது.

அதை எடுத்து, வெளியே வீசிவிட்டு அமைதியாக அமர்ந்திருந்தார். திரும்பி வந்த வெளிநாட்டவர், "எனது கைக்கடிகாரத்தைப் பார்த்தீரா?" என கிரியிடம் கேட்க, "ஆம். எனது செருப்பைத் தேடிக் கொண்டு உங்கள் கடிகாரம் போயிருக்கிறது" என்று துணிச்சலாகப் பதிலளித்தார்.



* ஐன்ஸ்டீன்

சாக்கடை...?

கவிக்குயில் சரோஜினி தேவி செல்வமும் செல்வாக்கும் மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தமது சுகபோக வாழ்க்கையைத் துறந்துவிட்டு, பாரத விடுதலைப் போரில் கலந்துகொண்டு துன்பம், துயரங்களை ஏற்றுக் கொண்டார்.

ஒரு சமயம் சரோஜினிதேவியாரின் நண்பர் ஒருவர், அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, "நீங்கள் பெருங் கவிஞராயிற்றே! தங்க எழில் வீசும் கற்பனை கோபுரங்களில் ஏறி உல்லாசமாக உலாவுவதை விட்டுவிட்டு இந்தத் தொல்லை நிறைந்த அரசியல் சாக்கடையில் ஏன் இறங்கினீர்கள்?" என்று கேட்டார்.

"நண்பரே, கவிஞரின் பணி காவியத்திற்கு ஏற்ப அமைய வேண்டும். பாரதமும் மக்களும் தங்கள் சுதந்திரமிழந்து, அந்நியருக்கு அடிமையாகி வலுக்கட்டாயமாகச் சாக்கடையில் தள்ளப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் உண்மையான கவிஞனுக்கு சாக்கடையில்தான் வேலையிருக்க முடியும். கற்பனைக் கோபுரத்தில் அல்ல" என்று கவிக்குயில் சரோஜினி சூடாகப் பதில் கொடுத்தார்.

அன்பு

தம்மைக் கீழே தள்ளி வீழ்த்தி தம் மரணத்துக்குக் காரணமாயிருந்த யானையைப் பற்றி, அன்றைய 'சுதேசமித்திரன்' இதழில் பாரதியார் சுவையாகக் குறிப்பிட்டிருந்த விவரம் :


'யானை இன்னார் என்று தெரியாமல் என்னைத் தள்ளிவிட்டது. தெரிந்திருந்தால் தள்ளியிருக்காது. துன்புறுத்தும் எண்ணம் இருந்தால் கீழே நான் விழுந்ததும் தூக்கி எறிந்திருக்காதா? அப்படியே நின்றதன் அர்த்தம் என்ன? என்னிடம் அதற்குள்ள அன்பே காரணம்!'

வேதனையிலும் நகைச் சுவையுணர்வு என்பது பாரதிக்குக் கைவந்த கலை!

மேலும் ஒரு விஷயம்...

சாக்ரடீஸ் சாவிற்காக சிறைச் சாலையில் காத்திருந்தபோது, கவிஞர் ஸ்டெஸிகோரஸ் என்பவரின் ஒரு பாடலை ஒருவன் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டார். அம்மனிதரை சாக்ரடீஸ் அணுகி, ''அந்தப் பாடலை எனக்குக் கற்றுக் தருகிறாயா?'' என்றார். அதற்கு அந்த மனிதன், ''இன்னும் சில மணி நேரத்தில் சாகப் போகும் நீங்கள் ஏன் இப்பாடலைக் கற்றுக் கொள்ள விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டான். அதற்கு சாக்ரடீஸ், ''மேலும் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டு சாக விரும்புகிறேன்.'' என்றார்.

- எம்.ஜரினா பானு, லெட்சுமாங்குடி.



*** வி.வி.கிரி**



*** சரோஜினி தேவி**

ஆள்மாறாட்டம்

ஒரு முறை ஐன்ஸ்டீன் தம் கண்டுபிடிப்பான அணுசக்தி தத்துவத்தை ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் போய் விளக்கிட்டு வந்தார். அவரோடு தொடர்ந்து போன அவருடைய டிரைவருக்கு இந்த விளக்கங்கள் கேட்டு அத்துபடியாகிவிட்டது. ஒரு நாள் காரில் வரும்போது ஐன்ஸ்டீன் சொன்னார் :

''டிரைவர், சொன்னதையே சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துவிட்டது. இன்று போகிற பல்கலைக்கழகத்தில் நீ என்னுடைய உடைகளை மாட்டிக் கொண்டு ஐன்ஸ்டீன் ஆகி இதுவரை நான் விளக்கியதைக்கூறு. நான் உன் உடைகளோடு டிரைவராகப் பார்வையாளர் பகுதியில் அமர்ந்து கொள்கிறேன்.'' முதலில் தயங்கிய டிரைவர் புதிய அனுபவம் பெறுகிற ஆர்வத்தில் ஒப்புக் கொண்டார். பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் மாணவர் கூட்டம் அலைமோதியது. ஐன்ஸ்டீன் வேடத்தில் இருந்த டிரைவர் பிய்த்து உதறிக் கொண்டிருந்தார். இதுவரை எங்கும் நடக்காத ஒன்று அங்கே நடந்துவிட்டது. ஒரு ஆசிரியர் சந்தேகம் கேட்டுவிட்டார். ஆள் மாறாட்டம் அம்பலாகிவிடுமே என்று அஞ்சி நடுங்கிவிட்டார் பார்வையாளர் பகுதியில் இருந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

ஆனால், டிரைவர் பதறவேயில்லை. ''இந்தச் சாதாரண சந்தேகத்தைத் தீர்க்க ஐன்ஸ்டீன் ஆன நான் தேவையில்லை. என் டிரைவரே போதும். டிரைவர் வாருங்கள். இந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வையுங்கள்.'' என்றார்.

தன்னுடைய சாமர்த்திய புத்தியால் பெரிய இடர்பாட்டைத் தவிர்த்த தன் டிரைவரை மிகவும் பாராட்டினார் ஐன்ஸ்டீன்.

- மு. ராம்குமார், திருநெல்வேலி.

நாகரிகம் ஆடையில் இல்லை!

சுவாமி விவேகானந்தர் வெறும் சால்வையைப் போர்த்திக் கொண்டு, கைத்தடியுடன் நியூயார்க் நகர வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தார். எதிரே ஒரு வெள்ளை மாது அவரைப் பார்த்து நகைத்துக் கேலியாகப் பேசிவிட்டார்.

விவேகானந்தர் புன்சிரிப்புடன், ''அம்மணி, எங்கள் நாட்டில் நாகரிகமோ, மனித மதிப்போ ஆடை அணிகளில் அடங்கியில்லை. நன்னடத்தையில்தான் அடங்கியிருக்கிறது.'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

- நெ. இராமன், சென்னை.

8. காரைத் துரத்து!

தனக்கு என்ன நேர்ந்தது என்பதை நடேசன் சொல்லிக் கொண்டே வந்து, காரிலிருந்து தான் மாயமாக மறைந்ததைக் கூறியதும் நெடுமாறன் குறுக்கிட்டு ஒரு கேள்வி கேட்டான்.

''நடேசா, நீதான் மயக்கமாயிட்டியே, காரிலிருந்தவர்கள் பேசியதையெல்லாம் எப்படி சொல்ல முடிகிறது?''

சோகமான அந்தச் சூழலிலும் நடேசனின் முகத்தில் மின்னல் போல ஒரு பிரகாசம் தோன்றியது.


''மாறா, நல்லவர்கள் தொடர்பு நன்மை செய்யும் என்பார்களே! உன் தொடர்பு அதிகமாக இல்லாவிட்டாலும் - வகுப்புத் தோழன் என்ற தொடர்பு செய்துள்ள நன்மையைப் பார். இந்த இரவில் வந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறாய். எங்கள் வீட்டுக்கருகே ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் தொடர்பு என் மயக்கத்தைத் தீர்த்தது.''

''எப்படி?''

மாறன் கேட்டான்.

''அந்தப் பெரியவர் எனக்கு யோகாசனம் கற்றுக் கொடுத்திருக்கிறார். மூச்சை இழுத்து மெல்ல விடுவது, கொஞ்ச நேரம் மூச்சை உள்ளிழுத்து நிறுத்திக் கொள்வது என்று, சுவாசித்

அக்னிக்



தலையே ஒரு கலையாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதன் பயனைப் பற்றி அவர் ஏதேதோ சொல்லுவார். இன்றுதான் அந்தப்பயன் தெரிந்தது. என்னை அழுத்திப் பிடித்தவன், ஒரு கையால் தன் பாக்கெட்டிலிருந்து கர்ச்சீப்பை எடுத்ததும், மருந்துவாடை தெரிந்தது. அதை என் முகத்தை நோக்கி எடுத்து வந்தபோதே இது மயக்கமருந்தாக இருக்கலாமோ என்ற சந்தேகம் வந்தது. உடனே நான் சுவாசிப்பதை நிறுத்தினேன். ஜில்லென்று அவன் வைத்த கைக்குட்டையின் ஸ்பரிசம் தெரிந்தது. ஆனால் நான் சுவாசிக்கவில்லை. மயக்கமடைந்தவன் போல ஒருபுறமாய்த் தலையைச் சாய்த்துக் கொண்டேன். நான் மயங்கிவிட்டேன் என்று அவன் கைக்குட்டையை எடுத்துக் கொண்டான். சில வினாடிகளுக்குப் பின் சுவாசித்தேன். அதுவும் மிக நிதானமாக. அதனால் காருக்குள் பேசியதெல்லாம் எனக்குத் தெளிவாகக் கேட்டது. பெட்ரோல் இல்லாமல் கார் நின்று டிரைவர் இறங்கிப் போய்விட்ட பிறகு, என்னை காருக்குள் தள்ளிய சோமு இறங்கிப் போனானே, அதன் பிறகு மெல்லக் கண்ணைத் திறந்து காருக்குள்

குஞ்சுகள்

டாக்டர் பூவண்ணன்



நோட்டம் விட்டேன். தலையை லேசாக உயர்த்திப் பார்த்தபோது அந்த ஆசாமி பெட்டிக்கடையை நோக்கி நடப்பது தெரிந்தது. உடனே காரிலிருந்து இறங்கி மாயமாய் மறைந்தேன்.''

நடேசனின் குரலில் பெருமிதம் கலந்திருந்தது.


''சரி, காரிலிருந்து இறங்கிய நீ எங்கே மறைந்தாய்?''

மாறன் கேள்விக்கு அதே பெருமிதத்துடன் பதில் சொல்லத் தொடங்கினான் நடேசன்.

''சோமு சுற்றிப் பார்த்தானே, பூவரச மரம் - அதன் மேலே உட்கார்ந்திருந்தேன். அடர்த்தியான ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டேன். நான் இருந்த மரத்தைச் சுற்றிப் பார்த்தவன், மரத்தின் மேலே இருக்கிறேனா என்று பார்க்கவில்லை. நகரத்து பையனுக்கு மரமேறத் தெரியாது என்று நினைத்தான் போலும். எங்கள் வீட்டில் பெரிய மாமரம் இருக்கிறது. அதில் ஏறிக் காய் பறித்த பழக்கம் எனக்குக் கைகொடுத்தது. மரத்திலிருந்தே பெட்டிக் கடையைப் பார்த்தேன். சோமுவைக் கண்காணித்தேன். சோமு திரும்பி வந்து காருக்குள் பார்த்துப் பதறியது, இங்கும் அங்கும் ஓடியது என அனைத்தையும், அந்தப் பயந்த சூழலிலும் ரசித்தேன்.''

''அப்புறம்?'' என்றான் மாறன்.

''டிரைவர் பெட்ரோலுடன் திரும்ப, அவனிடம் பதற்றத்துடன் சோமு பேசுவது தெரிந்தது. பெட்ரோலைக்கூட காருக்கு ஊற்றாமல் இங்கும் அங்குமாக ஓடினார்கள். கூவம் அருகில் இருப்பதால் மறைவதற்குத் தகுந்த இடம் என்று



நினைத்தார்கள் போலும். இரண்டு பேரும் கூவத்தில் இறங்கினார்கள். அங்கிருந்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, காருக்கு பெட்ரோல் ஊற்றி, அதில் ஏறிச் சென்றனர். கார், வந்த திசை நோக்கிச் சென்றது.

"சில நிமிடங்களில் திரும்பி வந்தது. இப்போது மேற்கு நோக்கிச் சென்றது. இப்படி கிழக்கும் மேற்குமாக கார் சென்று சென்று திரும்பியது. ஆங்காங்கே நிறுத்தி தேடியிருப்பார்கள் போலும். அவர்கள் நான் தப்பிப் போய்விட்டதை அவ்வளவு சீக்கிரமாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. மாலை நேரத்து மஞ்சள் வெயில் மறைந்து, காரிருள் பரவத் தொடங்கியது. அப்போது என்னைக் கடத்திய கார், முன்பு நின்று போன அதே இடத்துக்கு வந்தது. அதன் பின்னாலேயே இன்னொரு கறுப்புக்கார் வந்தது. அந்தக் காரிலிருந்து மிடுக்கான தோற்றத்துடன் ஒருவன் இறங்கினான். டிரைவரும் இறங்கினான். என்னைக் கடத்திய காரிலிருந்த சோமுவும் டிரைவர் துரையும் இறங்கினர். நான்கு பேரும் ஏதோ கலந்து பேசினர். புதிய காரில் மிடுக்கான ஆசாமி ஏற என்னைக் கடத்திய காரின் டிரைவர் அதில் ஏறினான். புதிய காரின் டிரைவரும் சோமுவும் என்னைக் கடத்திய காரில் ஏறினர். இரண்டு காரும் எதிர் எதிர் திசையில் சென்றன. என்னைத் தேட இப்போது ரெண்டு கார். ஒரு காரில் என்னை அறிந்த சோமு, இன்னொரு காரில் என்னை அறிந்த டிரைவர் துரை. இரு கார் வேட்டையைப்பார்த்து நான் பயந்தேன். பயந்தபடி மரத்திலேயே இருந்தேன். தப்பிக்கும் ஆசையில் மறந்தும்கூட இறங்கவில்லை. ஒரு கார் மரத்துக்கு எதிரே ஊருக்குள் சென்று திரும்பியது. இவர்கள் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மட்டுமில்லாது, ஆங்காங்கே ஊருக்குள்ளும் சென்று தேடியிருப்பார்கள் என நினைக்கிறேன்."

நடேசன் சோர்ந்து போனவன்போல, பேச்சை நிறுத்தினான்.



"இட்லி வடை இருக்காப்பா?"
"உளுந்து வடைதான் இருக்கு சார்."
- சாயம் வெ. ராஜாராமன்

மாறன், "அப்புறம்?" என்று கேட்க, தந்தை தடுத்தார்.

"மாறா, நடேசன் சோர்ந்திருக்கிறான். எப்போது சாப்பிட்டானோ, மணி பத்து ஐம்பது! காலையில் மீதியைக் கேட்கலாம்" என்றார்.

"சோர்வு இல்லைங்க. ஒரு வகையான பயம்! திடீர் திடீர்னு பயம் வருது. அங்கிள், என்னை எதுக்குக் கடத்தினாங்க?"

"தெரியலே... சீக்கிரமா அதைக் கண்டுபிடிப்போம்" என்றார் தந்தை.

"காரணம் தெரியாது. ஆனால் உன்னைப் போல வேறு சிலரையும் கடத்தியிருக்கிறாங்கன்னு யூகிக்க முடிகிறது. காரணத்தைச் சீக்கிரம் கண்டுபிடிக்கலாம்" என்றான் மாறன்.

"மீதியும் சொல்லிடறேன். அந்த ரெண்டு கார்கள் அடிக்கடி நான் இருந்த இடத்தைக் கடந்து சென்றன. நல்லா இருட்டின பிறகு ரெண்டு காரும் ஒன்றாக வந்து மேற்கு நோக்கிச் சென்றன. வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லை. மணி என்ன இருக்கும்னு தெரியலே. நான் மரத்திலிருந்து மெதுவாக இறங்கி, மரத்தின் பின்னே மறைஞ்சு நின்னேன். அப்புறம் மெதுவாக கிழக்கு நோக்கி நடந்தேன். பஸ்ஸில் ஏறிப் போகலாம்னா காசில்லை. அப்புறந்தான் போன் பூத்தைப் பார்த்தேன். போன் செய்யவும்

காசில்லை. மூவேந்தர் தமிழ்ச் சங்கம் எனக்குக் கைகொடுத்து காப்பாற்றிய கதைதான் உங்களுக்குத் தெரியுமே!"

நடேசன் இப்படி சொல்லிக் கொண்டே வெளியே பார்த்தான். கார் வைணவக் கல்லூரியை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். உடனே, "அங்கிள், வண்டியை நிறுத் துங்க. எங்க வீடு காலேஜுக்குப் பின் னாடிதான். இங்கே இறக்கிவிட்டால் போதும். நானே போய்டுவேன்." என்றான்.

மாறனின் தந்தை காரை நிறுத்தினார்.

"நடேசன் நம்முடன் வரட்டும். நாளை காலை நாமே அவன் வீட்டில் கொண்டு போய் விடலாம்." என்ற மாறனின் யோச னையைத் தந்தை மறுத்தார். "நடேசன் உன்னை உன் வீட்டில் டிராப் செய் கிறேன். வழிகாட்டு" என்றார்.

நடேசன் வழி காட்ட, கார் மு.வ.தெரு வுக்குச் சென்றது.

"இவ்வளவு லேட்டா வருவதற்கு ஒரு காரணம் சொல்லணுமே" என்று நடேசன் கவலைபட்டபோது, மாறன், "டோன்ட் ஒர்ரி, உங்க வீட்லே காரணத்தை நான் சொல்றேன். நீ ஆமாம் போடு, அது போதும்" என்றான்.

நடேசன் வீட்டில் எல்லா விளக்கு களும் எரிந்து கொண்டிருந்தன. கார் நிற்கும் ஓசை கேட்கத் கதவைத் திறந்து கொண்டு, அப்பா, அம்மா, அக்கா, தங்கை - எல்லோரும் ஓடி வந்தார்கள்.

"எங்கடா போனே?"

"எங்க கண்ணு போனே?"

சரமாரியான கேள்விகள் முடிந்ததும் மாறன் பேசினான்.

"எங்களுக்குத் தினசரி பேப்பர் எப்படி அச்சாறதுன்னு பார்க்க ஆசை. எங்க ஃப்ரெண்ட் இளங்கோவின் அப்பா அழைச் சுட்டுப் போறதா சொன்னார். இன்னிக் குத் திடீர்னு வரச் சொன்னார். நாங்க புறப்பட்டபோது, நடேசனைப் பார்த் தோம். அழைச்சுட்டுப் போயிட்டோம். அது காலை பேப்பர். பத்தரை மணிக் குத்தான் வெளியூர் எடிஷன் அச்சாச்சு. அதைப் பார்த்துட்டு வர நேரமாயிடுச்சு"

மாறன் சொன்னதை அவன் தந்தை ஆமோதிக்க, நடேசன் "ஆமாம்! ஆமாம்!" என்று இரட்டிப்புக் குரல் கொடுக்க - நடேசன் வீட்டார் அதிகமாக விசாரிக்கவில்லை. 'என்னமோ, ஏதோ' என்று பயந்தவர்கள், மகனைப் பார்த்ததே போதும் என்று விட்டுவிட்டார்கள்.

மாறனும் தந்தையும் விடை பெற்று வீட்டை அடைந்து, தூங்க முயன்ற போது, மறுநாள் பிறந்துவிட்டது. அதா வது மணி பன்னிரண்டாகிவிட்டது.

மறு நாள். மாறன் பள்ளிக்குப் புறப்படும்முன், மனோகரனும் நடேசனும் வீட்டுக்கு வந்து அவனைச் சந்தித்தார் கள். நடேசனைக் காப்பாற்றியதற்கு மனோ வாய் ஓயாமல், மீண்டும், மீண்டும் நன்றி தெரிவித்துக் கொண் டிருந்தான். அதற்குள் இளங்கோவும் அருள் மொழியும் அங்கே வந்துவிட்ட னர். நடேசனுக்கு நடந்ததை மாறன் காலையிலேயே அவர்களுக்குத் தெரி வித்திருந்தான்.

அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பேசினார்கள்.

"நடேசா! உன்னைக் கடத்திய கார் எண் தெரியுமா? கடத்தியவர்களை

"அந்த எழுத்தாளர், கதை எழுதும்போது ஒரு குச்சியைப் பக்கத்திலேயே வெச் சிருக்காரே! எதுக்கு?"

"கற்பனைக் குதிரையைத் தட்டி விடறதுக்காகவாம்!"

- குட்டி பிரசன்னா, கரூர்



மீண்டும் பார்த்தால் அறிந்து கொள்ள முடியுமா?'' என்று அருள்மொழி கேட்டான்.

"ரெண்டு கார் எண்களும் தெரியும். ஆட்களையும் அடையாளம் காட்ட முடியும்'' என்றான் நடேசன்.

''ஆளைக் கடத்தும் வேலைக்குப் பயன்படுத்தும் கார் எண்ணெல்லாம் போலியாயிருக்கும்னு எங்கப்பா சொன்னார். நடேசா, கார் எண்ணைத் தவிர வேறெ ஏதாவது நினைவிலே நிற்குதா?'' - இளங்கோ கேட்டான்.

சில விநாடி யோசித்த நடேசன், ''காரை தள்ளச் சொன்னப்போ, நான் டிக்கி மேலே கையை வச்சித் தள்ளினேன். அந்த இடத்திலே, பெயிண்ட் உதிர்ந்த இடம், ஒரு தாமரை மாதிரி இருந்தது. இப்பவும் ஞாபகம் இருக்கு.'' என்றான்.

''நடேசா, நீ சொன்ன எண்ணுள்ள காரையோ, பெயிண்ட் உதிர்ந்து தாமரை தெரியற காரையோ, இல்லே உன்னைக் கடத்தின ஆசாமிகளையோ பார்த்தால் உடனே எங்களுக்கு போன் செய்.'' என்றான் இளங்கோ.

''நடேசா, நீ கூடிய வரையில் தனியே போகாதே, மனோகூடவே இரு. சாலையோரமா கார் நிற்கறதைப் பார்த்தா, ஒதுங்கிப்போ! எச்சரிக்கையோடு போ!'' - இது அருள்மொழியின் அறிவுரை.

ஆளாளுக்கு அறிவுரை சொன்னார்கள்.

நடேசன் எல்லாவற்றுக்கும் "சரி! சரி!" என்றான்.

அடுத்த மூன்று நாட்கள் எதுவும் நடக்கவில்லை.

நான்காம் நாள் மனோவும் நடேசனும் பள்ளிக் கூடத்துக்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் சாலையின் போக்குவரத்து நெரிசலில், வாகனங்கள் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன. வைணவக் கல்லூரியைக் கடக்கும்போது, நடேசனின் பார்வை கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வாகனங்களில் படிந்திருந்தது.

திடீரென்று நடேசன் நின்றான். 'மனோ' என்று அழைத்தபடி, ஒரு கையால் அவனைப் பற்றி நிறுத்தினான்.

மனோகரன் நின்றான்.

நடேசன் நெரிசலில், நகர முடியாமல் நின்று கொண்டிருந்த ஒரு வெள்ளை அம்பாசிடர் காரைச் சுட்டிக் காட்டினான்.

''மனோ, டிக்கியில் பாரு, தாமரை வடிவில் பெயின்ட் உதிர்ந்திருக்கு. என்னைக் கடத்தியது இந்த கார்தான். கார் எண்ணிலும் மாற்றமில்லை.'' என்றான் நடேசன்.

மனோ அந்த காரைப் பார்த்தான். அவன் கண்களும் தாமரையைக் கண்டன.

''மனோ, என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. நீ இந்த காரைத் தொடர்ந்து போ. நான் மாறனுக்கு போன் செய்யறேன்.'' என்று கூறிவிட்டு போனைத் தேடி ஓடினான் நடேசன்.

மனோ கண்காணித்த கார், திடீரென்று புறப்பட்டு வேகமாக ஓடத் தொடங்கியது. மனோ அதன் பின்னே ஓடினான்.

காரின் வேகத்தை மனோவின் காலின் வேகம் பிடிக்க முடியுமா?

ஆனாலும் மனோ ஓடிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

ஓவியப் போட்டி

தட்டையான அலகுடன் அசைந்து, அசைந்து செல்லும் வாத்துகளைப் பார்த்திருப்பீர்கள். வாத்துகள் நிலத்தில் நடந்து செல்லலாம்; தண்ணீரில் நீந்தலாம்; கூட்டமாகவோ, குடும்பமாகவோ, தனித்தோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் கற்பனைக்கேற்றபடி வண்ணம் தீட்டி அனுப்புங்கள்.

சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைத் தரவும். கடைசி தேதி : 2.11.2001

கேட்கட்டுமா டாக்டர்?

● க. குமரன், மதுரை – 20

? இளவயதில் முடி நரைக்க என்ன காரணம், டாக்டர்?

! இள வயதில் முடி நரைக்க நிறைய காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானது பரம்பரை. அடுத்தது சத்துக்குறைவு. இரும்புச் சத்தும் புரதச்சத்தும் உணவில் குறைந்தால் இளநரை ஏற்படும். தூக்கமின்மை, மன உளைச்சல், இரத்தச் சோகை, தைராய்டு இயக்குநீர் அதீதச் சுரப்பு, பிட்யூட்டரிச் சுரப்பிக் குறைபாடுகள், அடிசன் நோய் ஆகியவற்றாலும் இளநரை ஏற்படலாம். அடிக்கடி நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளைச் சாப்பிடுவதும், அடிக்கடி எக்ஸ்ரே எடுப்பதும் இளநரைக்கு வழி வகுக்கும். பல் வேதிப்பொருள்கள் கலந்த எண்ணெயைப் பயன்படுத்தினாலும் இளநரை தோன்றலாம். மனஉளைச்சலைத் தவிர்ப்பதும், ஊட்டச் சத்துணவில் கவனம் செலுத்துவதும் இளநரையைத் தவிர்க்க உதவும் வழிகளாகும்.

இளவயதில் முடி நரைப்பது ஏன்?

● இரா. கமலா, வல்லம்


? காது கேட்காதவர்களுக்கு இப்போது புதிய கருவி ஒன்றைப் பொருத்துகிறார்களாமே? அது என்ன, டாக்டர்?


! உள் காதில் பாதிப்பு இருந்து காது முழுமையாகக் கேட்காதவர்களுக்கு 'காக்ளியர் இன்பிளான்ட்' எனும் கருவி பொருத்தப்படுகிறது. இது உள்காது செய்கின்ற பணியைச் செய்து விடுகிறது. அதனால் காது நன்றாகக் கேட்கிறது. இந்தக் கருவியின் விலை அதிகம் (இலட்சக் கணக்கில்).

● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? சிறுநீரகத்தில் கல் உள்ளது என்பதை எப்படி அறிந்து கொள்வது டாக்டர்?

! சிறுநீரகக் கல் பல வகைப்படும். சிறுநீரகக் குழாய்க் கல், சிறுநீரகப் பைக் கல், சிறு நீரகத் தாரைக் கல் என அவை அழைக்கப்படுகின்றன. சிறு நீரகத்தில் கல் இருந்தால்





இடது அல்லது வலது பக்கக் கீழ் முதுகுப் பக்கங்களில் வலி ஏற்படும். சிறுநீரகக் குழாயில் கல் இருந்தால் வலி அடி வயிறு வரை பரவும். வாந்தி வரும். நீர்க்கடுப்பு ஏற்படும். சிறுநீர் அளவு மற்றும் வேகம் குறையும். சிறுநீரில் இரத்தம் கலந்து வரும். காய்ச்சல் வரலாம். சிலருக்கு எந்த வித அறிகுறியும் இல்லாமல் சிறுநீரகத்தில் கல் இருக்கலாம். வயிற்றை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் அல்லது ஸ்கேன்

செய்து பார்த்தால் சிறுநீரகத்தில் கல் உள்ளதா, இல்லையா என்பதைத் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம்.

● திவ்யா, திப்பிராஜபுரம்

? எனக்கு வயது பத்து. நான் இரவில் படுக்கையில் சிறு நீர் கழித்து விடுகிறேன். இது எதனால்? என்ன சிகிச்சை?







! சிறுவர், சிறுமியருக்கு இப் பிரச்னை இயல்பாகவே ஏற்படும். பெரும்பாலோருக்குப் பயம், பதற்றம், ஏமாற்றம், கோபம், தோல்வி ஆகிய மனநலப் பிரச்சினைகள்தான் இதற்கு மூல காரணமாக உள்ளன. சிலருக்குச் சிறு நீர்ப் பையில் கோளாறு இருக்கலாம். சிறுநீர்ப் பையில் பாதிப்பு, அடைப்பு, கொள்ளளவு குறைவு ஆகிய குறைபாடுகள் இருந்தாலும் இந்தப் பிரச்னை உண்டாகும். இவற்றுக்கு ஸ்கேன் செய்து பார்த்து பாதிப்பிருந்தால் சிறுநீரகச் சிறப்பு மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். இந்தப் பாதிப்புகள் எதுவும் இல்லாதபோது, இப் பிரச்னையைத் தீர்க்க தற்போது பல வகை மாத்திரைகள் வந்துள்ளன. மருத்துவரின் நேரடி ஆலோசனையின் பேரில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இறுதியாக, ஒரு சிறு முதலுதவி முறை இது – வழக்கமாக இரவில் படுக்கையில் சிறுநீர்க் கழிக்கும் நேரத்தைக் கணக்கிட்டு, அதற்குச் சற்று முன்பாகவே அலாரம் வைத்து எழுந்து, சிறுநீர்க் கழித்து விட்டுப் படுத்துவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும். இப்படி சில வாரங்களுக்குப் பழக்கப்படுத்தி விட்டால், அதே நேரத்திற்கு விழிப்பு வந்து விடும்.

● ஆ. குழல்வாய்மொழி, குமுளி

?பைபாஸ் அறுவை சிகிச்சை என்றால் என்ன டாக்டர்?

! பை பாஸ் என்றால் 'புறவழி' என்று பொருள். நேர்வழியில் ஏதாவது தடை ஏற்படும்போது புறவழியைப் பயன்படுத்துகிறோம் அல்லவா? அம்மாதிரிதான். உடலில் எங்காவது இயல்பான இரத்த ஓட்டம் தடைப்படுமானால் அதற்கு மாற்று ஏற்பாடாகப் புறவழியைப் பயன்படுத்த சிகிச்சை தரப்படும். இது குறிப்பாக இதயத்திற்குத் தேவைப்படும் சிகிச்சையாகும். இதயத்தின் தசைகளுக்கு 'இதயத்தமனிகள்' எனும் மூன்று மிகச் சிறிய தமனிகள் இரத்தம் வினியோகிக்கின்றன. இந்தத் தமனிகளில் ஏதாவது ஒன்றில் அல்லது மூன்றிலும் அடைப்பு ஏற்பட்டு விட்டால், இதயத்திற்கு வர வேண்டிய இரத்தம் வந்து சேராது அல்லவா? அப்போது இதயம் செயலிழந்து மரணம் ஏற்பட்டு விடும். இதைத்தான் நாம் 'மாரடைப்பு' என்கிறோம். இதைத் தவிர்க்க 'பைபாஸ் அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. அப்போது இதயத்தில் அடைப்பு ஏற்பட்ட பகுதிகளை அப்படியே விட்டு விட்டு, அடைப்பின் மேற்புறத்தையும் கீழ்ப்புறத்தையும் புதிய இரத்தக் குழாய் கொண்டு வெளிப்புறமாக இணைத்து விடுவார்கள். இதற்குக் கால்பகுதியில் அல்லது மார்புப் பகுதியில் உள்ள இரத்தநாளம் வெட்டி எடுக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகிறது. இது ஓர் உயிர் காக்கும் அறுவை சிகிச்சை முறையாகும்.

டாக்டர் கு. கணேசன்

ஓவியப் போட்டி முடிவுகள்!

நாய்கள் பலவிதம்


'நாய்கள்' என்ற தலைப்பில் செப்டெம்பர் இதழில் போட்டி அறிவித்ததும் பல்வேறு விதமான நாய்களை வரைந்து அசத்தி விட்டீர்கள். அவற்றுள் பரிசு பெற்ற நாய்கள் இங்கே அணிவகுக்கின்றன.



முதல் பரிசு :
எஸ். ஸ்ரீவித்யா,
ஆறாம் வகுப்பு, டவுன் மேல் நிலைப் பள்ளி, கும்பகோணம்.



இரண்டாம் பரிசு :
ல. சத்யசாய் சுதன்,
ஆறாம் வகுப்பு, புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு.



மூன்றாம் பரிசு :


எஸ். முருகன், அரசினர் மேல் நிலைப் பள்ளி,


சிங்களாந்தபுரம், நாமக்கல் மாவட்டம்.

ஆறுதல் பரிசு :

சி. காயத்ரி,

ஐந்தாம் வகுப்பு, நர்மதா நேஷனல் மாடல் மேல் நிலைப் பள்ளி, கோவை.





ஆறுதல் பரிசு :

கே. மாரிமுத்து,

தி.நகர், சென்னை.

படமெடுத்த ராஜநாகம்!

ஆர். பொன்னம்மாள்

அஸ்ஸாமில் வாழ்ந்த குசும்பத் தேவரின் மகன் சங்கரத் தேவர். குசும்பத் தேவர் பரம்பரையே சரஸ்வதி அனுக்கிரகம் பெற்றவர்கள். ஆனால் சங்கரனோ அதற்கு நேர்மாறாக இருந்தார், பிறந்த மூன்றாம் நாள் தாயை இழந்தவர் விபரம் புரிவதற்குள் தந்தையையும் இழந்தார். பாட்டி ஒருத்திதான் ஆதரவு. மலையளவு இருந்த சொத்துகள் எலுமிச்சை அளவாகி விட்டன.

“பாட்டி! சங்கரன் நல்ல பாம்பை நெருப்பில் பொசுக்கிக் கொண்டிருக்கிறான்” என்று ஒரு பையன் அறிவிப்புக் கொடுத்தான். பாட்டி ஓடினாள்.

“அடப்பாவி! சர்ப்பதோஷம் உன்னைச் சும்மா விடுமா? அடங்காப்பிடாரி!” என்று கத்தினாள்.

வெளியேற முயன்ற நாகத்தைக் கோலால் சங்கரன் நெருப்புக்குள் தள்ள, சுற்றியிருந்த சிறுவர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

“பாட்டி! இந்தப் பாம்பு மாதவனைக் கடித்திருந்தால் மாதவன் செத்திருப்பான். அதற்குத்தான் இந்தத் தண்டனை! நல்ல பாம்பு என் சினேகிதன் வழிக்கு வராமலிருந்தால் நான் ஏன் இதைத் துன்புறுத்துகிறேன்” என்றான் சங்கரன்.



பாட்டி சங்கரன் ஜாதகத்தை ஒரு பெரியவரிடம் காண்பித்தாள். “இது ராஜயோக ஜாதகம். ஒரு ராஜநாகத்தால் அவன் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படும். பேரும் புகழும் பெறுவான்” என்றார் அவர்.

ஒருநாள் நடுப்பகல். வெயில் சுட்டெரித்தது.

“பாட்டி! பள்ளிக்கூட மரத்தடியிலே சங்கரன் படுத்திருக்கிறான். அவன் தலைப் பக்கம் பாம்பு!” என்று செய்தி சொன்னான் ஒருவன்.

பாட்டி பள்ளிக்கூடத்திற்கு ஓடினாள். அங்கே அவள் கண்ட காட்சி! சங்கரன் தலைப்பக்கம் ஒரு ராஜநாகம் படமெடுத்து


நின்றது. சுற்றி ஒரே கூட்டம்.

சங்கரனை எந்த வினாடி பாம்பு தீண்டுமோ என்று அனைவரும் கலங்கி இருந்தனர். ''நாகேஸ்வரி! கிருஷ்ணா! சங்கரனைக் காப்பாற்று'' என்று பிரார்த்தித்த பாட்டி, மெல்லிய குரலில், ''சங்கரா! முழிச்சுக்கோ. தலைமாட்டிலே நல்ல பாம்பு படமெடுத்து நிற்கிறது. கையை நீட்டாதே! இறங்கினாற் போல் எழுந்திரு'' என்றாள்.

சங்கரன் எழுந்ததும் பாம்பு படத்தைச் சுருக்கிக் கொண்டு சரசரவென்று மறைந்தது. சங்கரன் கிருஷ்ணர் மீது ஒரு ஸ்லோகம் பாடினான்.

சங்கரன் ஒரு வருங்கால மகான் என்றே மக்கள் போற்றினர். ''யமுனையிலே வசுதேவர் நடக்கும் போது மழைக்காக குடைபிடித்தார் ஆதிசேஷன். நம் சங்கரத்தேவருக்கு வெயிலுக்கு நிழல் கொடுத்திருக்கிறார்'' என்று மக்கள் பேசிக் கொண்டனர்.

பாட்டியின் வற்புறுத்தலால் சூர்யா என்ற பெண்ணை மணந்து கொண்டார் சங்கரன். அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்று விட்டு மறைந்தாள். அவளுக்கு மணம் செய்து கொடுத்தபின் துறவறம் பூண்டார் சங்கரத் தேவர்.



சங்கரத் தேவர் தனது பதினேழு சீடர்களுடன் க்ஷேத்திராடனம் சென்றார். அவருடைய ஆசிரியரும், குடும்பப் புரோகிதரும் கூட அவரது சிஷ்யர்களானார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் புனிதப் பயணம் செய்தார். பத்ரிநாத்தையும் துவாரகையையும் விட்டு வரவே முடியாமல் கண்ணீர் சொரிந்தார். எங்கே பண்டிதர்களின் உபன்யாசம் நடந்தாலும் கேட்கத் தவற மாட்டார். நிறைய வாதங்களிலும் கலந்து கொண்டார்.

கிருஷ்ண பக்தரான சங்கரத் தேவர் பாகவத ஸ்லோகங்களை அஸ்ஸாமிய மொழியில் மொழிபெயர்த்து எளிய பாடல்களாகவும், நாடகங்களாகவும் உருவாக்கினார்.

திருவிழாக்களிலும், மேடைகளிலும் அந்த நாடகங்கள் நடிக்கப்பட்டு பாமர மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

குறுநிலத் தலைவர் பதவி அவரைத் தேடி வந்தது. மன்னரிடம் பணிவுடன் அதை நிராகரித்தார்.

ஒரு ஊரில் அர்ச்சகர், பெரிய மனிதர்; ஊர் மக்கள் எல்லோரும் கூடி நின்று, ''ஸ்வாமி! வெளியூரிலிருந்து உங்களைத் தரிசிக்க வந்த ஒரு வாலிபன் கால் தவறி கிணற்றில் விழுந்து விட்டான். இப்போது தான் வெளியே எடுத்தோம். புனருத்தாரணம் செய்த பிறகே தாங்கள் கோயிலுக்குள்

வரமுடியும்'' என்றனர்.

சங்கரத்தேவர் அந்த இளைஞனின் உடலை தன் முன் கிடத்தச் சொன்னார். "கிருஷ்ணா! மச்சமாயும், கூர்மமாயும் நீரில் கிடந்தவனே! மூவுலகையும் அளந்தவனே! இறந்த சகோதரர்களை உயிர்ப்பித்து தாயின் முன் நிறுத்தியவனே! வருண லோகம் சென்று தந்தையை மீட்டவனே! காளிங்க நர்த்தனம் செய்தவனே" எனப் பல வாறு அஸ்ஸாமிய மொழியில் வேண்டினார்.

வாலிபன் தூங்கி விழித்தது போல் எழுந்தான். ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டன. பூர்ணகும்ப மரியாதையோடு சங்கரத் தேவரை கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர்.

பூரி ஜகந்நாதத்திலிருந்து ஜகதீஷ் மிஸ்ரா என்ற சம்ஸ்கிருத பண்டிதர் சங்கரத் தேவரைத் தேடி வந்தார்.

"ஐயா! பகவான் என் கனவில் தோன்றி, 'காமரூபம் போய் சங்கரனைப் பார். அவனது மாணவனாக இரு' என்று உத்தர விட்டார். சீடனாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று நமஸ்கரித்தார்.

சங்கரன் எழுந்ததும் பாம்பு படத்தைச் சுருக்கிக் கொண்டு சரசரவென்று மறைந்தது. சங்கரன் கிருஷ்ணர் மீது ஒரு ஸ்லோகம் பாடினான்.

சங்கரத்தேவர் அவருடன் ஆற்றங் கரைக்கு வந்தார். அங்கே ஒரு பெரியவர் இருவருக்கும் பதினெட்டு நாட்கள் பாடம் நடத்தினார். பதினெட்டாம் நாள் மாலை ஆற்றில் சந்தியாவந்தனம் செய்ய இறங்கிய பெரியவர் அதிலேயே மறைந்து போனதும் தான் அவர் திருமால் என்று இருவரும் தெரிந்து கொண்டனர்.

சேரிகளில் சங்கரத் தேவர் உபன்யாசம் செய்ததால் அவர் ஆலயத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது.

மகாதேவ் என்ற பக்தர் சங்கரத் தேவரின் சொற்பொழிவுகளைத் தவறாமல் கேட்பவர். சங்கரத்தேவரை வீட்டிற்கு அழைத்து பாதபூஜை செய்ததால் அவரை ஜாதியிலிருந்து ஒதுக்கி வைத்தனர் உயர்குடியினர்.

இந்த நிலையில் மகாதேவின் தந்தைக்குத் திதி வந்தது. அந்தணர்கள் 'சங்கரனையே வைத்து சிரார்த்தம் செய்து கொள்' என்று சொல்லி விட்டனர். இதைச் சங்கரத்தேவரிடம் கூறினார் மகாதேவ்.

''கவலைப்பட வேண்டாம். நாளை திதிக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து வை. அவர்கள் சொன்னபடி நானே வந்து நடத்தித் தருகிறேன்'' என்றார் சங்கரத் தேவர்.

மறுநாள் சங்கரத்தேவர் மகாதேவின் இல்லத்துக்குள் நுழைகையில் கூடவே மூன்று பண்டிதர்கள் நுழைந்தனர். அதன்பின் மூன்று ஹரிஜன வாலிபர்களும் வந்தனர்.

என்ன நடக்கிறதென்று பார்க்க அந் தணர் கூட்டம் கையில் ஆயுதங்களோடு எதிர் வீட்டுத் திண்ணையில் அமர்ந் திருந்தது.

"ஜாதிப் பெருமையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டான் மகாதேவ். அவனை அடித்துப் போட வேண்டும்'' என்று கொதித்துப் பேசினர்.

மூன்று அந்தணர்களும் திதி மந்திரம் சொல்ல, மூன்று ஹரிஜன வாலிபர்களும் சாப்பிட்டனர். காரியங்கள் முடிந்ததும் மூன்று அந்தணர்களும் மறைந்தனர். மூன்று ஹரிஜன வாலிபர்களையும் அழைத்துக் கொண்டு சங்கரத்தேவர் வந்தார்.

ஆயுதங்களோடு வந்த கூட்டத்தின் கண்களிலிருந்து மூவரும் மறைந்தனர். சங்கரத்தேவர் ''மூன்று அந்தணர்களும் மும்மூர்த்திகள். இந்த மூன்று ஹரிஜன வாலிபர்களும் அக்னி, வருணன், வாயு. காற்றுக்கு நிறமில்லை. அக்னி அணைந்தால் சாம்பல். நீரும் மண்ணைப் பொறுத்து தான் நிறம் காட்டுகிறது. கண்ணன் யாதவ குலத்தில் பிறந்து மாடு மேய்த்தான். சிவ பெருமான் பாவ ஆத்மாக்களைக் கடையேற்ற மயானத்தில் ஆடுகிறார். பிரம்மா பாவி, புண்ணியவான், நல்லவன், கெட்டவன் என்று பாரபட்சம் காட்டாமல் படைப்பவர். உங்களுக்கு ஏன் இந்த வேற்றுமை?'' என்று கூற பண்டிதர்கள் மனம் திருந்தி சங்கரத்தேவரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.

ஹரிஜனங்களுக்காக பாகவதத்தை அஸ்ஸாமி மொழியில் மொழிபெயர்த்த மகான் சங்கரத் தேவர். 1569–ல் பக்தர்கள் நடுவில் மஹா சமாதியடைந்தார்.



புதிர் உலகம்

I. பனையூருக்கு மந்திரவாதி ஒருவன் வந்தான். பல செயல்களைக் காட்டி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினான்.

"கடைசி நிகழ்ச்சி இதுதான்" என்றவன் தன் கையிலிருந்த பெட்டியை அவர்களுக்குக் காட்டினான்.

"இது சாதாரண பெட்டி அல்ல; மந்திரப் பெட்டி. நீங்கள் இதற்குள் எவ்வளவு பணம் போட்டாலும் உடனே அந்தப்பணத்தை இரட்டிப்பாக்கித் தரும். முயற்சி செயது பார்க்க யார் வேண்டுமானாலும் வரலாம்" என்றான்.

கூட்டத்தில் இருந்த ஒருவன் தன் பணத்தை இரட்டிப்பாக்க நினைத்து, மந்திரவாதியின் அருகே வந்தான். அவனிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான் மந்திரவாதி. "நான் உன் பணத்தை மந்திரப் பெட்டியில் வைத்து இரட்டிப்பாக்கும் ஒவ்வொரு முறையும் நீ எனக்கு நான்கு ரூபாய் தர வேண்டும்" என்றான். அவனும் நான்கு ரூபாய் தர ஒப்புக் கொண்டான்.

உடனே மந்திரவாதி அவனிடமிருந்த பணத்தை வாங்கினான். மந்திரப் பெட்டியில் வைத்து மூடினான். பிறகு "சூ! மந்திரக்காளி!" என்று சொல்லிப் பெட்டியைத் திறந்தான். என்ன வியப்பு! பெட்டிக்குள் இருந்த பணம் இரட்டிப்பாகி இருந்தது. பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன் சொன்ன சொல் தவறாமல் மந்திரவாதிக்கு நான்கு ரூபாயைக் கொடுத்தான். மீதி இருந்த பணத்தை மந்திரப் பெட்டிக்குள் வைத்து இரட்டிப்பாக்கினான். அதிலும் மந்திரவாதிக்கு நான்கு ரூபாய் தந்தான். மூன்றாம் முறையும் பணத்தை இரட்டிப்பாக்கி நான்கு ரூபாயை மந்திரவாதியிடம் தந்தான்.

இப்போது அவனிடம் பணம் இல்லை. அப்படியானால் மந்திரப் பெட்டியில் வைப்பதற்குமுன் அவனிடம் இருந்த பணம் எவ்வளவு?

-பி. கார்த்திகா, ஜெய்கோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளி, சென்னை.

II. ஒருவன் திங்கட்கிழமை வேலைக்குப் போனான். மிகக் குறைந்த சம்பளம் கிடைத்தது. செவ்வாய்க் கிழமை வேலைக்குப் போனான். திங்களன்று கிடைத்ததைவிட, ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. புதன் கிழமை வேலைக்குப் போனான். செவ்வாய்க் கிழமை கிடைத்ததைவிட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. வியாழக்கிழமை புதன் கிழமை கிடைத்ததைவிட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. வெள்ளிக்கிழமை வியாழக் கிழமை கிடைத்ததைவிட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. வெள்ளிக்கிழமை மாலை வீட்டுக்கு வந்து தன்னிடம் இருந்த பணம் முழுவதையும் (அதாவது திங்கள் முதல் வெள்ளி வரை) எண்ணிப் பார்த்தான். மொத்தம் 300 ரூபாய் இருந்தது. அவன் ஒவ்வொரு நாளும் பெற்ற கூலி எவ்வளவு?

- ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்


III. பள்ளியில் விளையாடிவிட்டு வீட்டுக்குள் வந்தோம். "உங்களுக்கு அப்பம் செய்து வைத்திருக்கிறேன் எடுத்துக் கொள்ளுங்கள்" என அம்மா சொன்னார். அடுக்களைக்குள் நுழைந்து, இருந்த அப்பங்களில் பாதியை என் தம்பி தின்று விட்டான். இனிப்பு பட்சணம் பிடிக்காத நான் அரை அப்பம் மட்டும் எடுத்துக் கொண்டேன். அம்மாவுக்கு என்று ஒரு அப்பத்தை வைத்து விட்டோம். அப்படியானால் அம்மா முதலில் வைத்திருந்த அப்பங்கள் எத்தனை?

- கே. பிரீத்தி சுதா, புனித அலாய்சியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

விடை : 64ம் பக்கம்


எறும்பைத் தின்னும் விலங்குகள்

ஆழி




ராட்சச எறும்புத்தின்னி பாலூட்டி விலங்கு. அமெரிக்கச் சதுப்பு நிலக் காடுகளில் வசிக்கக் கூடியது.

இதன் முக்கிய இரை எறும்புகளும் கறையான்களும். இதன் வால் மிக நீளமானது. அடர்த்தியான உரோமங்களை உடையது. இதற்கு மிக மெலிந்து நீண்ட தலை. குறுகலான வாய். பற்களே இல்லை. இது படுக்கும் போது, வாலைச் சுருட்டிப் போர்வை போல் அமைத்துக் கொள்ளும்.



ராட்சச எறும்புத்தின்னியின் நாக்கு மிக நீண்ட குச்சி போல் இருக்கும். நாக்கு, மார்பு எலும்பிலிருந்து வளர்ந்து வந்திருக்கும்; சுமார் 62 செ.மீ. நீளம் இருக்கும். நாக்கில் ஒருவித பசை இருந்து கொண்டே இருக்கும். புற்றுக்களுக்குள் நாக்கை நுழைத்தால் ஏராளமான எறும்புகளும் கறையான்களும் நாக்கில் ஒட்டிக் கொண்டு வந்துவிடும்!





இதன் நகங்கள் உறுதியான கொக்கிப் போல் வளைந்து இருப்பதால் எவ்வளவு பெரிய கறையான் புற்றுக்களையும் உடைத்து விடும்!



இந்த எறும்புத்தின்னியின் எதிரி வேங்கைப் புலி. வேங்கை இதைக் கொன்றுவிடும். ஆனாலும் சாவதற்கு முன், இது தன் கூரிய நகங்களால் வேங்கையின் உடல் முழுவதும் கிழித்துப் பயங்கரமான காயங்களை உண்டாக்கிவிடும். இந்தக் காயங்களின் காரணமாக வேங்கைப்புலியும் நாளடைவில் இறந்து விடுவது உண்டு. இதன் குட்டிகளை யாராவது தூக்க வந்தால் அவர்மீது பாய்ந்து நகங்களால் கிழித்துவிடும். அந்தக் காயத்தினால் மனிதர்களும் இறந்து விடுவது உண்டு.

வெனிஸீலாவில் உள்ள இதன் பெயர் 'டாமண்டுவா எறும்புத் தின்னி'. இதன் இரை . எறும்புகளும் கறையான்களும். இதற்கு நீண்ட வால் இருந்தாலும் அதில் அடர்த்தியான உரோமங்கள் இல்லை. இதற்கும் பற்கள் கிடையாது. நீண்ட குச்சி போன்ற நாக்கு உண்டு.





பங்கோலின் (அழுங்கு) என்னும் 'எறும்புத் தின்னி' இருக்கிறது. உடல் முழுதும் கடினமான செதில்கள் இருக்கும். எறும்புகள், கறையான்கள், அவற்றின் முட்டைகள் ஆகியவற்றை மட்டுமே தின்னும். இந்தியா மற்றும் ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்கிறது. பகலில் தூங்கி, இரவில் மட்டும் வெளிப்படும்!

பெரிய பங்கோலின் தலையிலிருந்து வால்வரை 180 செ.மீ. நீளம் இருக்கும். வால் மட்டும் 100 செ.மீ. நீளம். உறுதியான வளைந்த நகங்கள். இதற்குப் பார்க்கும் சக்தியும் கேட்கும் சக்தியும் குறைவு. ஆனால், மோப்ப சக்தி அதிகம். இது ஒரு சாதுவான பிராணி.





பங்கோலின், ஆபத்து வரும்போல் தெரிந்தால் உடலைப் பந்து போல் சுருட்டிக் கொள்ளும். அப்போது இதை எளிதில் பிரிக்க முடியாது.

இது தன் வளைக்குள் நுழைந்தவுடன், தன் வாலைச் சுருட்டி வைத்துப் பொந்தின் வாசலை அடைத்துக் கொள்ளும்.

எந்தப் பிராணியும் இதன் வாலைக் கடித்து உள்ளே நுழைந்துவிட முடியாது!


'பங்கோலின்' என்றால் மலாய் மொழியில் 'உருண்டை' என்பது பொருள்.






பங்கோலின், ஒன்று அல்லது இரண்டு குட்டிகளை ஈனும். குட்டியின் உடல் செதில்கள் மிருதுவாக இருக்கும். தாய், தன் குட்டியைத் தன் வாலின் மேல் உட்கார வைத்துக் கொண்டு போகும்.


பங்கோலின் செதில்களை மோதி-ரங்களாகச் செய்து அணிந்து கொள்கிறார்கள். அதனால் மூட்டு வலி முதலிய நோய்கள் குணமாகும் என்று நம்புகிறார்கள்.





எறும்பைத் தின்னக்கூடிய 'ஆர்மடில்லோ' என்னும் பிராணியும் இருக்கிறது. இது, எறும்புகள், கறையான்கள் தவிர, சிறு தாவரங்கள், பூச்சிகள் முதலியவற்றையும் தின்னும். இது பெரிய ஆர்மடில்லோ. நீளம் சுமார் ௯௦ செ.மீ.


ஆர்மடில்லோவில் மேலும் 3 வகைகள் இருக்கின்றன:



'ஒன்பது கட்டு' ஆர்மடில்லோ





கூடளி




பெலூடோ

ஆர்மடில்லோவின் எலும்புக் கூட்டின் மேல், ஆமைக்கு உள்ளது போல் கடினமான கவச ஓடு உள்ளது. ஆனால், இந்தக் கவச ஓடு பல செதில்களுடன் அசையக் கூடியது.







ஆர்மடில்லோ பல குட்டிகள் போடும். இதில் அதிசயம் என்னவென்றால், எல்லா குட்டிகளும் ஆணாக இருக்கும், அல்லது எல்லா குட்டிகளும் பெண்ணாக இருக்கும்!



எறும்புத்தின்னிகளில் 'ஆர்த்வர்க்' என்பதும் ஓர் இனம். இதை 'எறும்புக் கரடி' என்றும் 'தரைப் பன்றி' என்றும் சொல்வார்கள். இதற்குத் தாடையில் பற்கள் உண்டு. ஆனால் முன்பக்கம் பற்கள் கிடையாது. நாக்கு தட்டையாகப் பசையுடன் இருக்கும். யாராவது பார்த்துவிட்டால் மிக வேகமாக ஓடி மறைந்துவிடும்.



தென்கிழக்கு ஆசியாவில் வாழ்கிறது 'முள் எறும்புத் தின்னி.' உடல் முழுதும் முள்ளம் பன்றிக்கு உள்ளது போல் முட்கள் குத்திட்டு நிற்கும். எதிரிகளைக் கண்டால் உடலைப் பந்து போல் சுருட்டிக் கொள்ளும். இதன் நாக்கும் நீண்டு பசையுடன் இருக்கும்.




இந்த முள் எறும்புத் தின்னியின் வயிற்றில் ஒரு பை உண்டு. அதில் இருந்து கொண்டுதான் குட்டி பால் குடித்து வளரும். குட்டியின் உடலில் முட்கள் மிருதுவாக இருக்கும். முட்கள் கடினமானவுடன் தாயின் வயிற்றைக் குத்தத் தொடங்கும். அப்போது குட்டியை வெளியே விட்டுவிடும்.

இவற்றைத் தவிர கீரி போன்ற 'வளையக் கோட்டு' எறும்புத் தின்னியும் உண்டு.



எறும்புத் தின்னிகளில் மிகச் சிறியது,'பிக்மி' எறும்புத் தின்னி. இது மிகவும் அரிதானது. உலகில் இதன் எண்ணிக்கை மிகவும் குறைவு.





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், படக்கதைகள் மட்டுமா? நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....


....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097

மன்னனின் கடமை!



கந்தர்வபுரி நாட்டை நாகேந்திரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். நாகேந்திரன் நாள்முழுக்க தன் நாட்டு மக்களைக் காப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தான். அந் நாட்டு மக்களும் நாகேந்திரனைப் பெரிதும் போற்றினர்.

ஒருநாள் தேவலோகத்தில் இந்திர சபையில் நாகேந்திரன் பற்றிய பேச்சு அடிபட்டது. அங்குள்ள தேவர்கள் பலர் அவனைப் போன்று தயாள குணத்தில் சிறந்தவர் எவரும் இவ்வுலகில் இல்லை என்று கூறினார்கள். தன்னாட்டு மக்களுக்காக எவ்வளவு பெரிய தியாகத்தையும் செய்யக் கூடியவன் என்று கூறினார்கள்.

அப்போது தேவர்களில் ஒருவர் எழுந்து, "அந்த மன்னன் நாகேந்திரனை நான் பரீட்சித்துப் பார்க்க விரும்புகிறேன்" என்றார். எல்லோரும் சம்மதித்தார்கள்.

அந்தத் தேவர் ஒரு அரக்கனாக உருமாறிக் கொண்டு அரண்மனைக்குச் சென்று மன்னனைச் சந்தித்தார்.

"மன்னா உன் நாட்டைச் சேர்ந்த குடிமகன் ஒருவனை எனக்குப் பலியிட வேண்டும். அவ்வாறு செய்தால் நீயும் உன் நாடும் சுபிட்சமாய் வாழும். ஒரு வேளை நீ பலி இடவில்லை என்றால் உன்னையும் உன்

நாட்டையும் அழித்து விடுவேன்" என்றான் அரக்கன்.

மன்னனோ சற்றும் மனம் கலங்காமல், "எத்தகைய துயர் வந்தாலும் என் நாட்டு மக்கள் யாரையும் பலியிட மாட்டேன்" என்று கூறினான்.

உடனே அரக்கன், "என் பலம் தெரியாமல் என்னுடன் மோத எண்ணுகிறாய். இதோ பார்!" என்று தன் கையை மேலே உயர்த்தினான். ஒரு பெரிய மலை ஒன்று அவன் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. மக்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். அப்போது அரக்கன், "மன்னா உனக்கு அமாவாசை நாள் வரை அவகாசம் தருகிறேன். அதற்குள் எனக்குப் பலி கொடுத்து விடு. இல்லையேல் இந்த மலை உன் நகரத்தையே அழித்து விடும்" என்று எச்சரித்துச் சென்றான்.

அந்த நாட்டில் கந்தன் என்ற ஏழை விவசாயி ஒருவன் இருந் தான். அவனுக்கு ஐந்து பெண்களும், ஒரு மகனும் இருந்தனர். மகன் பெயர் வீரன்.

யாராவது ஒருவனை அரக்கனுக்குப் பலியிட்டு நாட்டைக் காப்பாற்ற மன்னன் மறுத்து விடவே, மக்கள் அனைவரும் சேர்ந்து ஐந்து லட்சம் பணம் சேர்த்தனர். யாராவது அரக்கனுக் குப் பலியாகச் சம்மதித்தால் ஐந்து லட்சம் சன்மானம் கொடுக்கப்படும் என்று அறிவித்தனர்.

அந்த அறிவிப்பைக் கேட்ட வீரன், தானே அரக்கனுக்குப் பலியாகிவிட்டால் இந்த நாடும் காப்பாற்றப்படும்; தனது ஐந்து சகோதரிகளுக்கும் நல் வாழ்வு கிடைக்குமென்று எண்ணி, தான் அரக்கனுக்குப் பலியாவதாகக் கூறினான்.

மக்கள் அனைவரும் வீரனை மன்னனிடம் அழைத்துச் சென்று பலியிட வேண்டும் என்று கூறினார்கள். அதைக் கேட்ட மன்னன், "என் நாட்டைக் காப்பாற்ற யாராவது ஒருவனைப் பலியிடத்தான் வேண்டுமென்றால், நானே பலியாகி இந்த நாட்டைக் காப்பாற்றிக் கொள்கிறேன்" என்று கம்பீரமாகக் கூறினான்.

அப்போது அந்த அரக்கன் தேவர் உருவத்திற்கு மாறி, "நாகேந்திரா! உன் தியாக உணர்வைச் சோதிக்கவே நான் வந்தேன். உன் தயாள குணத்தால் இந்த நாடு எல்லா வளமும் பெற்று, நீ நீடூழி வாழ்வாய்" என்று வாழ்த்திச் சென்றார்.

– ஹ. அருண்குமார், பத்தாம் வகுப்பு, சேதுமாணிக்கம் மேல்நிலைப் பள்ளி, மேலச்சீருதை, இராமநாதபுரம்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 மூ	ங்	கி	ல்	■	ர்	ணி	ண்	க 2
ஞ்	■	■	வ	■	யி	■	■	ம்
சு	■	■	3 சே	■	4 த	■	■	ப
று	யி	5 க	■	6 கு	■	7 கு	ரா	ன்
■	■	■	8 ந	ந்	தி	■	■	■
9 யு	கா	தி	■	தி	■	10 மு	ல்	லை
த்	■	■	11 பு	■	12 பு	■	■	றி
த	■	■	ஞ்	■	த்	■	■	ற்
ம்	ச	வா	13 சு	■	ரி	ள	ள்	வெ 14

புதிர் உலக விடைகள்

I. மூன்றாம் முறை பணம் இரட்டிப்பாவதற்குமுன் அவனிடமிருந்தது இரண்டு ரூபாய், இரட்டித்தபின் நான்கு ரூபாய். அதை மந்திரவாதியிடம் தந்தான். இரண்டாம் முறை இரட்டிப்பாக்கி மந்திரவாதிக்கும் கொடுத்த பிறகு இரண்டு ரூபாய் இருக்க வேண்டும். ஆக ஆறு ரூபாய். இரண்டாம் முறை இரட்டிப்பாவதற்கு முன் அவனிடம் இருந்த தொகை மூன்று ரூபாய். அதே போல் முதல் முறை பணத்தை இரட்டிப்பாக்கி மந்திரவாதிக்குக் கொடுத்த பிறகு மூன்று ரூபாய் இருக்க வேண்டும். ஆகவே, அவன் கொண்டு வந்த தொகை மூன்றரை ரூபாய்.

II. *திங்கள் - 48, செவ்வாய் (48+6) = 54, புதன் (54+6) = 60, வியாழன் (60+6) = 66, வெள்ளி (66+6) = 72. மொத்தம் 300*


III. *3*

குழந்தைகள் திருவிழா

இந்தியாவில் மறைந்த பாரதபிரதமர் நேரு, குழந்தைகளிடம் மிகவும் அன்புடன் பழகிய காரணத்தால் அவரது பிறந்த நாளான நவம்பர் 14ஆம் தேதி 'குழந்தைகள் தினம்' எனக் கொண்டாடப்படுகிறது. இதேபோல் வேறு சில நாடுகளிலும் குழந்தைகளைக் கௌரவிக்கும் பொருட்டு வெவ்வேறு வகையில் 'குழந்தைகள் தினம்' கொண்டாடுவது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஜப்பான் : ஆண்டுதோறும் இங்குள்ள பெண் குழந்தைகள் மார்ச் 3 ஆம் தேதியை ஆவலோடு எதிர்பார்ப்பதுண்டு. அன்றைய தினத்தை 'ஹினா மாட்சூரி' என்று குறிப்பிடுவார்கள். முழுக்க முழுக்க பொம்மைகளுக்காகவே ஒதுக்கப்படும் இந்த நாள் நாம் கொண்டாடும் நவராத்திரி போன்றதுதான். ஏறக்குறைய எல்லாக் குழந்தைகளுமே தங்களுக்கென்று பொம்மைகள் வைத்திருப்பார்கள். இப்படி தங்களுடைய குழந்தைகள் பொம்மைகளுடன் விளையாடுவது பொறுமையையும் கௌரவத்தையும் அளிப்பதாக ஜப்பானிய மக்கள் கருதுகிறார்கள்.

பத்து நாட்களுக்கு முன்னதாகவே வீட்டு வரவேற்பறையில் குழந்தைகளின் தாய் கொலு வைப்பது போல் படிகளை அமைத்து குழந்தைகளின் பொம்மை சேகரிப்புகளை ஒவ்வொரு படியிலும் வைத்து அலங்கரிப்பதுண்டு. இந்தச் சமயத்தில் ஜப்பானில் எல்லா கடைகளிலும் இதற்காகவே 'ஹினா' என்ற பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் பொம்மைகளை இனிப்பு மற்றும் கார வகைகளிலும் செய்து விற்பனை செய்வது உண்டு.



மே 5 ஆம் தேதி ஜப்பானிய ஆண்குழந்தைகள் 'கோடோமோனோ – ஹி' என்று குறிப்பிடப்படும் தினத்தைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுவார்கள். குடும்பத்தினர் அனைவரும் கூடி வண்ண வண்ண காற்றாடிகளைப் பறக்க விட்டு மகிழ்வார்கள். வீட்டிற்குள் ராணுவ வீரர் தோற்றத்தில் பொம்மைகளை நிறுத்தி வைப்பதோடு சிறுவர்களை ஐரிஸ் இலை கலந்த தண்ணீரில் குளிக்க வைப்பார்கள். காற்று, கறுப்பு



அண்டாமல் இருக்க இப்படி செய்வதுண்டாம். அங்குள்ள இளம் சிறுவர்கள் சக்தியுடனும் உறுதியுடனும் வளர வேண்டுமென்பதற்காக ஜப்பானில் இந்த விழாவை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.


ஸ்வீடன்: இந்த நாட்டைப் பொறுத்தவரை டிசம்பர் 13ஆம் தேதி ஆண்டுதோறும் மிக நீண்ட இருண்ட குளிர்கால இரவாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் செயின்ட் லூசியா நினைவு நாளாகக் கொண்டாடப்படுகிறது. இவர் ஒளி மற்றும் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார் என்பதற்காக மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி வைப்பதோடு உலர்ந்த திராட்சைத் தூவப்பட்ட மஞ்சள் நிறமுள்ள பன் சாப்பிடுவார்கள். பாடல்களைப் பாடி மகிழ்வார்கள்.


வியட்நாம் : ஆண்டுதோறும் இலையுதிர் காலத்தின் மத்தியில் ஒரே ஒருநாள் நிலா வெண்மையாகவும் அதி வெளிச்சமாகவும் வானத்தில் தோன்றுவதுண்டாம். அந்த நாளை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்து அனைத்து குழந்தைகளும் தங்கள் நண்பர்களுடன் ஒன்றுகூடி லாந்தர் விளக்குகளைக் கைகளில் ஏந்தி 'ட்ரஸ்க் தூ' என்பவர் நினைவாக தெருக்களில் ஊர்வலமாக வருவார்கள். நிலா முகமூடி அணிந்து. நிலா கேக் சாப்பிட்டு பாடல்களைப் பாடி மகிழ்வதுண்டு.

ஜாம்பியா : பிப்ரவரி மாதந்தோறும் கொண்டாடப்படும் அறுவடை நாள்தான் இந்த நாட்டில் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் குழந்தைகள் நகோனி ராணுவ வீரர்களைப் போல் உடையணிவதுண்டு. உள்ளூர் முக்கிய பிரமுகர்களில் 12 பேர் விழா நடக்கும் இடத்திற்கு நடனக் கலைஞர்களுடன் வந்து கூடுவார்கள். நகோனி மக்களில் மன்னர் போன்று ஒருவரை வேடமணியச் செய்து அமர வைத்து அவர் முன்பு ராணுவ வீரர்கள் போல் நடனமாடுவார்கள். சிறந்த நடனக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பார்கள்.

ஸ்ரீலங்கா : புத்த மதத்தினரின் 'ஈஸலா பெரஹெரா' என்கிற விழா ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதத்தில் இங்கு நடைபெறும். யானைகள், நடனக் கலைஞர்கள், வித்தைக்காரர்கள், மேள வாத்தியக்காரர்கள் மற்றும் தீப்பந்தம் எறிபவர்கள் என அனைவரும் ஒன்று கூடி மிகப் பெரிய ஊர்வலமொன்றை பத்து நாட்கள் தொடர்ந்து இரவு முழுக்க நிறுத்தாமல் நடத்துவார்கள். கடைசி நாளன்று 'புத்தரின் பல்' பேழையில் வைத்து யானை மீது அமர்த்தி நகரத்தின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டு செல்வார்கள். அதுவே குழந்தைகள் தினமாகவும் கருதப்படுகிறது!

- அ. குமார், பெங்களூர்.


பகையை வென்ற அரசர்!
கதை: ஆர். சாரதா
படம்: மகேஸ்
மன்னர் வீரேந்திரர் அரண்மனையில் ஒருநாள் –
மந்திரியாரே! நம் நாட்டுக்குப் பகை அரசர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை வென்றாக வேண்டும்.
மன்னா! பகைவர்கள் சிற்றரசர்கள்தான். நம் மீது படை எடுக்கும் துணிவு கிடையாது.
அப்படி நினைக்கக்கூடாது. பகைவர்கள் என்றுமே ஆபத்தானவர்கள் தான்!
எனக்கு விருப்பம் இல்லை. பிறகு உங்கள் இஷ்டம்.
ஒரு மாதத்துக்குப் பின்–
அரசே! அதோ பகை அரசர்கள், எதற்கு வருகிறார்கள்?
பதறாதீர்கள். நான்தான் விருந்துக்கு அழைத்திருக்கிறேன்.
வாருங்கள் அரசர்களே! நலமா? தங்கள் நாட்டு மக்கள் சௌக்கியமா?
மன்னர் பகைவர்களை வஞ்சகமாக அழிக்கப் போகிறாரா?
நீங்கள் அனைவரும் ஒரு வாரம் தங்கி விருந்துண்டு செல்ல வேண்டும்.
அப்படியே செய்கிறோம் அரசே!


ஒரு வாரம் சென்றது.
அரசே! இன்று நாங்கள் எங்கள் நாடுகளுக்குக் கிளம்புகிறோம். எங்கள் வாழ்நாளில் இந்த உபசரிப்பை மறக்க முடியாது. தாங்கள் எங்கள் நாடுகளுக்கு வருகை தர வேண்டும்.
விரைவில் வருகிறேன். சென்று வாருங்கள்.
அவர்கள் சென்ற பின் –
அரசே! தாங்கள் போக்கு எனக்குப் புரியவில்லை. பகைவர்களை உபசரித்து, பரிசளித்து அனுப்பி வைத்திருக்கிறீர்கள். ஏன் இப்படி?
பகைவர்களா? அப்படி யாரும் கிடையாதே. நான்தான் அவர்களை வென்று விட்டேனே!
என்ன சொல்கிறீர்கள்? ஒன்றும் புரியவில்லை.
பகைவர்களை வெல்வது என்றால் அவர்கள் நாட்டின் மீது போர் தொடுப்பதல்ல.
அப்படி யென்றால்?
என் அன்பாலும் உபசரிப்பாலும் அவர்களை வென்று நண்பர்களாக்கிக் கொண்டேன். இனி எனக்குப் பகைவர்களே கிடையாது!
அன்பால் எதையும் சாதிக்கலாம் என்பதை நிரூபித்து விட்டீர்கள் அரசே!

தேன்தமிழ் வாரியார்



மல்லையா பாகவதருக்கும் கனகவல்லி அம்மையாருக்கும் பதினொரு பிள்ளைகள். நான்காவது பிள்ளைதான் கிருபானந்தவாரியார்.

வாரியாருக்குக் கல்வியும், ஞானமும் அவர் தந்தை மல்லையா பாகவதர் அருளிய கொடைகள் என்றால், வாரியார் சுவாமிகள் வாழ்க்கை சீலம் மிக்கோங்க சிறப்பான அடித்தளம் அமைத்தவர் அவருடைய அன்புத் தாயார் கனகவல்லி அம்மையாரே ஆவார்.

ஒருநாள் தாயார் கனகவல்லி அம்மையார் குழந்தைகளை அழைத்து உணவு பரிமாறினார். மற்றக் குழந்தைகளோடு உணவு உண்ண வந்த சிறுவன் கிருபானந்தவாரி உட்காருகிற தரை சுத்தமாக இல்லாததால் அதிலே உட்கார்ந்தால் உடை அழுக்காகிவிடக்கூடும் என்ற நினைப்பில் உடையை சற்றே மடக்கிக் கொண்டு உட்கார்ந்தார். இதைக் கவனித்த அவரது தாயார் கிருபானந்தவாரியைப் பார்த்து, "நிலம் அழுக்காய் இருப்பதால் ஆடையை மடக்கிக் கொண்டு உட்காருகிறாய். அழுக்குத் தரையில் உட்கார உன் மனம் கூசுகிறது. சற்று நேரம் அமரும் இடமே அசுத்தமாக இருக்கிறது என்று அதில் அமர நீ யோசிக்கிறாய் என்றால் குடியேறும் கோயிலாகிய உன் உள்ளத்தில் அழுக்கிருந்தால் அதில் ஆண்டவன் வந்து அமருவானா? எனவே உன் உள்ளத்தில் ஆசாபாசங்கள் என்னும் அழுக்கு அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது ஆண்டவன் அமரும் திருக்கோயிலாகும் என்றார். அன்புத் தாயாரின் இந்த அறிவுரை சிறுவன் கிருபானந்தவாரிக்கு அன்றே வழங்கப்பட்ட அருளுரை போல் அவர் நெஞ்சில் பதிந்துவிட்டது.

வாரியாருக்கு மூன்று வயதாகும்போதே தந்தையார் எழுத்தறிவிக்கத் தொடங்கிவிட்டார். ஐந்து வயதானபோது அவரே நூலை எடுத்துப் படிக்க ஆரம்பித்துவிட்டார்.

வாரியார் விடியற்காலையிலேயே எழுந்து தந்தையிடம் இசைப் பயிற்சிப் பெறுவார். பிறகு இலக்கிய - இலக்கணப் பாடங்கள் கேட்பார். தேவாரம், திருவாசகம் பயிலுவார். மதிய உணவிற்குப் பிறகு சரித்திரப் பாடம் போதிப்பார் தந்தை. இப்படியாக துள்ளித் திரிய வேண்டிய பிள்ளைப் பருவம் கல்வி - கல்வி என்று கற்பதிலேயே கழிந்திருக்கிறது வாரியாருக்கு.

எட்டு வயதில் வெண்பா இயற்றவும் கவிப் பாடவும் வல்ல புலமை வாரியாருக்குத் தந்தையால் வாய்க்கப் பெற்றது.

தந்தையார் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராய் இருந்தபடியாலும், நிறைய சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது பழக்கமாக இருந்த படியாலும் தந்தை மல்லையா மகனை



யும் தன்னுடன் பிரசங்கங்களுக்கு அழைத்துச் செல்லும் பழக்கத்தை மேற்கொண்டார். தந்தை சொற்பொழி வாற்றும்போது தந்தைக்குப் பக்கவாத்தியமாகப் பிடில் வாசிப்பதும், பின் பாட்டுப் பாடுவதுமாயிருந்த பிள்ளைக் குத் தானும் ஒரு நாள் தந்தையாரைப் போலவே புராணப் பிரசங்கம் செய்து பாராட்டும் புகழும் பெற வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.

திருத்தணிக்குப் பக்கத்திலே உள்ளது வளைகுளம் என்ற ஊர். அங்கே ஆண்டு தோறும் வைகுண்ட ஏகாதசி அன்று விடியவிடியப் புராணப் பிரசங்கங்கள் நடக்கும். மக்கள் கண்விழித்துக் கேட்பார்கள்.

ஒரு ஆண்டு மல்லையாவுக்கு அங்கே போக முடியாது போயிற்று. காஞ்சிபுரம் சென்று விரிவுரை நிகழ்த்த வேண்டிய கட்டாயம். என்ன செய்வது என்று தெரியாது திகைத்த மல்லையா, மகனை அழைத்து நிலைமையை விளக்கி, வளைகுளம் போய் பிரசங்கம் நிகழ்த்திவரக் கட்டளையிட்டார். தந்தை சொல்லை மந்திரமாக ஏற்றுத் தனயனும் வளைகுளம் வந்து சேர்ந்தார்.

மல்லையா பாகவதர் நிகழ்த்த வேண்டிய பிரசங்கத்தை அவர் மகன் நிகழ்த்துவதா? திகைத்துப் போயினர், பிரசங் கம் கேட்கக் கூடியிருந்த மக்கள். என்றாலும் பொன் வைக் கும் இடத்தில் பூவை வைப்போம் என்று ஒருவாறு சமா தானம் அடைந்து பேசவிட்டனர்.


தந்தைக்காகப் பேசவந்த பிள்ளை வாய் திறந்தது. தமிழ் தேனாய்ப் பொழிந்தது. இரவு ஒன்பது மணிக்குத் துவங்கிய பிரசங்கம் விடியற்காலை ஐந்து மணிக்கு முடிந்தது. பிரசங்கம் கேட்டவர்கள் இப்படி ஒரு சொற்பொழிவை இதுவரை கேட்டதில்லை என்று பாராட்டினர்.

விரிவுரையாற்ற காஞ்சி புரம் போன தந்தைக்குச் சின்னஞ்சிறு பிள்ளையைத் தனியாக சொற்பொழிவாற்ற வளைகுளம் அனுப்பி னோமே? என்ன ஆயிற்றோ எப்படி பேசினானோ? என்ற கவலை. விடிந்ததும் ஊருக் குத் திரும்பக்கூட மனம் இல்லாமல் நேரே வளை குளம் வந்தார். வந்தவருக் குப் பெரிய இன்ப அதிர்ச்சி. பிரசங்கம் எப்படி நடந் திருக்குமோ என்ற கவலை யோடு வந்தவரை ஊர் மக் கள் அன்போடு வரவேற்று ''ஐயா, எங்கள் ஊருக்குப் பிரசங்கத்திற்கு இனி நீங் கள் வரவேண்டாம். தம்பியை அனுப்பி வைத்தாலே போதும். அவர் கதை கூறு வது எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்றனர்.

தந்தை உளம் நெகிழ்ந்து போனார்.

- சு. கண்ணகி, மிட்டூர்.

வண்ணம் சொரியும் வானம்!



வானில் வானவில்லின் அழகைக் கண்டு வியந்திருக்கிறோம். உதய வானின் வண்ணக் கலவையையும், அந்தி வானத்து அற்புத அழகையும் ரசித்திருக்கிறோம். இவை காணப்படுவது வானின் கிழக்கு, மேற்கில் மட்டுமே! சூரியன் எழாத, பூமியின் வட, தென் துருவங்களில் கூட, சூரியக் காற்று, விளையாட்டுக் காட்டி, வானில் வர்ண ஜாலங்களைக் கொட்டுகிறது என்றால், நம்புவதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் இது உண்மை. பூமியின் துருவப் பகுதிக்குச் சென்று பார்த்தால், வானில் தினந்தோறும் வளைந்து, நெளிந்து நடனமாடும் வண்ணத் தேவதைகளின் அழகைக் காண கண் கோடி வேண்டும். இதன் பெயர் 'அரோரா'. இதன் பொருள், விடியலின் பெண் கடவுள்' என்பதாகும். வட, தென் துருவப் பகுதியில் இரவில் வான் வெளியில் பளபளக்கும் வியத்தகு 'ஒளிச்சிதறல்' ஏற்படுகிறது. இதனால் பொழுது விடிந்து விட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது. இந்த 'அரோரா' பூமியின் இரு துருவங்களுக்கு அருகிலுள்ள 'காந்தப் புலத்தில் ஒரே நேரத்தில் ஏற்படுகிறது.

இதனை முதல் முதலில், கி.பி. 1621, செப்டெம்பர் 21ம் நாள், பிரெஞ்சு வானவியல் மற்றும் கணிதவியல் அறிஞரான 'காஸ்ஸெண்டிதாக்' பார்த்துப் பரவசப்பட்டார். 1773, பிப்ரவரி 13ம் நாள் 'கேப்டன் குக்' என்பவர் இந்தியப் பெருங்கடலுக்கு மேல் 57° தீர்க்க ரேகையில் தெற்கு அரோராவைப் பார்த்து மகிழ்ந்தார். அதன் பின்னரே வடதுருவத்துக்கு அருகில் ஏற்டுவதை 'அரோரா பொராலிஸ்' (வடக்கு விடியல்) என்றும், தென் துருவத்திற்கு அருகில் தெரிவதை 'அரோரா ஆஸ்திரேலிஸ்' (தெற்கு விடியல்) என்றும் அழைத்தனர்.

பூமியிலிருந்து அரோராவைப் பார்க்கும்போது, வானில் பல நூறு கி.மீ. பரப்புக்கு மத்தாப்பூக்களைக் கொளுத்தியது போன்ற ஒளி வெள்ளம் தெரியும். பூமியின் மேல் பல நூறு கி.மீ. உயரத்தில் பூமியின் முகத்தை அரோராவின் ஒளிக்கோடுகள் மூடியுள்ளது போல் தெரியும். இந்த ஒளித் திரையின் கனம் 1 கி.மீ. விடக் குறைவாகவும், பல்லாயிரக்கணக்கான கி.மீ. பரப்பளவு விரிந்து, பரந்தும் காணப்படுகிறது. இவை குதிப்பது போலவும், மேலெழும்பி, கீழிறங்கி துருவவானைக் கடந்து செல்வது போலவும் தோன்றுவதால், இது 'வானில் அசையும் ஒளி' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் ஒளிக் கோடுகள் 65° - 80° வரையிலான தீர்க்க ரேகைகளில் மட்டுமே காணப்படுவதால், துருவப் பகுதிகள் தவிர உலகின் மற்ற பகுதிகளில் காண முடிவதில்லை. இருப்பினும் அரிதாக 1872ல் பிப்ரவரி 4ம் நாள் இந்தியாவில் பம்பாய் மற்றும் பல பகுதிகளிலிருந்தும் பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர்.

கிரேக்கர்கள் காலத்திலிருந்து, இந்த நூற்றாண்டின் துவக்கம்வரை, அரோராவுக்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டன. அரிஸ்ட்டாடில் காலத்திலும், மக்கள் அரோராவைப் பார்த்து, குறிப்பு எழுதி வைத்துள்ளனர்.

பூமியின் துருவ வளி மண்டலத்தில், சூரியக் கதிர்களின் ஒளிச் சிதறலால், வண்ணக் கலவை கொட்டப்பட்டு, மினுக்குகின்றன என நீண்ட காலமாக நம்பப்பட்டது. ஆனால் பூமியின் துருவப் பகுதி வான் மண்டலத்திலிருந்து வெளியேறும் அணுத்துகள்களும், மூலக் கூறுகளும் சூரியக் காற்றிலிருந்து வெளிப்படும் அதிக சக்தி மிக்க எலெக்ட்ரான்களால் மிக வேகமாகத் தாக்கப்படுகின்றன. அதனால் மின் வெளிப்பாடடைந்து ஒளியைக் கக்கி, வண்ணக் கலவையான அரோராவை உண்டு பண்ணுகின்றன என்ற உண்மையை இயற்பியலாளர்கள், சமீபத்தில் தான் அறிந்துள்ளனர்.

பூமியின் காந்தப் புலத்திலுள்ள பொருட்கள் எப்போதும் செறிவேற்றப்பட்ட 'பிளாஸ்மா' நிலையில் உள்ளன. 'எலெக்ட்ரான்கள்' மோதப்பட்டு, மின்காந்த நிலைபாடுகளில் மாற்றம் ஏற்படுவதாலேயே, அரோரா அசைவதுபோலத் தோன்றுகிறது. புவி காந்தப்புலத்திற்கும், சூரியக் காற்றுக்கும் இடையிலுள்ள, சிக்கலான பிணைப்பின்படி 'அரோரா' சில இடங்களில் குறைவாகவும், சில இடங்களில் அதிகமாகவும் ஏற்படுகிறது. புவியின் 'காந்தப் புலம்' அசுர மின் உற்பத்தி சாதனமாய், சுமார் 10 மில்லின் மெகாவாட் மின் சக்தியை வெளிச்சவடிவில் தோற்றுவிக்கிறது. புவி காந்தப் புலத்தில் உருவான மின் சக்தி, பூமியின் காந்தப் பரப்பை ஒட்டியே பரவுவதால், அரோராவும், பூமியின் காந்தப் பரப்பை ஒட்டியே காணப்படுகிறது.

அரோராவின் தலைப் பகுதி, பூமிக்கு 500 கி.மீ. உயரத்திலும், அடிப்பகுதி 100 கி.மீ. உயரத்திலும் காணப்படுகிறது. சூரியனிலிருந்து மழைபோல் பொழிந்து கொண்டிருக்கும் முடுக்கிவிடப்பட்ட எலெட்ரான்கள் கிளர்ச்சியுற்று, பூமியின் மேலுள்ள ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஜன் அணுக்கள் மேல் மோதுகின்றன. அந்த மோதலின் வேகத்திற்கும், அணு மற்றும் மூலக் கூறுகளின் கிளர்ச்சிக்கும் தகுந்தாற்போல், பல்வேறு அலை நீளமுடைய வண்ணக் குவியல்களைத் தோற்றுவிக்கின்றன. ஆக்ஸிஜன் மற்றும் சூரிய எலெக்ட்



ரான்கள் மோதலால், பச்சையும் வெண்மையும் கலந்த ஒளி வெள்ளத்தை, வானில் சுமார் 110 கி.மீ.லிருந்து 250 கி.மீ. உயரத்தில் ஏற்படுத்துகின்றன. குறைந்த சக்தியுள்ள எலெக்ட்ரான்களுடன் ஆக்ஸிஜன் தாக்குதல் நடத்துவதால், வானத்தில் 300லிருந்து 400 கி.மீ. உயரம் வரை பளபளக்கும் சிவப்பு நிறத்தை வானில் வீசுகிறது. நைட்டிரஜன் அணுக்களால் பச்சை ஒளி வெள்ளம் வான் பரப்பில் பாய்ச்சப்படுகிறது. நைட்டிரஜன் அயனிகள் அதைச் சுற்றி, நீல வட்ட ஒளியை தோற்றுவிக்கிறது. நைட்டிரஜன் மூலக் கூறுகள் சிவந்த ஊதா நிறமுள்ள ஒளி அலைகளை அரோராவின் ஓரங்களில் உண்டு பண்ணுகின்றன.

அரோரா, தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருப்பது நம் புவிக்கோளின் இயல்பு. அரோரா, ஒவ்வொரு நாள் இரவும் இருதுருவங்களுக்கு அருகிலும் தெரியும். பகலில் சூரியனின் பிரகாசத்தால், கண்களுக்கு அவ்வளவாகப் புலப்படுவதில்லை. துருவத்தில் காந்தப்புலம் இல்லாததால், துருவத்தின் அருகில் உள்ள காந்தப் புலத்தின் மையத்தில் அரோரா உருவாகிறது. அலாஸ்கா, வட கனடா, கிரீன்லாந்தின் தென்பகுதி, ஐஸ்லாந்து, நார்வேயின் வடக்கு கடற்கரை மற்றும் சைபீரியக் கடற்கரைகளில் 'வடக்கு அரோரா' தெரிகிறது. 'தெற்கு விடியல்' மனித வாடையற்ற அண்டார்ட்டிகாவின் மையப் பகுதியில் உருவாகி, அண்டார்டிகா மற்றும் இந்தியப் பெருங்கடலின் தெற்கு வானில் காட்சியளிக்கிறது.

நீங்கள் வட துருவத்திற்குச் சென்றால் அந்தி சாய்ந்து இரவு கவியும் நேரத்தில் துவங்கி, இரவு விடைபெறும் விடியற்காலை வரை, அரோராவின் அற்புத கோலங்களை ரசித்துக் கொண்டே இருக்கலாம். அரோராவைப் பார்க்க விரும்புபவர்கள், இன்றும்கூட அலாஸ்கா மற்றும் கிரீன்லாந்திற்கு மாலையே சென்று, இரவு வரை தங்கி கண்டு மகிழ்கின்றனர். மாலை 7 மணியிலிருந்து 10 மணி வரை சின்னக் கீற்று போல், வளைவாய் தெரியும். பின்னர் வளைக் கதிர்களாய், விசிறியாய் விரிந்து பல நூறு கி.மீ. தூரம் பரவிக் காட்சி தரும். நடு இரவுக்குப் பின் அரோரா அடிக்கடி வித்தியாசமாக உருவெடுத்து வானத்தை நிறைத்த பின், வேகமாய் மறைந்து விடும். பின்னர் துருவ வானில் பசுமை மற்றும் வெண்மை ஒளி மட்டுமே தெரியும். பிறகு இவை வெளிச்சத்திட்டுகளாகி, புகை மூட்டம் போலத் தோன்றும். இத் திட்டுகள் தோன்றி மறைவது ஒரே சீராக ஒரு வினாடியிலிருந்து 30 வினாடிகள் வரை நீடிக்கும். இவை 'துடிக்கும் அரோராக்கள்' என அழைக்கப்படுகின்றன. காலை நெருங்கியதும் திட்டுக்கள் மறைந்து விடுகின்றன.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஏன் இப்போதும்கூட அரோராவின் உறுமல் குரலைக் கேட்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பல வித்தியாசமான ஒலிகளை அரோரா எழுப்பினாலும் 'ஷ்விஷ்' என்ற ஒலியும், லேசாக உடைபடும் ஒலியுமே பெரும்பாலும் கேட்கிறது. ஒளிக் கீற்றுகள் உச்சிவானில் பரவும்போது இவ்வொலிகள் கேட்கின்றன. ஆனால் பூமியின் 90 கி.மீ. உயரத்திற்கு மேல் காற்றின் கனம் மிக மெல்லியதாக உள்ளதால், அதற்கு ஒலியலைகளைச் சுமந்து செல்லும் திறன் இல்லை என்றும், பின் எப்படி ஒலியலைகளைக் கேட்க முடிகிறது என்றும் விஞ்ஞானிகள் வியக்கின்றனர். இப்பகுதியைக் கடந்து செல்லும் விண்கலங்கள் பாதிப்புக்குள்ளாவதாகவும், மின்சாதனங்கள் பழுதுபடுவதாகவும் தெரிய வருகிறது.

- ஸ்வாதி

"அவரு ஏன் கோழியைப் பாத்து பயந்து ஓடறாரு?"

"அவர் ஒரு புத்தகப் புழு வாச்சே!"

- ஆர். பிரசன்னா, கரூர்.



பாப்பா, தம்பி வாருங்கள்!



அழகான யானை ஒன்று
கையை ஆட்டுது
அதன் அருகினிலே முயல்குட்டி
அமர்ந் திருக்குது.


சிறுத்தைப் புலி சிங்கத்தோடு
அமர்ந் திருக்குது
சிரத்தை யோடு அதனருகில்
பசுவும் நிற்குது.

பானை வயிறு செட்டியார்
இவற்றைப் பார்க்கிறார்
யானை போலத் தலையாட்டி
இனிதே சிரிக்கிறார்.

நெல்லுக் கட்டு தூக்கிவரும்
பெண்கள் ஒருபுறம்
கதிரடித்துக் களம் உயர்த்தும்
உழவர் மறுபுறம்

எங்கள் வீட்டுக் கொலுவிலே
எத்தனையோ பொம்மைகள்
பார்த்து ரசித்து மகிழவே
பாப்பாதம்பி வாருங்கள்!

மு.நடராசன்,
புதுச்சேரி



நல்ல பாடகராவது எப்படி?

அன்று காலையிலிருந்தே அந்த இளம்பெண் படப்படப்பாக இருந்தாள். "ரிலாக்ஸ்மா... ரொம்ப டென்ஷனாகாதே" என்று அப்பா எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அவளுக்கு டென்ஷன் சிறிதும் குறையவில்லை. சங்கம் கலா குரூப் என்ற அமைப்பு நடத்திய பாட்டுப் போட்டியில் நான்கு சுற்றுகளில் வென்று, மாநில் அளவில் சிறந்த பாடகி என்ற விருது கை எட்டும் தூரத்தில் இருந்தது. நீதிபதிகளாக ஏ.ஆர். ரகுமான் உட்பட பல் இசை விற்பன்னர்கள். தனக்கு இசை போதித்த ஆசான்களையெல்லாம் மனத்தில் இருத்தி, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மேடையேறினாள். மைக்கின் முன் நின்றபோது அந்த மேடையை மறந்தாள், எதிரிலிருக்கும் நீதிபதிகளை, ரஸிகர்களை மறந்தாள். கண் மூடிக் கொண்டு தனது தேனிசைக் குரலில் எல்லோரையும் அசத்தினாள். சில மணி நேர சஸ்பென்ஸுக்குப் பிறகு மைக்கில் முதல் பரிசு அவளுக்குத்தான் என்று அறிவிக்கப்பட்டபோது அவள் கால்கள் தரையில் இல்லை. பாயஸத்துடன் ஐஸ்கிரீமும் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷம் இருக்குமோ, அது போல இருந்தது. பரிசு கொடுத்த ஏ.ஆர். ரகுமான், அவளுக்குத் திரைப்படத் துறையில் பின்னணி பாட வாய்ப்பு கொடுப்பதாகச் சொன்னபோது. ஏ.ஆர். ரகுமான் இசையில் அவள் பாடிய முதல் பாடல் இந்திரா படத்தில் வரும் 'நிலா காய்கிறது' பாட்டு சூப்பர் ஹிட். அதன்பின் அந்தப் பெண் முழு நேர பின்னணிப் பாடகியாகிவிட்டாள். இன்று 400க்கும் மேற்பட்ட பாடல்களை தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் பாடியுள்ள அந்தப் பெண்: ஹரிணி!

பெரிய பெரிய சாய்பாபா படங்கள் அலங்கரிக்கும் அவரது ஆழ்வார் திருநகர் வீட்டில், ஹரிணியைச் சந்தித்தோம். "நல்ல பாடகியாக வருவதற்கு நிறையத் 'தியாகம்' செய்ய வேண்டும்" என்று தனது பால்கோவா குரலில் துவங்கினார் ஹரிணி. "பாடகர் அல்லது பாடகியாக வருவதற்கு ஒருவருக்குத் தேவை நல்ல் குரு. அவர் வழிகாட்டுதலில் கடுமையான உழைப்பு. நான்கு வயதிலேயே இசைத் துறையில் பயிற்சியை ஆரம்பித்து விட வேண்டும். வாயைக் கட்டினால்தான் தொண்டைக் கட்டுச் சரியாக இருக்கும். காரம், புளி சாப்பாட்டில் அதிகம் சேர்த்துக் கொள்ளக் கூடாது. ஐஸ்கிரீமுக்கு நிரந்தரமாக டாட்டா சொல்லி விட வேண்டும். அதிகம் பேசக்கூடாது. எப்போதும் சுடுதண்ணீர் குடிப்பது நல்லது. உப்புத் தண்ணீர் கரைசலில் அவ்வப்போது தொண்டையை நனைத்துக் கொப்பளிக்க வேண்டும. பனிக்காலத்தில் தலை ஈரமாகும்வரை வெளியில் சுற்றக் கூடாது. தயிர் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. சுருக்கமாகச் சொல்வதானால் ஜல்தோஷம், தும்மல், இருமல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஏற்ற இறக்கங்களுடன் பாட்டுப் பாடு



ஹரிணி



வதைப் போலவே சொன்னார் ஹரிணி.

ஹரிணியின் முதல் குரு கிரிஜா! நான்கு வயதிலேயே துவங்கிவிட்டது இசைப் பயிற்சி. அப்புறம் ராதா விஸ்வநாதன், சுதா ரகுநாதன், சுகுணா புருஷோத்தமன் என்று படிக்கும் நிலை உயர உயர குருக்கள் மாறிக் கொண்டேயிருந்தனர். "கர்நாடக சங்கீதத்தின் அடிப்படை, கீர்த்தனைகள், அதன் பின்னர் ராக ஆலாபனை, ஸ்வரம் பாடுவது என்று கர்நாடக இசைப் பயிற்சியை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். பத்தாவது படிக்கும் போது ஒரு முழு கர்நாடக கச்சேரி நடத்தும் அளவுக்குத் தேர்ந்துவிட்டேன்" என்கிறார் ஹரிணி. தினமும் நான்கு மணி நேரம் சாதகம் செய்வாராம். "ஒரு நல்ல பாடகியாக வருவதே என் விருப்பமாக இருந்தது" என்கிறார்.

கர்நாடக இசையில் பெற்ற பயிற்சி எந்த அளவுக்குத் திரைப்படத் துறையில் சிறப்பாக பின்னணி பாட உதவுகிறது? "கண்டிப்பாக அது ஒரு கூடுதல் ஆதாயம்தான். சாதகம் செய்யச் செய்ய, நெளிவுகளும், குழைவுகளும், தொண்டைக்குப் பழக்கப்பட்டு ரொம்பவே உபயோகமாக இருக்கும். ஆரோகணம், அவரோகணம் போன்றவை எந்தவித சிரமமுமின்றி கை கொடுக்கும். ஆனால் பின்னணி பாடகிக்கு மிகவும் முக்கியம் குரலை வெளிப்படுத்தும் விதம். எந்த ஹீரோயினுக்காகப் பாடுகிறாரோ, அவருக்குக் குரல் ஒத்துப் போக வேண்டும். இதனால் பல பாடகிகளின் ஒரிஜினல் குரல் வளம் நமக்குத் தெரிய வாய்ப்பில்லை" என்கிறார் ஹரிணி. கர்நாடக இசை என்று மட்டுமல்ல; ஹிந்துஸ்தானி மற்றும் மேற்கத்திய இசை கற்றுக் கொண்டாலும் பின்னணி பாடகிகளுக்கு நல்லதுதான். ஆனால் சம்பிரதாயமாக கற்றுக் கொள்ளாதவர்கள்கூட பின்னணி பாடுவதில் சக்கைப் போடு போடுகிறார்கள் என்கிறார் அவர். ஹரிணியுடன் கணவர் திப்புவும் பிரபல பின்னணிப் பாடகர். "பாட்டுக் கலைஞருக்கு வயது ஒரு பொருட்டல்ல! சுசிலாவும், ஜானகியும் இன்றும் நல்ல குரல் வளத்துடன் இருக்கிறார்கள். ஆண் பாடகர்களை விட பெண் பாடகர்கள் தங்கள் குரல் வளத்தை நன்கு காப்பாற்றிக் கொள்கிறார்கள்" என்கிறார் ஹரிணி.

மெல்லிசைக் குழுக்களில் பாடுவதற்காக இதுவரை பலமுறை வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார் ஹரிணி. குறிப்பாக சிங்கப்பூரில் ஹரிணிக்கு ரசிகர்கள் அதிகம். ஆனால் அடுத்த நாள் ரெகார்டிங் இருந்தால் முதல்நாள் மெல்லிசை கச்சேரிகளில் பாட மாட்டாராம். ரெகார்டிங் அன்று பேசுவதையும் குறைத்துக் கொண்டு தொண்டையைப் பாதுகாப்பாராம்.

"நான் ரொம்பவும் பிரபலமாகாத கால கட்டத்தில் ஒரு கச்சேரிக்காக சிங்கப்பூர் சென்றிருந்தேன். பல பிரபல பாடக, பாடகிகள் வந்திருந்தார்கள். என்னைப் பாடக் கூப்பிட்டபோது ஐந்து நிமிட நேரம் கரவொலிதான்" என்று அனுபவங்களை நிறைவு கூர்கிறார் ஹரிணி. 'நேருக்கு நேர்' படத்தில் வரும் 'மனம் விரும்புதே உன்னை' பாடல் பதிவின்போது இசையமைப்பாளர் தேவா என்னிடம் "இந்தப் பாட்டுக்காக உனக்கு மாநில அரசு விருது கிடைக்கும் பாரும்மா" என்றார். அவர் சொன்னது பலித்தது. அது ஒரு இன்ப அதிர்ச்சிதான். யாருடைய பாராட்டைப் பெரிதாக நினைக்கிறார் ஹரிணி? "பாடகர் ஹரிஹரன் பாராட்டைத்தான்" என்கிறார்.

திரைப்படத் துறையில் சிறந்த பின்னணிப் பாடகியாக பளிச்சிட்டு நிற்பதற்கு திறமையுடன் பொறுமை + அடக்கம் நிறையவே தேவை. சாய்பாபா அருளில் எனக்கு வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கின்றன. என்னுடைய கடமை, குரல் வளத்தைக் காப்பாற்றுவதுதான். கோகுலம் வாசகர்களும் முயன்றால் சிறந்த பாடகர்களாகலாம். வாழ்த்துக்கள்" என்றார் ஹரிணி.

சந்திப்பு: **ப்ரியன்**

படங்கள்: **ராஜன்**

தேனும் தேனீக்களும்

மனிதனுடைய ஆரோக்கிய வாழ்வுக்குச் சவாலாக விளங்கும் பல்வேறு வகையான கடுமையான கொடுமையான நோய்களுக்குக் காரணமாக விளங்கும் பூச்சி வகைகள் கணக்கில் அடங்கா.

இந்நிலையிலும் மக்களுக்குப் பெரும் நன்மை செய்யக்கூடிய சில வகைப் பூச்சிகளும் உள்ளன.

இவ்வாறு நன்மை செய்யும் பூச்சி வகைகளில் பட்டுப் புழுவும், தேனீக்களும் சிறப்பிடத்தைப் பெறுகின்றன.

ஓர் ஆராய்ச்சிப் புள்ளி விவரம் தரும் விளக்கத்தின்படி ஆதி மனிதன் தோன்றியதற்குப் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னரே தேனீக்கள் தோன்றியிருக்கக் கூடும் என்ற விவரம் தெரிய வருகிறது.

அது மட்டுமின்றி தேனின் முழுப் பெருமையையும் பயனையும் நன்கு அறிந்து வைத்திருந்த ஆதி மனிதனுக்கு தேனீக்கள், தேன் அடைகளில் தேனைச் சேகரித்துப் பயன் படுத்துகின்றன என்ற தகவலும் தெரிய வந்திருக்கிறது.

ஸ்பெயின் நாட்டின் ஒரு கிராமத்து மலைப் பாறையொன்றில் காணப்படும் மிகவும் பழமை வாய்ந்த சிவப்பு வண்ண ஓவியம் ஒன்று மேற்சொன்ன தகவலுக்கு ஆதாரமாக உள்ளது.

பல கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓவியம் எனக் கருதப்படும் அந்த ஓவியம் ஒரு கயிற்று ஏணி மீது ஒரு மனிதன் ஏறி மலைப் பொந்து ஒன்றில் தேனீ அடையில் இருந்த தேனைச் சேகரிப்பதைத் துல்லியமாகச் சித்தரிக்கிறது. தேனெடுக்கும் மனிதனை தேனீக்கள் சூழ்ந்திருக்கும் காட்சியும் ஓவியத்தில் இடம் பெற்றுள்ளது.



பண்டைக்கால மக்கள் தேனீக்களைத் தெய்வாம்சம் பொருந்தியனவாகக் கருதினார்கள். தவறு செய்பவர்களைத் தண்டிப்பதற்காகவே தேனீக்களைக் கடவுள் அனுப்பினார் என்று மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கை காரணமாக பண்டை மக்களில் சில பிரிவினர் தேனீக்களைப் பூஜித்து வழிபட்டதாகத் தெரிகிறது.



பண்டைய சில நாடுகளின் அரசாங்கச் சின்னமாகவே தேனீக்களின் உருவம் அமையப் பெற்றிருந்தன. குறிப்பாக எகிப்து நாட்டில் பழங்காலத்தில் தேனீக்களின் உருவம் அரசாங்கச் சின்னமாகக் கருதப்பட்டு வந்ததை அறிய முடிகிறது.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தேனும் தேன் மெழுகும் மதிப்பு



மிக்க வணிகப் பொருளாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

கி.பி.911-ல் ருஷ்ய அரசர் ஒலேக்கும் பைசாந்திய சக்கரவர்த்தியும் செய்து கொண்ட உடன்பாட்டில் தேனும் தேன் மெழுகும் முக்கிய இடம் பெற்றிருந்தன.

கி.பி. 946-ல் கடுங்குற்றம் செய்து விட்ட குடிமகனுக்கு தேனையும், தேன் மெழுகையும் அபராதமாகச் செலுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது.

மிகப் பழங்காலத்தில் உலகத்தின் பல பாகங்களில் மக்கள் தேனீக்களையும் தேனையும் பற்றி அறிந்திருந்தனர். தேனையும் தேன் மெழுகையும் பயன்படுத்தி வந்தனர் என்றாலும் நாளடைவில் அந்த வழக்கம் மெல்ல மெல்ல மாறி வந்திருக்கிறது.

நமது நாட்டில் - சிறப்பாகத் தமிழ் நாட்டில் தேனின் பெருமை நன்கு உணரப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திலேயே தேனீ வளர்ப்பு, தேன் சேகரித்தல் போன்றவற்றில் நவீன உத்திகள் கையாளப்பட்டன.

இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை தேனுக்கிருந்த பெருமையும் பயனும் நீடித்து வந்தாலும் அதற்குப் பிறகு குறிப்பாகச் சொல்வதானால் நம் நாடு வெள்ளையர்களுக்கு அடிமைப்பட்டு உரிமையையும் உணர்வையும் இழந்த பிறகு தேன் சேகரிப்பு முயற்சியில் மக்கள் அதிக அக்கறை காண்பிக்காத நிலை உருவாகி வளரத் தொடங்கி விட்டது.

நம் நாட்டில் - தமிழகத்தில் சுதந்திரம் பெற்ற பிறகு தேனீ வளர்ப்பு, தேன் சேகரிப்பு போன்ற



முயற்சிகள் மீண்டும் தலையெடுத்து வளரத் தொடங்கின.

தமிழகத்தில் அரசாங்க முயற்சியாக காடுகளில் தேன் சேகரிப்பு முயற்சிகள் மிகவும் தீவிரமாக நடைபெற்று வரும் அதே நேரத்தில் வீடுகளில், வீட்டுத் தோட்டங்களில் சுயமாகத் தேனீ வளர்த்து தேன் சேகரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.


இன்று மக்களின் தேவைக்கேற்ற அளவு தேன் உற்பத்தி பெருகவில்லை என்றாலும் தேனுக்குத் தட்டுப்பாடு இல்லாத நிலை இருக்கிறது.

- ஆர்.ஆர். பூபதி

பழிவாங்கும் படலம் பலன் தருமா?

பயங்கரவாதத்துக்கு எதிரான நேச நாடுகளின் போர் ஆரம்பமாகிவிட்டது. அமெரிக்காவும் பிரிட்டனும் இதில் முன்னணி வகிக்கின்றன. வேறு பல நாடுகள் ஒத்துழைப்பு தருகின்றன. ஆஃப்கானிஸ்தான் நாட்டில் பயங்கரவாதிகளின் ஒளிவிடங்கள் மற்றும் ராணுவக் கேந்திரங்கள் தாக்கப்படுகின்றன.

மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு, எவ்வளவுதான் நவீன ஆயுதங்களைப் பயன்



படுத்தி தாக்கினாலும் பயங்கரவாதிகள் தவிர சாமானிய மக்களும் மடியத்தான் செய்வார்கள். இதை ராணுவ நிபுணர்களே ஒப்புக்கொள்கிறார்கள்.

அப்படி பார்த்தால், பயங்கரவாதிகள் நியூயார்க்கில், உலக வர்த்தக கேந்திரத்தின் இரட்டைக் கோபுரங்களைத் தாக்கியபோது ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் தானே பலியாகின என்று அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் போக்கை நியாயப்படுத்தக் கூடும். உண்மைதான். ஆனால், கண்ணுக் கண், உயிருக்கு உயிர் என்று பழி வாங்குவதால் மேலும் மேலும் வன்மமும் துயரமும்தான் வளருமே தவிர அமைதி நிலவப் போவதில்லை.

என்னதான் குண்டு வீச்சைத் தொடர்ந்து உணவுப் பொருட்களும் மருந்துகளும் மூட்டை மூட்டையாக விமானங்களிலிருந்து மக்களுக்குப் போடப்பட்டாலும்கூட மடிந்த உயிர்கள் திரும்பாது; இழந்த கை கால்கள் குணமாகாது. "இது இஸ்லாமியருக்கு எதிரான யுத்தம் அல்ல; பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்தான்" என்று அமெரிக்காவும் பிரிட்டனும் திரும்பத் திரும்பச் சொல்கின்றன. ஆனாலும் தாக்குதலின் பின்விளைவாக இஸ்லாமிய நாடுகள் என்றும் கிறிஸ்துவ நாடுகள் என்றும் உலகம் பிளவுபட்டு விரோத பாவம் வளரும் என்ற அச்சம் இன்று பலரையும் ஆட்கொண்டிருக்கிறது.

உலக வர்த்தக கேந்திரமும் பென்டகன் கட்டடமும் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானபோது அமெரிக்கா பெற்ற உலகளாவிய அனுதாபம் இப்போது கரைந்து போய், சர்வதேச அளவில் வெறுப்புதான் மேலோங்கும்.

அமெரிக்காமீது நடந்த தாக்குதல்களுக்கு ஓசாமா பின்லேடன்தான் காரணம் என்று சாட்சியங்கள் கிடைக்கவே, அவரை நீதி விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா கேட்டது. இந்தக் கோரிக்கையை ஆஃப்கன் புரட்சி அமைப்பான தாலிபன் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒத்துழைக்க மறுத்ததோடு, பின்லேடனுக்குப் புகலிடமும் பாதுகாப்பும் அளித்து வருகிறது. இதன் பின்விளைவுதான் இன்றைய பயங்கர யுத்தம்.


இந்த யுத்தத்தின் விளைவாக இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் பாதிக்கப்படும். விலைவாசிகள் ஏறும். போரின் விலையாக இதனை நாம் ஒவ்வொருவரும் கொடுத்தாக வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை தேவைதான். ஆனால் இன்னும் சாதுர்யமாக அதனைச் செயல்படுத்தி வெற்றி காண ஜனநாயக நாடுகளிடையே திட்டமிட்ட, முழுமையான ஒத்துழைப்பு தேவை.

யுத்தம் சீக்கிரமே முடிவுக்கு வரவும் உலக அமைதி நிலவவும் அன்பு தழைக்கவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

- ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


வண்ணம்
தீட்டுங்கள்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in SriLanka